Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 30 சனிக்கிழமை (13.06.2015) பக்கங்கள் 20 ஓசை - 256

## தொண்டு நிறுவனங்களுக்கு கட்டுப்பாடு இனி இல்லை

(கொழும்பு)

தன்னார்வ தொண்டு நிறுவனங்களை பாதுகாப்பு அமைச்சு எதிர்வரும் காலங்களில் கட்டுப்புடுத்தாது என பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நிவாரணங்களையும், சேவைகளையும் வழங்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை எதிர்வரும் காலங்களில் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக கட்டுப்படுத்தப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சின் கீழ் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## இரட்டை வாக்குச்சீட்டு அறிமுகம் செய்ய வேண்டும்

### சிறுபான்மைக் கட்சிகள் விடாப்பிடி

(கொழும்பு)

இரட்டை வாக்குச்சீட்டு உபயோகிப்பதற்கான உரிமை வழங்கப்படாவிட்டால் 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவளிக்கப்போவதில்லை என சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகள் அறிவித்துள்ளன.

20ஆவது திருத்தம் தொடர்பில் 18 அரசியல் கட்சிகள், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்று முன்தினம் மாலை கூடி கலந்துரையாடல்களில் ஈடுபட்டன.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் ஹசனலி, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் எம்.சந்திரகுமார், நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், ஆர். யோகராஜன், செல்வம் அடைக்கலநாதன், பழனி திகாம்பரம், மேல் மாகாண சபை உறுப்பினர் மனோ கணேசன், ஜெ.சிறிதுங்க, வை.எல்.எஸ்.ஹமீட், எஸ்.அருள்சாமி, எஸ்.குகவரதன், நிசாம் காரியப்பர், குமரகுருபரன், சரத் அத்துகோரள்ள ஆகியோர் உட்பட

19 ஆம் பக்கம் பார்க்க

# தேர்தல் முறையில் மீள்திருத்தம்

## அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)

அரசியல் அமைப்பின் உத்தேச 20 ஆம் திருத்தத்தின் பிரகாரம் மாற்றியமைக்கப்பட்ட தேர்தல் முறைமையை மீள்திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த மீள்திருத்தத்தின் மூலம் ஏற்கனவே 225 ஆசனங்களாக இருந்த நாடாளுமன்ற ஆசனங்கள் 237 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

145 ஆசனங்கள் தொகுதி அடிப்படையிலும், மிகுதி ஆசனங்களில் 55 ஆசனங்கள் விகிதாசார அடிப்படையிலும், 37 ஆசனங்கள் தேசியப்பட்டியல் மூலமாகவும் நிரப்பப்படவிருக்கின்றன.

237 ஆசனங்களுடனான தேர்தல் முறை மாற்றம் குறித்த 20 ஆவது திருத்தத்துக்கு நேற்று அமைச்சரவை அனுமதியளித்துள்ளது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்ற விசேட அமைச்சரவை சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன்படி 225 ஆக காணப்படும் நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 237 ஆக அதிகரிக்கவுள்ளது. இந்த நிலையில் அமைச்சரவை அனுமதியுடன் குறித்த சட்டமூலம் வர்த்தமானியில் சேர்க்கப்படவுள்ளது.

ஏற்கனவே, புதிய தேர்தல் நடைமுறையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆகவே இருந்தது. அதில்

19 ஆம் பக்கம் பார்க்க

## நாமலிடம் விசாரணை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் இரகசிய பொலிஸார் நேற்று நான்கரை மணிநேரம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

காலை 9.00 மணிக்கு இரகசியப் பொலிஸ் பிரிவுக்கு ஆஜராகியிருந்த நாமல் அங்கிருந்து பிற்பகல் 1.30 மணிக்கே வெளியேறிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால

19 ஆம் பக்கம் பார்க்க

## மாத்தறையில் மகிந்த

(கொழும்பு)

மகிந்தவைப் பிரதமர் வேட்பாளராக்குவோம் எனும் தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மகிந்த சார்பு குழுவினரின் ஏற்பாட்டில் நேற்று மாத்தறை நகரில் நடைபெற்ற பேரணியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டுள்ளார்.

மகிந்த சார்பு குழுவின் ஐந்தாவது பொதுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதுவரை நடை

19 ஆம் பக்கம் பார்க்க

## நாடாளுமன்றம் விரைவில் கலைக்கப்படும்

(கொழும்பு)

நாடாளுமன்றம் அடுத்த வாரம அல்லது இன்னும் 10 நாட்களுக்குள் கலைக்கப்படும் என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## மாத்தறை கூட்டத்தில் முரளிதரன்

(கொழும்பு)


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து மாத்தறையில் நேற்று இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன் கலந்துகொண்டுள்ளார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் இவர் மாத்திரமே இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளார். இங்கு உரையாற்றிய

19 ஆம் பக்கம் பார்க்க

## மந்தகதியில் ஊழல் விசாரணை

### அஜித் பெரேரா சீற்றம்



(கொழும்பு)

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கைகள் குறித்து பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் மோசடிகள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கிரமமான விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க முடியாமைக்கு சில அரச நிறு வனங்களின் அசமந்தப் போக்கும் ஓர் ஏதுவாக அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


குற்றவாளிகளைக் கைது செய்ய முடியாமைக்கு சட்ட மா அதிபர் திணைக்களத்திடமிருந்து உரிய ஆலோசனை சரியான நேரத்திற்கு வழங்கப்படாமையேயாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் கெஸ்பேவ பிரதேசத்தில் 400 இலட்சம் ரூபா பெறுமதியான அதி சொகுசு வாகனமொன்று கண்டுபிடிக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

## படை அகன்றால் நல்லிணக்கம் மலருமா

### கேள்வியெழுப்புகிறார் விமல்



(கொழும்பு)

சம்பூரில் இருந்து இராணுவ முகாம்களை அகற்றியமை, வடக்கிலிருந்து தற்போது இராணுவத்தை வெளியேற்ற முயற்சிக்கின்றமை என்பதா நல்லிணக்கம் என கேள்வி எழுப்பினார் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து மாத்தறையில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன் கடந்த அரசாங்கத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புக்களின் தடையை நீக்குவது குறித்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, உலகத் தமிழர் பேரவை பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் மந்திராலோசனை நடத்தியுள்ளதாக அவர் இதன்போது தெரிவித்தார்.

எதிர்வரும் சில வாரங்களில் அந்த புலம்பெயர் அமைப்புகளை கொழும்பிற்கு அழைத்து வரப்பட்டு, பாரிய மாநாடொன்றையும் நடத்த நல்லாட்சி அரசாங்கம் முயற்சித்து வருவதாகவும் அவர் இதன்போது கூறினார். கடந்த ஜனவரி 8ஆம் திகதி

19 ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்றத் தாக்குதல் மேலும் 14 பேருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தின் மீது இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 59 பேர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இவர்களில் 14 பேரை பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது. ஏனைய 45 பேரையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க

19 ஆம் பக்கம் பார்க்க

# வீதி விதிமுறை மீறுவோர்க்கு விரைவாக சட்ட நடவடிக்கை

## யாழ்.போக்குவரத்து பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி போக்குவரத்து விதி முறைகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் படுவதுடன், நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படுவர் என யாழ்.பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரி ஐ. சீ.ஏ.கே.ஜெயவன்ஸ தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிளில் சிறுவர்களை முன்பக்கமாக அமர்த்திச் சென்றாலோ அல்லது தலைக்கவசம் இன்றி கூட்டிச் சென்றாலோ கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படுவர்.

தற்போது அதிகளவில் மோட்டார் சைக்கிள், ஆட்டோ விபத்துக்களாலேயே அதிக உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும், இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

தலைக்கவச பட்டி அணியாமல் செல்வோர், மற்றும் வீதிக் கடவைகளை புறக்கணிப்போர் என வீதி விதிமுறைகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# மீள் குடியேற்ற மீளாய்வு ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் - கிளிநொச்சி முஸ்லிம் மீள்குடியேற்ற மீளாய்வு சிவில் சமூக ஒன்றுகூடல் இன்று காலை 9 மணிக்கு யாழ்.பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் எம்.எம்.எம்.நிபாஹிர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் ஒன்றுகூடலில் பிரதேச செயலக வாரியான முஸ்லிம் மீள்குடியேற்றத்தின் தற்போதைய நிலைகள், மீள்குடியேற்றத்தில் காணப்படுகின்ற முக்கிய தேவைப்பாடுகள், காணி, வீடமைப்பு, தொழில் வாய்ப்புக்கள், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற துறைகளில் காணப்படும் தேவைப்பாடுகள் சமூக நிறுவனங்களின் பங்களிப்பும், சவால்களும் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

வடமாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் ஏற்பாட்டில் தகவல் வழிகாட்டல் மத்திய நிலையம் நடாத்துகின்ற அழைப்பாளர்கள் மட்டும் கலந்து கொள்ளும் இக்கலந்துரையாடல் குறித்த நேரத்தில் நடைபெறுவதுடன், எழுத்து மூல, வாய் மூல சமர்ப்பணங்கள் ஏற்றுக்கொள்ளப்படவும் உள்ளன.

இந்நிகழ்வின் இறுதியில் கலந்துரையாடலின் முடிவுகள் ஊடகங்களுக்கு தெளிவு படுத்தும் அமர்வும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

## கிளிநொச்சி மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் (வது)

## பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பம் கோரல்

பதவி :-பொதுமுகாமையாளர்-101 -11

(சுற்று நிருப இலக்கம் 4/2012ன் படி)

சம்பள அளவுத்திட்டம் 10450 100x10 110x10 12550 (66/2006 சுற்றுநிருபம்)

66/2006 இன்படி சேர்க்கவேண்டிய 10%

02/2015 (1) இன்படி சேர்க்கவேண்டிய 30%

உள்ளடங்கலாக

வாழ்க்கை செலவுப்படி ரூபா7800/- (05/2015சுற்று நிருபத்திற்கமைவாக வழங்கப்படும்)

தகமைகள்

அ). கூட்டுறவுப்பணியாளர் 12 ஆவ்து சம்பளத்திட்டப பதவியில் முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 03 வருடத்திற்கு குறையாத 03 ஆண்டுகால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் ஆகக்குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ).அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு சமமானது

அல்லது

இ). கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திர பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 01 வருட கால அனுபவம்/ க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 01 வருடம் சேவையாற்றிய அனுபவம்

வயதெல்லை 18 தொடக்கம் 45வரை

கூட்டுறவுச் சங்கங்களில் சேவையிலுள்ளோர்கள் சேவை செய்யும் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கலாம் விண்ணப்பங்கள் வயதெல்லை தேவையில்லை

விண்ணப்பங்கள் அனைத்தும் தங்களது சுயவிபரத்துடன் **தலைவர், கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் இணையம், ஏ9 வீதி கரடிப் போக்கு கிளிநொச்சி.** என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி. 25.06.2015**

இங்ஙனம்
கூட்டுறவு சேவையிலுள்ள
சி.முத்துக்குமார்
தலைவர். (C/3870) திகதி 12.06.2015

# மஹோற்சவ பெருவிழா

(வடமராட்சி)

பருத்தித்துறை, வியாபாரிமூலை, அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஆதிசிவ வீரபத்திர தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலய பிரதம குரு வாசுதேவ குருக்களின் தலைமையில் உற்சவ நிகழ்வுகளை திறம்பட மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உற்சவ நிகழ்வுகளின் 8 ஆம் நாளான 23 ஆம் திகதியன்று இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். அடியார்கள் அனைவரும் விழா வழிபாட்டு நிகழ்வுகளில் கலந்துகொண்டு பத்திரகாளி அம்பாளின் அருள்பெற ஆலய தர்மகத்தா சபை அழைப்பு விடுத்துள்ளது. (18)

# இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு அருள் வட்டத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. உயர் தர கலைப்பிரிவு, வணிகப்பிரிவில் கல்விகற்கும் மாணவர்களுக்கு வணிகவியல், பொருளியல் ஆகிய பாடங்களுக்கான கல் விக்கருத்தரங்கு இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 7.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை இக் கருத்தர்ங்கு இடம்பெறவுள்ளதுடன், இதில் பங்கு பற்றும் மாணவர்களுக்கு இலவசமாக கடந்த கால வினாவிடைப் புத்தகங்களும் வழங்கப்படவுள்ளன.

இவ் இலவச கருத்தரங்கு சட்டத்தரணி வே.தேவசேனாதிபதியின் அனுசரணையில் இடம் பெறுகின்றது.

# பாடசாலைக்கிடையேயான பண்ணிசைப் போட்டி

(கரணவாய்)

வடமராட்சி கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கிடையிலான பண்ணிசைப் போட்டி நிகழ்வுகள் இன்று காலை புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கதாப்பிரசங்கம், புராணபடனம் ஓதும் நிகழ்வுகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் 20 ஆம் திகதி கோலம் போடுதல், பண்ணிசைப் போட்டி நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக வடமராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் சி.சாந்தகுமார் தெரிவித்தார். (18)

# அனாதரவான மூதாட்டி மீட்பு

(யாழ்ப்பாணம்)

விஷயந்துகளின் மத்தியில் இரு கண்களும் பார்வையற்ற நிலையில் வாழ்ந்த 75 வயது மூதாட்டி ஒருவர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு கைதடி முதியோர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மாமூலை முள்ளியவளைப் பகுதியில் பற்றைக் காடுகளின் நடுவே புற்றுக்கள் நிறைந்த குடில் வீட்டில் அநாதரவாக உயிர் ஊசலாடிய நிலையில் வாழ்ந்த திருமதி மயில்வாகனம் சியாமளா (வயது - 75) என்ற மூதாட்டியின் 3 பிள்ளைகளில் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காணாமற்போயுள்ளார்.

இந்த நிலையில் அயலவர்களால் உணவு வழங்கப்பட்டுவந்த நிலையில் வாழ்ந்த பிரஸ்தாப மூதாட்டி இரு கண்களும் பார்வையிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

60 வயதிற்கு மேற்பட்ட, பிள்ளைகளால் கைவிடப பட்ட முதியோர்களுக்கு வாழ்வளித்து உன்னத சேவையை சமுதாயத்திற்கு வழங்கிவரும் கைதடி சாந்திய நிலையத்திற்கு இம்முதியோர் நாடி வரும் வகையில் பெற்றெடுத்த பிள்ளைகள் பெற்றோரை நடாத்தக்கூடாது.


இதேவேளை இம்மூதாட்டி தொடர்பில் உறவினர்கள் எவரேனும் இருந்தால் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் கிருபாகரன் தெரிவித்தார். (இ)




வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற சாம ஸ்ரீ விருது வழங்கும் நிகழ்வில் பிரபல சோதிடர் வீ.ஆ.சிவராசா விருதினை பெற்றுக்கொள்வதை காணலாம்.

# மாற்றத்துக்காக ஆதரவளித்த மக்களின் கேள்விகளுக்கு என்ன பதில்?

நடராஜா உதயகுமார்



மாற்றம் வேண்டும் என்ற புதிய – கவர்ச்சிகரமான வாசகத்தை நம்பி ஒரு எழுச்சி அலை ஜனவரியில் இலங்கையில் அடித்தது. மகிந்த ராஜபக்ஷவையும் அவருடைய ஆட்சியையும் ஏற்றுக்கொள்ள மறுத்தவர்களும் அதை எதிர்த்துக் கொண்டிருந்தவர்களும் ஒரு அணியாகத் திரண்டு மாற்றத்துக்கான அலையை உண்டாக்கியிருந்தனர்.

இதில் முக்கியமானதாக அல்லது கவர்ச்சிகரமாக இருந்தது 100 நாள் வேலைத்திட்டமாகும். இந்த 100 நாள் வேலைத்திட்டத்தை வாசித்தவர்களுக்கு ரஜினிகாந்தின் அருணாசலம் படத்தின் நினைவே வந்திருக்கும். அல்லது அர்ஜுனின் முதல்வன் படம் நினைவில் வரலாம். அருணாசலத்தில் 100 கோடி ரூபாயையும் ஒரே நாளில் ரஜனிகாந்த் செலவு செய்து சாதனை புரிவார். முதல்வனில் ஒரு நாள் ஆட்சியில் முதல்வராக இருந்து கொண்டு அசுர சாதனைகளைச் செய்து அரசியல் வரலாற்றைப் புரட்டிப்போடுவார்.

இந்தமாதிரியான ஒரு சாதனைக்கான பட்டியலே 100 நாள் வேலைத்திட்டம். இந்த வேலைத்திட்டத்தில் நடந்தவையும் உண்டு. நடக்காமல் விடப்பட்டுள்ளவையும் உண்டு. நடக்கவே முடியாதவை என்றவையும் உண்டு.

எப்படியோ 100 ஆவது நாள் புதிய அரசாங்கம் – அதாவது மாற்றத்துக்கான அரசாங்கம் கலைக்கப்பட்டு, புதிய அரசாங்கத்துக்கான நாடாளுமன்றத் தேர்தல் நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அது நடக்கவில்லை. இப்போதைக்குப் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கான அறிகுறிகளும் இல்லை. இந்தா இன்று கலையும். நாளை கலையும் என்றமாதிரியான எதிர்பார்ப்புகள் உள்ளனவே தவிர, மெய்யாகவே நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான களச் சூழல் இன்னும் ஏற்படவில்லை. இதனால் 100 நாள் வேலைத்திட்டத்துக்கு அப்பால் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் 'மாற்றத்துக்கான அரசாங்கம்' உள்ளது.

இதற்கிடையில் மக்களுக்கும் நாட்டுக்கும் என்ன செய்ய வேண்டும் என்று சிந்திப்பதற்குப் பதிலாக அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் எப்படித் தமக்கான வெற்றி வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள முடியும் என்று அதிவேகமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றன அரசியற் கட்சிகள். இரவு பகலாகப் பதற்றத்திலும் பகற் கனவுகளிலும் மிதக்கிறார்கள் அரசியற் தலைவர்கள்.

ஜனாதிபதித்தேர்தல் களம் உருவாக்கிய வாய்ப்பை வைத்துக் கொண்டு பலமாக இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் உடைத்துப் பலவீனமாக்கும் முயற்சியில் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தனைப் போல முயன்று கொண்டிருக்கிறார் ரணில்.

இதுவரையிலான முயற்சியில் அவருக்கு ஓரளவுக்கு வெற்றி கிட்டியுள்ளது. கிடைக்கின்ற தகவல்களின் படியும் நிலைமைகளை அவதானிக்கும்போது புரிந்துகொள்ள முடிகின்றபடியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலும் வெடிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறார் ரணில்.

ரணிலைப் பொறுத்தவரை தன்னையும் தன்னுடைய தரப்பான ஐ.தே.க.வையும் பலப்படுத்துவதை விட பலமாக இருக்கும் தரப்புகளைப் பலவீனப்படுத்துவதையே தன்னுடைய மூலோபாயமாகக் கொண்டிருப்பவர். முன்னர் அவர் புலிகளை உடைத்ததை இங்கே நாம் நினைவிற் கொள்ளலாம்.

சிலர் சிறிய கோட்டுக்குப் பக்கத்தில் பெரிய கோட்டைப் போடுவார்கள். சிலரோ பெரிய கோட்டுக்குப் பக்கத்தில் சிறிய கோட்டைப் போடுவார்கள். ரணில் இதில் இரண்டாவது ரகம்.

என்னதான் நடந்தாலும் – அதாவது மாற்றத்துக்கான அலை எதைத்தான் புரட்டிப் போட்டாலும் இன்னும் மகிந்த ராஜபக்ஷ தொடர்பாக அச்சக் காய்ச்சல் இலங்கை அரசியலில் இருந்து முற்றாக நீங்கி விடவில்லை. மூன்றாவது அணியொன்றை திரட்டக் கூடிய நிலையில் மகிந்தவும் அவருடைய ஆதரவாளர்களும் இருப்பதாக அவதானிகள் குறிப்பிடுகிறார்கள். நிலைமையும் அப்படித்தான் உள்ளது.

இந்த மூன்றாவது அணியைப் பற்றிய அச்சமே – மகிந்த ராஜபக்ஷவின் மீள்வருகையைப் பற்றிய பயமே இப்பொழுது மாற்றத்துக்கான அரசாங்கத்தையும் 100 நாள் வேலைத்திட்டத்தின் போதாமைகளையும் நாடாளுமன்றத்தின் நீட்சியையும் பொறுத்துப்போக வைத்திருக்கின்றன.

'எதிர்த்தரப்புக்குச் சகுனம் பிழைக்க வேண்டும். அதற்காகத் தமது மூக்குச் சேதமானாலும் பரவாயில்லை' என்று எண்ணும் ஆட்கள் இப்பொழுது நாட்டில் கூடிக்கொண்டு வருகிறார்கள்.

இப்படியான ஆட்கள் இப்பொழுது மைத்திரி ஆட்சியை நியாயப்படுத்த முனைகிறார்கள். மைத்திரிக்கோ ரணிலுக்கோ நெருக்கடிகளைக் கொடுக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். புதிய அரசாங்கத்துக்குக் கால அவகாசம் தேவை என்று வக்காளத்து வேறு வாங்குகிறார்கள். இந்த அரசாங்கத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் நலன்கள் எந்த வகையில் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன? சிறுபான்மைச் சமூகங்களின் பாதுகாப்பும் கௌரவமும் அவர்களுடைய அடிப்படை உரிமைகளும் எந்த அளவுக்கு முன்னிலைப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டிருக்கின்றன? என்று யாராவது சொல்ல முடியுமா?

இப்படிக் கேட்பதன் அர்த்தம் முன்னைய மகிந்த ராஜபக்ஷ ஆட்சியும் அவருடைய நடவடிக்கைகளும்தான் சரி என்று வாதிடுவதற்காக அல்ல. நம்மை நாமே பொய்யான நம்பிக்கைகளில் கட்டி வைத்துக் கொள்ளக் கூடாது. கனவுகளும் கற்பனைகளும் நம்மை ஈடேற்ற வேண்டுமே தவிர, நம்மை அவை சிறைப்பிடிக்கக் கூடாது என்பதற்காகவே.

**மாற்றத்துக்கான அலை நம்மை எங்கே அடித்துச் செல்கிறது?**

## சனசமூக நிலையங்களுக்கான உதவிகளை வழங்க கோரிக்கை

(வடமராட்சி)

தமது பகுதி சனசமூக நிலையங்களுக்கான உதவி நன்கொடைகள் இதுவரை கிடைக்கவில்லையென வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 98 சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சிறப்பான செயற்பாட்டை கொண்டுள்ள நிலையங்களை ஊக்குவிக்க இந்த நன்கொடை உதவி மிகவும் அவசியமானதென இந்தநிலையங்களின் சமாச பிரதிநிதிகளின் சந்திப்பில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

வடமராட்சிப் பகுதி சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள் திருப்திகரமான நிலையில் உள்ளன.

இவற்றை மென்மேலும் ஊக்குவிக்க நிதி உதவிகள் அவசியம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டுமென சமாசத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த சனசமூக நிலையங்கள் அவசியம் முன்னெடுக்கவேண்டிய திட்டங்களை கவனத்தில் கொண்டு தேவையான நிதியை வடக்கு மாகாண நிர்வாகம் உரிய காலத்தில் வழங்கி உதவ வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (18)

## காதலனால் ஏமாற்றப்பட்ட யுவதி அச்சுவேலி நகரில் பரிதவிப்பு

(யாழ்ப்பாணம்)

தனது காதலனால் ஏமாற்றப்பட்ட பெண்ணொருவர் பஸ்ஸிலிருந்து இறக்கிவிடப்பட்ட சம்பவமொன்று அச்சுவேலி நகரில் இடம்பெற்றுள்ளது. வேலணை பிரதேசத்தை சேர்ந்த பெண்ணொருவரே இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டிருந்தாத தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் யாழ்.பஸ் நிலையத்தில் குறித்த நபரை சந்தித்த பிரஸ்தாப யுவதி அவருடன் உணவகமொன்றில் தேநீர் அருந்தியதாக நெல்லியடி பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

பின்னர் நெல்லியடியில் உள்ள தனது வீட்டிற்கு தன்னுடன் வருமாறு கூறி தன்னை பஸ்ஸில் அழைத்துச் சென்றதாகவும் இடை நடுவில் மயக்கமடைந்த நிலையில் அச்சுவேலி நகரில் தான் இறக்கி விடப்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார்.

குறித்த நபருடன் தொடர்பெதனையும் ஏற்படுத்திக் கொள்ள முடியாத நிலையில், இரவு 11 மணிவரை அச்சுவேலி நகரில் காத்திருந்ததாகவும் தனது பொலிஸ் முறைப்பாட்டில் யுவதி கூறியிருக்கிறார். எங்கு செல்வதென தெரியாத நிலையில் இந்த யுவதி வடமாரட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஏ.இராசையா பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். (18)

## மூத்த பிரஜைகளுக்கான பணம் 2 மாதமாக வழங்கப்படவில்லை

புதிய அரசின் திட்டத்தின் கீழ் 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு ரூபா 2000 வழங்குவதற்காக கிராம உத்தியோகத்தர்களினால் சிபார்சு செய்து வழங்கப்பட்ட அட்டைகளுக்குக் கடந்த இரண்டு மாதமாகப் பணம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்த உதவிப் பணமாகத் தபால் நிலையங்களில் இப்பணம் கொடுக்கப்படுவதாக இருந்தது. ஆனால் திறைசேரியிலிருந்து பணம் வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டு தபால் நிலைய அதிகாரிகளினால் மூத்த பிரஜைகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலிருந்தும் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் இனம் காணப்பட்டு இப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காகக் கிராம சேவகரினால் அவர்களுக்கு அட்டை வழங்கப்பட்டிருந்தது. சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகம் இவ்வட்டையைக் கிராம உத்தியோகத்தர்கள் மூலம் வழங்கியிருந்தது.

பணம் பெறுவதற்கான அட்டைய்யை வைத்துக்கொண்டு இம் முதியோர்கள் ஏக்கத்துடன் காத்திருக்கின்றனர். வயோதிப காலத்தில் தாங்கள் ஏமாற்றப்படாமல் அரசினால் தரப்படும் இம் மாதாந்த உதவியை விரைவில் தந்துதவுமாறு அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (137)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை மாலயவத்தை குடுபனை ஞானவைரவர் தேவஸ்தான புனராவர்த்தன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை காலை 08.15 முதல் 10.10 வரையான சுபமுகூர்த்தத்தில் இடம் பெறவுள்ளது.

நேற்று காலை கிரயைகள் ஆரம்பமாகி இடம்பெற்று வரும் இவ்வேளையில் இன்று காலை 9 மணி முதல் நாளை மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்காப்பு சாத்துதல் இம்பெறவுள்ளதுடன் மறுநாள் திங்கட்கிழமை கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

பிரதிஷ்டா பிரதம ஆலய குரு வேதசிவாகம திலகம் பிரம்ம ஸ்ரீ கை.கிருஷ்ணகுமாரக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நாடாத்திவைப்பார்.

நல்லை ஆதின சிவாச்சாரிய பண்டிதர் பிரம்ம ஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் இக் கும்பாபிஷேகத்திற்கு அருளாசி வழங்குவதுடன் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வன் கலாநிதி ஆறு திருமுருகன் ஆசியுரையும் வழங்கவுள்ளனர். (இ)

நீ தொடங்கும் போது தூற்றியவர்கள் முடிக்கும்போது மாலை சூடுவார்கள். - அன்புவழியூர் கவிராயர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ஒரு பொல்லாப்புமில்லை...!

தமிழ்மக்களிடம் வளர்ந்து கிளைவிட்டுள்ள மாற்று இனவெறுப்பையும், மக்களிடம் இயல்பாகவே உள்ள மறதியையும் பயன்படுத்தியே அரசியல் செய்துகொண்டிருப்பவர்கள் அப்படியே மாறாமலேதான் இருக்கிறார்கள்.

எனவே நாமும் சில விஷயங்களை திரும்பத் திரும்ப ஞாபகப் படுத்துவதை விடாமல் தொடரவேண்டியிருக்கிறது.

2010 நாடாளுமன்ற பொதுத் தேர்தலிலும் 2012 கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலும் தமிழ்மக்கள் ஒற்றுமையாகத் தங்களுக்கு வாக்களிக்க வேண்டியதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சொல்லிய வாக்குறுதியானது, தேர்தல் முடிவு தெரிந்தவுடன் சர்வதேசம் தீர்வுடன் வந்திறங்கும் என்பதாகும்.

தேர்தல் மேடைகளில் தலைவர் சம்பந்தனிலிருந்து சர்வதேசத்தின் திசைகூட அறியாத சில்லறை வேட்பாளர் வரை, தேர்தலில் தமிழ்மக்களின் வாக்களிப்பை அந்தச் சர்வதேசம் வலு உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்பதாக அடித்துப் பேசியதை தமிழர்கள் எல்லோருமே கேட்டுக் கிறுகிறுத்தார்கள்.

தமிழர்கள் வாக்குகளை அள்ளிப்போடத் தலைவர்கள் வென்றார்கள். சர்வதேசமும் வந்தது போனது; தலைவர்களும் போனார்கள் வந்தார்கள்; இவர்கள் நிலைமைகளை விளக்கிச் சொன்னார்கள்; அவர்களும் 'உன்னிப்பாக'க் கேட்டறிந்து கொண்டார்கள்.

தீர்வு மட்டும் எப்பனும் அரக்கவில்லை. "உங்கள் அரசாங்கத்தோடு பேசுங்கள்; 13 இலிருந்து பேசுங்கள்..." என்று பாந்தமாக அவர்கள் சொல்லிவிட்டுப் போனதை, ஒன்றும் காதில் கேளாத மாதிரியே இவர்கள் நடந்து கொண்டார்கள்.

ஆத்தாக்கடைசியில் மாவையார் மட்டும் வெள்ளந்தித்தனமாக, "சர்வதேசமும் நம்மை ஏமாற்றிவிட்டது; சாத்வீகப் போராட்டத்தில் குதிப்பதுதான் நமக்குள்ள வழி" என்று தீர்வைப் பற்றி ஆராவது நினைவூட்டும் போதெல்லாம் ஆக்ரோசமாக முழங்கத் தொடங்கினார்.

2013-ல் வடக்கு மாகாண சபைத் தேர்தல் வந்தபோது, 'சர்வதேச அழுத்தம்' கதை மெல்ல அமுங்கி, "தமிழரசு மலரப் போகிறது; படையினரை விரட்டவும், நிலங்களைச் சொந்தமாக்கவும், பிரதேச அபிவிருத்திக்கும் வாக்குகளை அளியுங்கள்" என்றார்கள்.

மக்களும் அள்ளிப் போட, "மலர்ந்தது தமிழர் அரசு" என்று கொட்டை எழுத்துச் செய்தி போட்டுக் கொண்டாடினார்கள். வென்றபிறகு வழமைபோலவே இவர்கள் சொந்த அலுவல்களுடன் இருந்தார்கள்; மக்கள் அதே பழைய நிலைமைகளுடன் இருந்தார்கள்.

இந்த ஆண்டு ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல் வந்தது. "ஆட்சியை மாற்றுகிறோம்; தேசிய நிறைவேற்றுச் சபையை அமைக்கிறோம்; 2015-ல் நிச்சயம் தீர்வு" என்று அடித்துச் சொல்லி வாக்குக் கேட்டார்கள்.

இதோ பாதி வருசம் முடிந்துவிட்டது. தீர்வைப் பற்றி ஒரு கதையும் இல்லை. ஆனால் அடுத்த பொதுத் தேர்தலுக்கும் மக்களை உணர்ச்சிவசப்பட வைக்கும் வாக்குறுதிகள் அவர்கள் வசமிருக்கிறது.

பழக்க தோஷத்தில் இரா.சம்பந்தன் அவர்கள் சிலநாட்களுக்கு முன், "வரப்போகும் தேர்தலை சர்வதேசம் உன்னிப்பாக அவதானிக்கிறது" என்று சொல்லியும் விட்டார். ஆனாலும் அது மக்களிடம் சிரிப்பை வரவைக்கிறது என்று அவரிடம் சொல்லியிருக்கிறார்கள்.

எனவே, "மைத்திரி-ரணில் வென்றால் 2016க்குள் தீர்வை வைப்பதற்கு ஒப்பந்தம் போட்டுவிட்டோம்; நீங்கள் ஒற்றுமையைக் காட்டுங்கள்" என்ற முழக்கத்தோடு வருவார்கள்.

என்ன மாதிரியான தீர்வுக்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்? எப்படித் தரப்போகிறார்கள்? என்பதையெல்லாம் வெளியே சொன்னால் தெற்கில் அது மகிந்த அணியின் பிரச்சாரத்திற்கு வாய்ப்பாகிவிடும் என்பதால் அதையெல்லாம் கேட்டுக் குட்டையைக் குழப்பாமல் தமிழர்கள் வாக்களித்து விடுவார்கள்.

அதன்பிறகு மைத்திரி-ரணில் வென்றாலும், பலமான எதிர்க்கட்சியாக மகிந்த அணி வந்துவிட்டால், தீர்வைக் கேட்டுக்கொண்டிருப்பது நமது ஆட்சியை நாமே வீழ்த்த வாய்ப்புக்கொடுத்தது போலாகிவிடாதா?

தமிழ்மக்கள் புரிந்துகொள்வார்கள். எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேண்டியதே எல்லாவற்றிலும் பார்க்க முக்கியம் என்பது அவர்களுக்குத் தெரியும்!

- ஆசிரியர்

# நல்லிணக்கத்தின் அடித்தளத்திற்கு இனங்களின் ஒற்றுமை அவசியம்

## ஜனாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

நல்லிணக்கத்தின் வலுவான அடித்தளத்திற்கு அனைத்து இனங்களும் ஒன்றிணைந்து தொழிற்படுவது அவசியம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு - 3 இல் அமைந்துள்ள புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார். பாடசாலையின் 75 ஆவது ஆண்டின் நிறைவாக நிறுவப்பட்ட நினைவுச் சின்னத்தை ஜனாதிபதி திரை நீக்கம் செய்து வைத்தார்.

சமூகங்களிடையில் ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும் வாழ்வதை, பிள்ளைகளிடையே அறிமுகப்படுத்துவதே நல்லிணக்கத்தின் ஆரம்ப கட்டமாகும்.

நல்லிணக்கத்தின் இந்த கட்டமைப்பை மதங்கள் மற்றும் இனங்களிடையே உருவாக்க வேண்டும். மேலும் இந்த முறையில் சமூகங்களிடையே நல்லிணக்கத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# பாடசாலை சேவையிலீடுபடும் வாகனங்கள் தரப்பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்களப் பிரிவின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்களை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபடும் வாகனங்களை தரக்கட்டுப்பாட்டு பரிசோதனை செய்யும் நடவடிக்கை யாழ்.பொதுநூலகத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்றது.

மோட்டார் போக்குவரத்து திணைக்கள யாழ். மாவட்ட பரீட்சகருடன் பொலிஸார் இணைந்து மாணவர்களை ஏற்றி இறக்கும் முச்சக்கரவண்டிகள், வான்கள், பஸ்கள், என்பவற்றை தரக்கட்டுப்பாடு செய்தனர்.

முச்சக்கரவண்டியிலுள்ள தேவையில்லா கண்ணாடிகள், தேவையற்ற அலங்கரிப்புக்கள், அநாவசியமான படங்கள் ஒட்டப்பட்டுள்ளமை, வான்கள், பஸ்களின் இருக்கைகள், கதவுகளின் உறுதித்தன்மை, கண்ணாடிகள் உடைந்த நிலையில் இருக்கின்றனவா? கம்பிகள் உக்கியுள்ளதா? உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது பரிசோதிக்கப்பட்டது.

அத்துடன், வாகனங்களில் விளக்குகள், சமிக்ஞை விளக்குகள் உள்ளிட்டவையும் சோதிக்கப்பட்டன.

குறைகள் இனங்காணப்பட்டவர்களுக்கு அதனைச் சீர்செய்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த கால அவகாசத்துக்குள் அதனைச் சீர்செய்யத் தவறின் மாணவர்களை ஏற்றியிறக்கும் சேவையில் அந்த வாகனங்கள் ஈடுபடமுடியாது என பரீட்சகர் கூறினார்.

## பொலிஸ் நிதிமோசடி தவிர்ப்பு விசாரணைப்பிரிவுக்கு எதிராக மனு

(கொழும்பு)

பொலிஸ் நிதி மோசடி தவிர்ப்பு விசாரணை பிரிவிற்கு எதிராக பேராசிரியர் காலோ பொன்சேகா மற்றும் எல்லே குணவஞ தேரர் உள்ளிட்ட தரப்பினர் தாக்கல் செய்த மனு ஒன்று நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொலிஸ் நிதி மோசடி தவிர்ப்பு பிரிவு சட்டரீதியற்றது எனக் கூறி இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனுவின் பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட தரப்பினர் பெயரிடப்பட்டுள்ளனர்.

பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை விடுக்கப்படுவதற்கு முன்னர் சட்டமா அதிபரிடம் இது தொடர்பில் விளக்கம் கோர வேண்டும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் இதன்போது தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# சட்டத்தை நடைமுறைப்படுத்த மொழிப்பிரச்சினை தீர்க்கப்படும்

## நீதியமைச்சர் தெரிவிப்பு

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் வடக்கு, கிழக்கில் காணப்படும் மொழிப் பிரச்சினையை தீர்ப்பதற்கு விசேட அவதானம் செலுத்தி தற்போதைய அரசாங்கம் செயற்படுவதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் நீதிமன்றத்தின் மீதான நம்பிக்கை தொடர்பில் மக்களுக்கு பாரிய சிக்கல்கள் காணப்பட்டன.

நீதிமன்றம் மக்களுக்காகவே இருக்கின்றது. கடந்த காலங்களில் நீதிமன்ற வசதிகள், தேவைகள் தொடர்பில் பிரச்சினைகள் இருக்கவில்லை.

எனினும், தற்போது நீதிமன்றத்தின் மீதான நம்பிக்கை குறித்து மக்களுக்கு பெரும் சிக்கல் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் 142 பேர் உயர்தரம் சித்திபெறவில்லை

### கபே அமைப்பு தகவல்

நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்களில் 142பேர் கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் கூட சித்தியெய்தவில்லை என்று கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை தாம் அடையாளம் கண்டுள்ளதாக கபே அமைப்பின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார். அரசியல் அமைப்பு சபைக்கு பிரேரிக்கப்பட்டுள்ள சர்வோதயத்தின் தலைவர் ஏ.டி.ஆரியரட்ன, ஐக்கிய நாடுகளின் முன்னாள் இராஜதந்திரி ராதிகா குமாரசுவாமி மற்றும் முன்னாள் நீதிபதி சலாம் ஆகியோரின் தகுதிகள் குறித்து அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கேள்வி எழுப்பியிருந்தார்.

இது தொடர்பில் கருத்துரைக்கையிலேயே தென்னக்கோன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தகுதிகள் பற்றி தெரிவித்துள்ளார்.

இவ்வாறானவர்கள் நாடாளுமன்றத்துக்கு வருவதன்மூலம் குற்றச்செயல்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## விதவைகளை வலுவூட்டுவதற்கான கருத்திட்ட பிரேரணைக்கு அங்கீகாரம்

(கொழும்பு)

விதவைகள் மற்றும் வீட்டுத்தலைவிகளாக உள்ளபெண்களை வலுவூட்டுவதற்கான கருத்திட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. மகளிர் அலுவல்கள் அமைச்சர் கே.டி.எம்.சந்திராணி பண்டார இந்தப் பிரேரணையை சமர்ப்பித்திருந்தார். நேற்றுமுன்தினம் இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இலங்கை சனத்தொகையில் 51 சதவீதத்துக்கு மேற்பட்ட பெண்கள் இருக்கின்றனர். அதில் 23 சதவீதமானோர் யுத்தத்தினால் விதவையாக்கப்பட்டுள்ளனர் என்று இனங்காணப்பட்டுள்ளனர்.

நாட்டின் அபிவிருத்தி செயற்பாட்டின் போது அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ள இப்பிரிவினருக்கு முன்னுரிமைகள் வழங்கி செயற்படுவது அத்தியாவசியமானதாகும்.

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம் பொலன்நறுவை ஆகிய மாவட்டங்களிலும் இந்த கருத்திட்டம் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை போரை எப்படி வெற்றி கண்டது - 2

(நேற்றைய தொடர்ச்சி)

ஈழப்போர் 4இன் ஆரம்பத்தில் எல்.ரீ.ரீ.ஈயினால் நாடு பூராவும் இயங்கக் கூடியதாக இருந்தது. வெளிவிவகார அமைச்சர், பாதுகாப்புச் செயலாளர், பாகிஸ்தான் தூதுவர் மற்றும் இராணுவ தளபதி போன்றவர்களுக்கே தற்கொலைத் தாக்குதல்களில் இருந்து தப்புவதற்கு பாதுகாப்பான பின்புற பகுதிகள் இருக்கவில்லை. இந்த் செயற்திறனை எதிர்ப்பதற்கு ஆயுதப் படைகள் மற்றும் காவற்துறையினரை உள்ளக பாதுகாப்பு பணிகளில் பயன்படுத்துவதை விரிவாக்கியும் மற்றும் ஆயுதம் தாங்கிய கிராமவாசிகளை கொண்டு சிவில் பாதுகாப்பு படை என்று உருவாக்கியும் பதிலடி கொடுக்க வேண்டியிருந்தது. தலைநகர் மற்றும் சில பிரதான நகரங்களில் இயங்கும் எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாத சிறு குழுக்களை கண்டுபிடித்து அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆழமான இந்தப் பாதுகாப்பு, தலைவர்களை அழிக்கும் தாக்குதல்கள் மற்றும் பலவீனமான பொதுமக்கள் இலக்குகள் மீது நடத்தப்படும் பயங்கரவாத தாக்குதல்கள் போன்ற இரண்டையும் நடத்துவதில் வல்லவர்கள் என நிரூபிக்கப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ யின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தியது. நாட்டின் தெற்கிலும் மேற்கிலும் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகளின் உறுதியால், வடக்கிலும் கிழக்கிலும் உள்ள எதிரிகள் மீது இலங்கை இராணுவம் அதிக கவனத்தைச் செலுத்த உதவியது. எல்.ரீ.ரீ.ஈ மீது தாக்குதல் நடத்தி அவர்களை தற்காப்பின் மீது கவனம் செலுத்த கட்டாயப் படுத்தியது. எல்.ரீ.ரீ.ஈயின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்கள் ஒரே நேரத்தில் பலமுனை தாக்குதல்களுக்கு இலக்காகி, அவர்களின் நடவடிக்கைகளை மட்டுப்படுத்தி அவர்களை நலிவடையச் செய்தது. இந்த தந்திரோபாயமான நன்மைகள் இராணுவத்தின் புதிய எண்ணிக்கையை பல மடங்காக உயர்த்தியது. இந்த நடவடிக்கைகளில் சிறிதாக, நன்கு ப்யிற்றப்பட்ட, நகரும் குழுக்கள் முக்கியமானவை என நிரூபித்தன. இந்தக் குழுக்கள் எல்.ரீ.ரீ.ஈயின் முன்னரங்குகளுக்குப் பின்னால் ஊடுருவி உயர் மதிப்புள்ள இலக்குகளைத் தாக்கியதுடன், நேரத்துக்குரிய உளவுத் தகவல்களை வழங்கி எல்.ரீ.ரீ.ஈயின் மீள் விநியோக வழிகள் மற்றும் தொடர்பாடல்களுக்கும் இடையூறு விளைவித்தன. இக்குழுக்களுக்கு நன்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு, தற்காப்பை மேற்கொள்ளும் எல்.ரீ.ரீ.ஈ பிரிவுகள் மீது துல்லியமான வான், பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்களுக்கு அழைப்பு விடுக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டது. நேரடி மற்றும் ஆழ ஊடுருவற் தாக்குதல்கள் இணைந்ததின் காரணமாக எல்.ரீ.ரீ.ஈ அதன் சுதந்திரமான நகர்வுகளை இழந்து ஓரிடத்தில் நிலை நிறுத்தப்பட்டதுடன் விரிவாகத் தோற்கடிக்கவும் முடிந்தது.

ஆழ ஊடுருவி செயற்படுதல் மற்றும் தனித்துவமான ஒரு இலங்கைக் கண்டுபிடிப்பான சிறு சிறு குழுவான விசேட படைகள் உட்பட நன்கு பயிற்றப்பட்ட விசேட காலாட்படை செயற்பாட்டு பிரிவு (எஸ்.ஐ.ஓ.ரி) ஒருங்கிணைவுடன் செயற்பட்டது. இந்த 10,000 வலுவான விசேட படைகள், எல்.ரீ.ரீ.ஈயின் இராணுவ தலைமை இலக்குகள் மீது தாக்குதல் நடத்தவும், அனுபவம் வாய்ந்த தளபதிகளை அழிக்கவும் மற்றும் நெகிழ்வற்ற அதிகாரப்படி நிலை அமைப்பில் கணிசமானளவு இடையூறுகளை ஏற்படுத்தவும் திறன் வாய்ந்தவை என்பதனை நிரூபித்தன. இந்த எஸ்.ஐ.ஓ.ரி யின் இராணுவ தளபதி ஜெனரல் பொன்சேகா அறிமுகப்படுத்திய கருத்து குறிப்பிடுவது: 'நாங்களும் நான்கு பேர் குழுக்களாகப் போரிட்டோம்.... காடுகளில் ஆழ ஊடுருவி செயற்பட பயிற்றப்பட்டு.... சுய நம்பிக்கையுடன் சுதந்திரமாக

**ஈராக், ஆப்கானிஸ்தானுடன் ஒப்பிடுகையில் இலங்கை யுத்தம் தீர்க்கமான வெற்றி என்பதைக் குறிப்பிட்டுக் கூற முடியும். ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் வெற்றி என்பது கிடைக்கவில்லை, அங்கு சமாதானம் தோன்றவில்லை மற்றும் மக்கள் தொடர்ந்து மரணித்து வருகிறார்கள்.**

**பீற்றர் லேயிற்றன்**

செயற்பட்டு போரிட்டோம். நான்கு பேரைக் கொண்ட இச்சிறு குழுக்கள் பெரும் எண்ணிக்கையில் இருந்தன, அது எங்களை பரந்த முன்னணியில் செயற்பட அனுமதித்தது'. ஈழப்போர் 4 ஆரம்பித்தபோது 1500 பயிற்றப்பட்ட எஸ்.ஐ.ஓ.ரி துருப்புக்கள் இருந்தனர் 2008ல் அதில் 30,000 க்கும் மேற்பட்டவர்கள் அங்கம் வகித்தன்ர். சிக்கலான காடுகளில் போராடும் நடவடிக்கைகளுக்கான பயிற்சி விரிவாக்கப்பட்டதும் இலங்கை வீரர்கள் திறமையானவர்களாக, தொழில் முறை தெரிந்தவர்களாக, மிகவும் நம்பிக்கை உள்ளவர்களாக மாறினார்கள். இராணுவத்தால் இப்போது இரவோ பகலோ எதுவானாலும் ஒரு உயர்வான வேகத்துடன் அதிகம் கடினமான பணிகளை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது. தந்திரமட்டத்தில் முயற்சிகளையும் மற்றும் புதுமைகளையும் தழுவிய ஒரு கற்றல் அமைப்பாக மாறியிருந்தது. உலகளாவிய கிளர்ச்சிக் குழுக்களிடையே எல்.ரீ.ரீ.ஈ தனித்துவமான ஒன்றாகத் திகழ்ந்தது, அதனிடம் ஒரு திறமையான கடற்படையும் இருந்தது, அது அரசாங்க கடலோர கப்பல்கள் மற்றும் கடல்வழி தளபாடபோக்குவரத்து என்பனவற்றை தடை செய்யும் இரண்டு பிரதான பணிகளை ஆற்றி வந்தது. எல்.ரீ.ரீ.ஈ இரண்டு வகையிலான சிறிய வேகப் படகுகளை உருவாக்கியிருந்தது: கண்ணாடி இழையிலான மேலோடு, இயந்திர துப்பாக்கிகள், எறிகுண்டு வீசிகள் போன்ற தாக்குதல் ஆயுதங்கள் பொருத்தப்பட்ட படகுகள் மற்றும் குறைவான வேகத்திலான பெருமளவு வெடி குண்டுகள் ஏற்றப்பட்டு தொடர்புடன் இணைக்கப்பட்ட ஆயுதமயமான தற்கொலைப் படகுகள் என்பனவே அந்த இரண்டு வகை.

ஈழப் போர் 4இல் சுமார் 30 தாக்குதல் படகுகள் மற்றும் 8 - 10 தற்கொலைப் படகுகள் உள்ளூர் ரோலர்களுடன் கலந்து திரளாகப் பயன் படுத்தப்பட்டன. இவைகளை இறுதியில் அரசாங்கத்தின் 60 - 70 பெரிய அதிவேக தாக்குதல் படகுகள் திரளாக வந்து எதிர் தாக்குதல் நடத்தி தோற்கடித்தன, இவை அமெரிக்க கட்டுப்பாட்டின் கட்டளையில் இயங்கும் சுமார் 20 கரையோர ரேடார்கள் வழங்கும் தகவல்களைப் பயன்படுத்தி தாக்குதல்களை நடத்தின. கடல் போக்குவரத்து செயற்பாடுகளுக்காக எல்.ரீ.ரீ.ஈ பதினொரு சரக்கு கப்பல்களைப் பயன்படுத்தின, அவை உலகெங்கிலும் இருந்து கொள்வனவு செய்யப்படும்

படைகளை கண்மூடித்தனமாகவும் கொடூரமாகவும் பயன்படுத்தியதால் மாத்திரம்தான் இலங்கைக்கு இந்த வெற்றி சாத்தியம்ானது என்று சிலர் விமர்சிக்கிறார்கள். யுத்தங்கள் என்பது அதன் இயல்பில் கொடூரமானதும் வன்முறையானதும் ஆகும் அதில் பிரவேசிப்பதோ அல்லது அதனை தொடர்வதோ எளிதான ஒன்றல்ல. இந்தக் கட்டுரையில் விவாதிக்கப்பட்டிருப்பது மிகவும் வெற்றிகரமான உத்திகளினால்தால் வெற்றி அரசாங்கத்துக்கு கிடைத்தது என்று - ஆயி-னும் கூட அந்த உத்திகளை கண்டு பிடிப்பதற்கு அரசாங்கத்துக்கு 22 வருடங்கள் பிடித்துள்ளன.

**மோதலில் ஏற்பட்ட மொத்த மரணங்களின் விபரங்கள்**

| கொல்லப்பட்டவர்களின் வகை | இலங்கை போர் (1983 – 2009) | ஈராக் போர் (2004 - 2009) | ஆப்கானிஸ்தா (2001 - 2014) |
|---|---|---|---|
| 1. நட்பு படை ஆட்கள் | 29% | 17% | 29% |
| 2. எதிரி படை ஆட்கள் | 37% | 22% | 46% |
| 3. பொது மக்கள் | 34% | 61% | 25% |

இராணுவ - தளபாடங்களை ஏற்றிக் கொண்டு வந்து இலங்கையிலிருந்து கிட்டத்தட்ட 2,000 கி.மீ தூரத்தில் கடற்படையினர் அணுக முடியாத தூரத்துக்கு அப்பால் நிறுத்தப்படும் மற்றும் கரைக்கு நெருக்கமான இடத்தில் காத்திருக்கும் எல்.ரீ.ரீ.ஈயின் இயந்திரப் படகுகளில் சரக்கை வேகமாக இறக்கிவிட்டுச் சென்றுவிடும். ஈழப்போர் 4இல் கடற்படையின் மூன்று பழைய கட்லோர காவற் கப்பல்கள் (அமெரிக்கா அன்பளிப்பு செய்த அதன் முன்னாள் கடலோர காவற் படகு உட்பட) புதுப்பிக்கப்பட்ட தந்திரங்கள் மற்றும் இந்தியா, அமெரிக்காவின் உளவுத் தகவல்கள் என்பனவற்றுடன் இணைந்து எல்.ரீ.ரீ.ஈயின் போக்குவரத்து கப்பல்களைத் தாக்கியது. 2007இன் பிற்பகுதியில் கடைசியாக மூழ்கடிக்கப்பட்ட படகு, இலங்கையிலிருந்து 3,000 கி.மீ தூரத்துக்கு அப்பால் அவுஸ்ரேலியாவுக்கு அருகில் உள்ள கொகோ தீவுக்கு அருகிலும் மூழ்கடிக்கப்பட்டது. இந்த மூன்று காரணிகளும் இணைந்த மூலோபாய இலக்கினை பின்பற்றுவது பொருத்தமானது என்பதையும், முழு நாட்டினதும் கவனத்தை ஈர்க்கும் பாரிய உத்தியை பயன்படுத்துவதும் மற்றும் உகந்ததான ஒரு துணை இராணுவ மூலோபாயத்தை பின் பற்றுவதும் எதிரிக்கு பேரழிவை ஏற்படுத்தும் என்பது நிரூபணமாகியுள்ளது. எல்.ரீ.ரீ.ஈ முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. தொடர்ச்சியான தோல்விக்குப் பதிலாக அதன் வியூகத்தை. மாற்ற முடிந்தால் வெற்றி பெறலாம் என்பதை அரசாங்கம் நிரூபித்தது. அதே நேரம் எல்.ரீ.ரீ.ஈ அதன் முந்தைய வெற்றிகரமான சூத்திரத்தில் விடாப்பிடியாக ஒட்டிக்கொண்டிருந்ததால் தோல்வி அடைந்தது. அரசாங்கம் பொதுமக்களின் இறப்பினை கருத்தில் கொள்ளாது

இது தொடர்பாக வேறு இரண்டு மேற்கின் தலைமையிலான கிளர்ச்சி எதிர்ப்பு யுத்தம் நடந்த காலத்தில் படை வீரர்கள் மற்றும் பொதுமக்கள் கொல்லப்பட்டதை ஒப்பிட்டு நோக்குவது பொருத்தமாக இருக்கும்.

இவைகள்தான் மூன்று வித்தியாசமான உள்நாட்டுப் போர்கள் அவை ஒவ்வொன்றும் கிளர்ச்சி எதிர்ப்பு மூலோபாயங்கள் முன்னேறப்பட்ட பரிணாமங்களைக் காண்பிக்கின்றன. அனைத்திலும் தொடர்புபட்டுள்ள பொதுமக்கள் இறப்பு விகிதத்தில் முக்கியமாக ஈராக்கில் குறிப்பிடத்தக்க அளவு மோசமான முறையில் 61 விகிதம் ஆகவும் ஆப்கானிஸ்தானில் ஓரளவு மெச்சத்தக்க வகையில் 25 விகிதம் ஆகவும் உள்ளது. இலங்கை போரில் கொல்லப்பட்ட மொத்த பொதுமக்கள் தொகை 34 விகிதமாக உள்ளது மற்றும் இதன்படி ஆப்கானிஸ்தானுடன் ஒப்பிடுகையில் இலங்கை யுத்தம் தீர்க்கமான வெற்றி என்பதைக் குறிப்பிட்டுக் கூற முடியும். ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் வெற்றி என்பது கிடைக்கவில்லை, அங்கு சமாதானம் தோன்றவில்லை மற்றும் மக்கள் தொடர்ந்து மரணித்து வருகிறார்கள்.

இலங்கையில் 2009இல் துப்பாக்கிகள் மௌனமாக்கப்பட்டு விட்டன, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7 விகித வளர்ச்சி ஏற்பட்டுள்ளது, வேலையில்லா திண்டாட்டம் குறைவாக உள்ளது மற்றும் தனி நபர் வருமானம் சீராக அதிகரித்து வருகிறது. பொருளாதார ரீதியில் வறுமையான நாடாக இருந்த போதும் ஒரு உள்நாட்டு யுத்தத்தில் அதனால் சமாதானத்தை வெல்ல முடியும் எனத் தெரிகிறது. இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது மூலோபாயத்தை சரியான வகையில் பயன்படுத்துவதே.



# வலுவான எதிர்க்கட்சி நாட்டுக்கு அவசியம்

## அஸ்கிரிய பீடாதிபதி கோரிக்கை

நாட்டுக்கு வலுவான ஒரு எதிர்க்கட்சி அவசியமானது. என கண்டி அஸ்கிரி பீடாதிபதி கலகம ஸ்ரீஅத்தாதஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டி நகர உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமரும் சிறந்த அரசியல்வாதிகளாவர்.

அவர்கள் சுதந்திரமான முறையில் செயற்படுவதற்கு தேவையான அவகாசத்தை வழங்க வேண்டும்.

எனினும், நாட்டுக்கு பயனுள்ள செயற்பாடுகளை முன்னெடுக்க இடமளிக்க வேண்டும். குற்றத்தை கண்டால் அதனைச் சுட்டிக்காட்டி விமர்சனம் செய்ய வேண்டும்.

எனினும். இன்று நிலைமை மாறியுள்ளது.

19ஆவது திருத்தச் சட்டம் பற்றி பேசுகின்றார்கள், 20ஆவது திருதச் சட்டம் பற்றி பேசுகின்றார்கள். நாடாளுமன்றத்தை கலைக்குமாறு கோருகின்றார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வருவதாக கூறுகின்றார்கள். இவ வாறு அனைத்தையும் 100 நாட்களுக்குள் செய்ய முடியுமா?

அனைத்தையும் 100 நாட்களுக்குள் செய்து முடிக்க முடியாது. உலக உரிமைகளில் ஒன்றான கண்டி நகரை பாதுகாக்க வேண்டும், தலதா மாளிகையின் புனிதத்தன்மையை உறுதி செய்ய வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

## பாரதலக்ஸ்மன் படுகொலை வழக்கு ஆகஸ்ட் மாதம்வரை ஒத்திவைப்பு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர படுகொலை குறித்த வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் வழக்கை ஒத்தி வைப்பதாக அறிவித்துள்ளது.

அரச தரப்பு சட்டத்தரணி விடுத்த கோரிக்கைக்கு அமைய இவ்வாறு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வழக்கின் 13 பிரதிவாதிகளில் ஒருவர் இல்லாமல் வழக்கை விசாரணை செய்ய முடியாது என சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.


வழக்கின் ஓர் பிரதிவ்ாதியான பிரியந்த ஜானக கலகொட என்பவரைக்காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர உள்ளிட்ட நான்கு பேரை படுகொலை செய்தமை உள்ளிட்ட 17 குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கடந்த மார்ச் மாதம் குறித்த பிரதிவாதிகளுக்கு எதிரான சட்ட மா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கின் பிரதான சந்தேக நபர்களில் ஒருவராக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா காணப்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## - மகிந்தோதய ஆய்வு கூடங்களுக்கு -

## 60 ஆயிரம் ரூபா கணனிகள் 1 இலட்சத்து 10ஆயிரத்திற்கு கொள்வனவு



கடந்த அரசாங்கம் 60,000 ரூபா பெறுமதியான கணனிகளை 1,10,000 ரூபாவுக்கு கொள்வனவு செய்தே தொழில் நுட்ப விஞ்ஞான கூடங்களுக்குப் பகிர்ந்தளித்ததாக கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மகிந்தோதய விஞ்ஞான தொழில்நுட்ப ஆய்வு கூடத்துக்கும் 60 கணனிகள் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட கல்வியமைச்சர், இவை ஒவ்வொன்றும் 1,10,000 ரூபா வீதமே கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் டி.பி. ஏக்கநாயக்க எம்.பி. எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளித்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். மேற்படி கணனி ஒவ்வொன்றையும் 50 அல்லது 60 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்திருக்க முடியும். அவ்வாறானால் வீண்விரயமான பணத்தை கல்வித்துறையின் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தியிருக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட முன்னாள் கல்வியமைச்சர் பந்துல குணவர்தன, கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் குற்றச்சாட்டை நிராகரித்தார். சேறுபூசும் நடவடிக்கையில் அமைச்சர் ஈடுபடககூடாது. கணனி கொள்வனவில் மோசடிகள் இடம்பெற்றிருந்தால் கல்வியமைச்சர் அதனை ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## 450 பேர் பங்கேற்ற நிகழ்வுக்கு உபசரிப்பு செலவு 8 இலட்சம்

மத்தள விமான நிலையத்தின் 450 பேர் மட்டுமே பங்கேற்ற விமான எண்ணெய் வழங்கல் திறப்பு விழா நிகழ்வில் உபசரிப்புக்காக மட்டும் கடந்த அரசு 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவை செலவுசெய்துள்ளதுடன், திறப்பு விழாவுக்காக 60 இலட்சம் ரூபாவை செலவுசெய்துள்ளது என அரசு நேற்று முன்தினம் தெரிவித்தது. நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தில் அஜித் மன்னப்பெரும எம்.பி. எழுப்பிய கேள்விக்கு எரிசக்தி, மின்சக்தி அமைச்சின் சார்பில் பதிலளித்தபோதே ஆளுந்தரப்பு பிரதம கொரடாவும், அமைச்சருமான கயந்த கருணாதிலக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அஜித் மன்னம்பெரும எம்.பி. தனது கேள்வியில், 2014 ஜுன் மாதம் 22ஆம் திகதி நடாத்தப்பட்ட மத்தள விமானநிலையத்தினதும், மாகம்புர துறைமுகத்தினதும் எண்ணெய்க் களஞ்சியத் தொகுதியைத் திறந்துவைக்கும் வைபதிற்காக செலவிடப்பட்ட மொத்த தொகை, ஒலிபெருக்கி கருவிகளுக்கான செலவு, பயன்படுத்தப்பட்ட இடம்பெயர் மலசலகூட வசதிக்கான செலவு, மேற்கொள்ளப்பட்ட உபசரிப்புகளுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாது? எனக் கேட்டார். இந்தக் கேள்விக்குப் பதிலளித்த ஆளுந்தரப்பு பிரதம கொரடாவான கயந்த கருணாதிலக்க, "மத்தள விமானநிலையத்தில் விமான எண்ணெய் வழங்கல் முறைமையைத் திறந்துவைப்பதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் 60 இலட்சம் ரூபா (6.06 மில்லியன்) செலவு செய்யப்பட்டுள்ளது. ஒலி பெருக்கி உபகரணங்களுக்கு 3 இலட்சத்துக்கு 82 ஆயிரத்து 704 ரூபாவும், நடமாடும் மலசலகூட வசதிகளுக்கு 2 இலட்சத்து 15 ஆயிரத்து 113 ரூபாவும், உபசரிப்புக்காக 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளன - என்றார். இதையடுத்து மேலதிக கேள்வியொன்றை எழுப்பிய அஜித் மன்னம்பெரும எம்.பி., திறப்புவிழா வைபவமொன்றில் உபசரிப்பு நடவடிக்கைகளுக்காக 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இது ஏன்? என்று கேட்டார். இதற்குப் பதிலளித்த ஆளுந்தரப்பு பிரதம கொரடாவான கயந்த கருணாதிலக்க, இந்தத் திறப்புவிழா வைபவத்திற்காக 450 பேருக்கு மட்டுமே அழைப்பிதழ் விடுக்கப்பட்டிருந்தது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சபாநாயகர், கனிம எண்ணெய்கள் அமைச்சர், பிரதியமைச்சர், விமானத்துறை அமைச்சர், பிரதியமைச்சர் உள்ளிட்ட ஆளுந்தரப்பு அமைச்சர்கள், எம்.பிக்கள், தென் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், முப்படைகளின் உறுப்பினர்கள் ஆகியோரே பங்குபற்றினர் என்றார்.

## சிவில் பிரதிநிதிகள் இன்றியே அரசியலமைப்பு சபையை கூட்ட முடிவு

மூன்று சிவில் பிரதிநிதிகளின் நியமனம் தொடர்பில் உடன்பாடு ஏற்படும் வரை தற்பொழுது நியமிக்கப்பட்டுள்ள 7 பிரதிநிதிகளையும் கொண்டு அரசியலமைப்பு சபையை கூட்டவும் சுயாதீன ஆணைகுழுக்களை நியமிக்கவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அமைச்சரவை கூட்டத்தில் இது குறித்து ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டதாக குறிப்பிட்ட அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன சிவில் உறுப்பினர்கள் நியமிக்கப்படாத நிலையில் அரசியலமைப்பு சபை கூடுவதற்கு எதுவித தடங்கலும் கிடையாது என்றார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சர் மேலும கூறுகையில்

3 சிவில் பிரதிநிதிகளையும் நியமிப்பது தொடர்பில் இன்னும் உடன்பாடு ஏற்படவில்லை. எனவே இது தொடர்பில் உடன்பாடு காணப்படும் வரை அரசியலமைப்பு சபையை கூட்டி செயற்படுவதற்கு முடிவு காணப்பட்டுள்ளது. சிவில் பிரதிநிதிகளை நியமிப்பதற்கே நாடாளுமன்ற அனுமதி தேவை. ஏனைய 7 பிரதிநிதிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த 7 பேரும் கூடி முடிவுகளை எடுக்க முடியும். அரசியலமைப்பு சபைக்கான 10 உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் கூடி முடிவுகள் எடுக்க முடியும். தற்காலிக ஏற்பாடாக சிவில் உறுப்பினர்களின்றி அரசியலமைப்பு கூடும். இவர்களுக்கு சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் உறுப்பினர்களை நியமிக்க முடியும் என்றார்.



19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் உருவாக்கபட்ட அரசியல்மைப்பு சபைக்கு பதவி வழியாக பிரதமர், சபாநாயகர், எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோர் தெரிவாவதோடு பிரதமரின் பிரதிநிதியாக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் ஜனாதிபதியின் பிரதி நிதியாக சம்பிக் ரணவக்கவும், எதிர்க்கட்சி தலைவரின் பிரதிநிதியாக ஜோன் செனவிரத்ன எம்பி.யும் சிறுபான்மை கட்சி மற்றும் சிறு கட்சிகளின பிரதிநிதியாக இரா.சம்பந்தன் எம்.பியும் நியமிக்கப்பட்டனர்.

சிவில் உறுப்பினர்களாக ராதிகா குமார சுவாமி, ஏ. பி. ஆரியரத்ன, முன்னாள் நீதியரசர் ஏ. டபிள்யூ. எம். சலாம் ஆகியோர்களின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டன. இவர்களின் பெயர்களுக்கு அனுமதி வழங்க கடந்த 3 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடிய போதும் முடிவு எதுவுமின்றி நாடாளுமன்றம் கலைந்தது. குறிப்பிடத்தக்கது.

## தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்ப கப்பம் கோரினார்கள்

## மாலினி பொன்சேகா தெரிவிப்பு



தொலைக்காட்சியில் நாடகங்களை ஒளிபரப்புவதற்காக கப்பம் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தினால் கடந்த காலங்களில் தான் தொலைக்காட்சி நாடகங்களை தயாரிப்பதிலிருந்து ஒதுங்கியிருந்ததாக பிரபல சிங்கள சினிமா நடிகையான நாடாளுமன்ற உறுப்பினர் மாலினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அப்போது அவ்வாறு கப்பம் பெற்ற குழுக்களில் சிலர் இன்னும் தொலைக்காட்சிகளில் கடமையாற்றுகின்றனர். கடந்த காலங்களில் இவர்கள் கப்பத்தை பெற்றுக்கொண்டு தரமற்ற நாடகங்களையும் ஒளிபரப்பினர். இதற்கு நான் எதிர்ப்புத் தெரிவித்து தயாரிப்பு பணிகளிலிருந்து ஒதுங்கியிருந்தேன். என அவர் சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த காலங்களில் தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்புவதற்காக அதிகாரிகள் நடிகைகளிடம் பாலியல் இலஞ்சம் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் இது தொடர்பாக பொலிஸாருக்கு தற்போது முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பிரபல நடிகர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் கனவு கிடையாது

(கொழும்பு)

பிரதமர் பதவி வகிக்க வேண்டும் என்ற கனவு கிடையாது என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் பதவி பற்றிய ஆசைகள் எதுவும் கிடையாது. எனினும் பிரதமர் பதவி கிடைத்தால் நன்றாக இருக்கும். பிரதமர் பதவி கிடைத்தால் எவ்வளவு நல்லது எனினும் அவ்வாறான திட்டம் மனதில் கிடையாது. யாராவது அவ்வாறு சொன்னால் அது நல்லதே என தெரிவித்துள்ளார்.

# சிறியதைப் பெரிதாக்கும் ஊடகங்கள் நல்ல விடயங்களை மறைப்பதேன்?

## அருட்தந்தை டிக்சன் கேள்வி



(கிளிநொச்சி)

எங்கள் மத்தியில் சிலர் செய்கின்ற சின்னச் சின்ன விடயங்கள் எல்லாம் சில ஊடகங்களில் பெரிதாக வருகின்றன. ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் போன்றோர் செய்கின்ற பெரிய விடயங்கள் சின்னதாக கூட வருவதில்லை என அருட்தந்தை டிக்சன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி சோலைநகர் கிராமத்தில் நாடாளுமன்ற உறுப்பினரின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட சேரமான் முன்பள்ளி கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் மீது கொண்ட பற்று காரணமாக மீள்குடியேற்றத்திற்கு பின்னரான காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் கிளிநொச்சிக்கு ஆற்றிய பணி மகத்தானது, பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இன்று அதிலிருந்து பெருமளவுக்கு மீள்வதற்கு அவரின் சேவை அளப்பரிய பங்காற்றியிருக்கிறது. குறிப்பாக கிளிநொச்சியின் கிராமங்கள் இன்று மிக வேகமாக முன்னேறியிருப்பதற்கு இவர்களின் செயற்பாடே வழிவகுத்தது.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் நாடாளுமன்ற நூல் வெளியீட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கு தான் இவரின் செயற்பாடுகளை அறிந்துகொண்டேன். ஆயுத போராட்ட காலத்தில் ஒரு போராளியாக, அரசியலில் ஒரு மக்கள் சேவையாளனாக தொடர்ந்தும் மக்களுக்காக பணி செய்து வருகின்றார். எனத்தெரிவித்த அருட்தந்தை டிக்சன் கிளிநொச்சியில் படை முகாமாக இருந்த ஒரு பிரதேசம் இன்று பல்கலைக்கழகமாக செயற்பட்டுக்கொண்டிருப்பது ஒரு சாதாரண விடயமல்ல அதற்காக உழைத்தவர்களின் உழைப்பும் சாதாரணமானது அல்ல எனவும் குறிப்பிட்டார்.

# புதிய சுற்றுலா நீதிமன்றம் துணுக்காயில் அமைக்க ஏற்பாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தில் எதிர் வரும் ஜூலை மாதம் 8 ஆம் திகதி முதல் புதிதாக சுற்றுலா நீதிமன்றம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதியை நீதிச் சேவைகள் ஆணைக்குழு வழங்கியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சுற்றுலா நீதிமன்றத்தினூடாக மாங்குளம் மற்றும் மல்லாவி ஆகிய இரு பொலிஸ் பிரிவுகளையும் சேர்ந்த மக்களுக்கான வழக்குகள் மாதத்தில் இரு தடவைகள் புதன்கிழமைகளில் துணுக்காய் பிரதேச செயலக கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த சுற்றுலா நீதிமன்றத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இரு பொலிஸ் பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் தமது வழக்கு விசாரணைகளுக்காக இதுவரைகாலமும் முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கே வருகை தருகின்றனர்.

எனினும் மக்களின் போக்குவரத்து உள்ளிட்ட அவர்கள் எதிர் நோக்கும் அசௌகரியங்களை கருத்திற்கொண்டே துணுக்காய் பிரதேசத்தில் சுற்றுலா நீதிமன்றம் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (165)

# வாள்வெட்டு முயற்சி தோல்வியில் முடிந்தது

நெல்லியடி நகரில் ஒருவரை வாளால் வெட்ட மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது. நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை மாலை 6 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் நெல்லியடி இராச கிராமத்தைச்சேர்ந்த சுரேஷ் என்பவரை வாளால் வெட்ட முயன்றுள்ளனர்.

எனினும் அதிலிருந்த அதிர்ஷ்டவசமாகத் தப்பிய குறித்த நபர் நேரடியாக நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு சென்று அங்கு புகலிடம் கோரியுள்ளார். தன்னை வாளால் வெட்ட முயன்ற சில நபர்களின் பெயரைத் தெரிவித்ததை அடுத்து சந்தேக நபர்களை நெல்லியடி பொலிஸார் தேடி வருகின்றனர். (18)

# விநாயகபுரம் விவசாயிகள் கூ.சங்கத்தின் புதிய அலுவலகக் கட்டடம் திறந்து வைப்பு

கிளிநொச்சி முழங்காவிலில் விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச்சங்கத்தின் புதிய அலுவலகக் கட்டடத்தை கடந்த திங்கட்கிழமை வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் திறந்துவைத்துள்ளார்.



பழச் செய்கையாளர்கள் மற்றும் பயிர்ச் செய்கையாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச்சங்கம் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் உதவியுடன் சேதன முறையில் பப்பாசிச் செய்கையை மேற்கொண்டு வருகிறது. உற்பத்தி செய்யப்படும் பப்பாசிப் பழங்களையும் ஏனைய மரக்கறி வகைகளையும் பிராந்திய, தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் சந்தைப் படுத்துவதற்கான வசதிகளில் ஒன்றாகவே சர்வதேச தொழிலாளர் ஒன்றியத்தின் நிதிப் பங்களிப்புடன் இப்புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

20 இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ள இப்புதிய கட்டடத்தொகுதியின் அலுவலகத்தை அமைச்சர் பொ.ஐங்கரநேசனும், விவசாய சேவைகள் மையத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் திறந்து வைத்துள்ளனர்.

விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச்சங்கத்தின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்துவதற்கென விநாயகபுரம் உற்பத்திகள் கூட்டுறவுச் சங்கமும் சாரகேதா ஹோல்டிங்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் என்ற தனியார் முன்னணி ஏற்றுமதி நிறுவனமும் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டுள்ளமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களுக்கு செயலமர்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்களால் கோணாவில் அ.த.க. பாடசாலையின் மாணவர்களுக்கு செயலமர்வு கடந்த செவ்வாய்க் கிழமை நடாத்தப்பட்டது.

தரம் 10,11 வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் இந்த செயலமர்வில் பங்கு கொண்டனர்.

பாடசாலை முதல்வர் சி.இதயசிவதாஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களின் செயற்பாடு பற்றி விளக்கப்பட்டது. வளவாளர்களாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட அதிகாரி இ.செந்தூரன் கலந்து கொண்டார்.

# ஊடகவியல் கருத்தரங்கு

2015 இல் க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான ஊடகவியல் கருத்தரங்கு ஒன்று இன்றும் நாளையும் பிசப்சவுந் தரம் கம்பசில் தினமும் காலை 8.30 - மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது என பிசப் சவுந்தரம் கம்பஸ் இயக்குநர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் அறிவித்துள்ளார். பல்கலைக்கழக மற்றும் துறைசார் வல்லுநர்களால் நடாத்தப்படும் மேற்படி கருத்தரங்கிற்கு கட்டணமாக 500 ரூபா அறிவிடப்படும்.

தினமும் தேநீரும் மதிய உணவும் வழங்கப்படும். இரு முழுநாள் பயிற்சியில் பங்குபற்றியவர்களுக்கு மட்டும் சான்றிதழ் வழங்கப்படும்.

மேற்படி கருத்தரங்கில், அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம், கிருத்திக்கா தர்மராஜா விரிவுரையாளர் .- யாழ்.பல்கலைக்கழகம், பி.இராஜேஸ்வரன் விரிவுரையாளர் தேசிய கல்வியியற் கல்லூரி, என்.கஜிதரன், யாழ் - கொழும்பு பிரபல ஊடக ஆசிரியர், வ.நவநீதன் Media Studies, யோ.கோணேசலிங்கம் ஆசிரியர் உடுவில் முருக மூர்த்தி வித்தியாலயம் ஆகியோர் வளவாளர்களாகப் பணியாற்றவுள்ளனர்.

## முரசின் இன்றைய பலன்

(13.06 2015 சனிக்கிழமை)

மன்மத வருஷம் வைகாசி மாதம் 30 ஆம் திகதி.
அஸ்வினி நட்சத்திரம் மு.ப.8.34 வரை. பின் பரணி
சித்தயோகம். துவாதசி - திதி.
இராகு காலம் 08.52- 10.22 வரை. சுபநேரம் 02.52- 04.22வரை.



ஜோதிட வித்யா ரதனா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
பாகுபாடு காட்டியதால் குடும்பத்தில் கவின் நிலை அற்றுப் போதல்

**ரிஷபம்**
மாமன்மாருடன் சில காலம் நிலவிய பிணக்கு மறைந்து விடல்

**மிதுனம்**
விவாகத்தில் காணப்பட்ட இழுபறி நிலைமை சாதகமாக வருதல்

**கடகம்**
பிள்ளைகளின் நடவழக்கைகளை நோட்டம் விடுவதினால் துயர் மறைந்து விடுதல்

**சிம்மம்**
நோய் குணமடைய தெய்வதலங்களுக்கு விஜயம் செய்ய தீர்மானித்தல்

**கன்னி**
தொலைபேசி உரையாடல் மூலம நிலுவை வந்தடைய வழி பிறத்தல்

**துலாம்**
ஏழரைச்சனி கடைக்கூறு இருப்பதினால் மேலும் ஒரு கிளை நிறுவனம் திறக்க முற்படல்

**விருச்சிகம்**
பிதாவின் தேக சௌக் கியத்தில் அச்சம் கொள்ளும் நிலையில் இருத்தல்

**தனுசு**
அட்டமத்துக் குரு விரைவில் நீங்குவதினால் கைவிட்டிருந்த பயணத்தை ஆரம்பித்தல்


**மகரம்**
குழந்தைப் பாக்கியம் ஏற்பட்டதற்கான அறிகுறியினால் உவகை கொள்ளுதல்

**கும்பம்**
வாகன போட்டா போட்டியை தவிர்த்து விடுவதால் விபத்து நேரிடாமை

**மீனம்**
தகுந்த துணையின்றித் தனித்து செல்வதை தவிர்த்துக் கொள்ளவும்

# அணியின் தலைமைப் பதவியில் சாதிக்க.விரும்புகிறார் ஹோலி

## சமி தெரிவிப்பு



அணியின் தலைமைப் பதவியில் விராட் ஹோலி சாதிக்க விரும்புகிறார் என மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னணி வீரர் சமி தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் முன்னணி வீரர் டேரன் சமி. இவர் ஐ.பி.எல்.லில் விராட் ஹோலி தலைமையிலான பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியில் இடம் பெற்றுள்ளார் அவர் கூறியதாவது,

விராட் ஹோலி அற்புதமான பந்துவீச்சாளர் என்பது அனைவருக்கும் தெரியும். அவர் கப்டன் பதவியில் முன்னுதாரணமாக விளங்க விரும்புகிறார். ஒவ்வொரு போட்டியிலும் முழு ஈடுபாட்டோடு விளையாடுகிறார்.

அவரது தலைமையிலான பெங்களூர் அணியில் எப்படி செயற்பட்டாரோ அதுபோல் இந்திய அணியிலும் தொடர்ந்தால் அது அணியிலும் சிறந்த பயனை அளிக்கும்.

டோனி–ஹோலி இருவரும் வெவ்வேறு குணாதிசயங்கள் கொண்டவர்கள். ஆனால் இவர்களது கப்டன் ஷிப்பில் சரிசமமான பயன்கள் கிடைக்கும். பங்களாதேஷ் தொடரில் விளையாடும் ஹோலிக்கு எனது வாழ்த்துக்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் தொடரில் 8 ஆண்டுகளின் பின் முபாரக்




பாகிஸ்தான் டெஸ்ட் தொடரில் ஹேகன் முபாரக் இலங்கை அணியில் இடம்பெற்றுள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டி, இரண்டு 20 ஓவர் போட்டியில் விளையாடுகிறது. டெஸ்ட் போட்டித் தொடர் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடங்குகிறது.

மத்யூஸ் தலைமையிலான இலங்கை டெஸ்ட் அணி அறிவிக்கப்பட்டது.

16 பேர் இடம் பெற்றுள்ள அணியில் ஹேகன் முபாரக்குக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அவர் 8 ஆண்டுக்கு பிறகு அணியில் இடம் பெற்றுள்ளார். அவர் கடைசியாக 2007ஆம் ஆண்டு பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிபா தலைவராக முயற்சிக்கும் ஜிகோ




சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் பதவி வெற்றிடமாக உள்ள நிலையில் அதற்கான தேர்தலில் பிரேசிலின் முன்னாள் ஜாம்பவான் ஜிகோ போட்டியிடவுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டு எதிரொலியாக சர்வதேச கால்பந்து சம்மேளன (பிபா) தலைவர் செப் பிளாட்டர் சமீபத்தில் பதவியை இராஜினாமா செய்தார்.

புதிய தலைவருக்கான தேர்தல் டிசம்பர் மாதம் நடாத்தப்பட வாய்ப்புள்ளது.

இந்த நிலையில் தலைவர் பதவிக்கான போட்டியில் பிரேசில் முன்னாள் ஜாம்பவான் 62 வயதான ஜிகோவும் இறங்கியுள்ளார்.

கால்பந்தில் நடந்த ஊழல் புகார்களை பார்க்கும் போது மிகுந்த வேதனை அளிப்பதாக கூறியுள்ள ஜிகோ, 'பிபா' தலைவர் பதவிக்கு போட்டியிடுவது எனது கடமை என்றும், அதற்குரிய திறமை தனக்கு இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

விளையாட்டுச் செய்திகள்

# அதிகம் சம்பாதிக்கும் வீரர்களில் டோனிக்கு 23 ஆவது இடம்



உலக அளவில் அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்களுக்கான போர்ப்ஸ் பட்டியலில் இந்திய அணி கப்டன் டோனி 23ஆவது இடம் பிடித்துள்ளார்.

அமெரிக்காவில் இருந்து வெளியாகிறது போர்ப்ஸ் பத்திரிகை. இதன் சார்பில் உலக அளவில் அதிகம் சம்பாதிக்கும் முதல் 100 விளையாட்டு நட்சத்திரங்களின் பட்டியல் வெளியானது.

கடந்த 2014 ஜூன் முதல் 2015 ஜூன் வரையிலான விளையாட்டு நட்சத்திரங்களின் வருமானம் இதில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதில் கடந்த ஆண்டு 22ஆவது இடம் பெற்ற இந்திய அணி கப்டன் டோனி, இம்முறை 23ஆவது இடம் பிடித்துள்ளார். இந்திய அளவில் இப்பட்டியலில் இடம் பெற்ற ஒரே வீரர் இவர் மட்டும் தான்.

டோனியின் வருமானம் ரூ 198 கோடியாக கணக்கிடப்பட்டது. சம்பளம் மற்றும் போட்டிகளில் வென்ற பரிசுத் தொகை ரூ.25.53 கோடி, பல்வேறு நிறுவனங்களுடன் செய்த ஒப்பந்தத்தால் ரூ. 172.28 கோடி கிடைத்தது. டோனி குறித்து போர்ப்ஸ் பத்திரிகையில், உலககோப்பைத் தொடரின் அரையிறுதி வரை இந்திய அணியை அழைத்து சென்ற டோனி, பிரிமியர் தொடரிலும் சென்னை அணியை 6ஆவது முறையாக இறுதிக்கு கொண்டு சென்றார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேவெதர் நம்பர்1**

இப்பட்டியலில் நம்பர்1 இடத்தை சமீபத்தில் உலக வெல்டர் வெயிட் பட்டம் வென்ற அமெரிக்க குத்துச்சண்டை வீரர் பிளாய்டு மேவெதர் (ரூ. 1914.28 கோடி) பெற்றார். கடந்த 4 ஆண்டுகளில் 3ஆவது முறையாக முதலிடத்தை பிடித்துள்ளார்.

**மெஸ்சி நம்பர்4:**

பிலிப்பைன்ஸ் குத்துச்சண்டை வீரர் மானி பாக்குயாவோ (ரூ. 1021 கோடி) இரண்டாவது இடத்திலும், கால்பந்து வீரர்கள் போர்த்துக்கலின் கிறிஸ்டியானோ ரொனால்டோ (ரூ. 508 கோடி), அர்ஜென்டினாவின் மெஸ்சி (ரூ. 471 கோடி) 3, 4ஆவது இடத்திலுள் உள்ளனர். சுவிட்சர்லாந்து டென்னிஸ் வீரர் 'ரோஜர் பெடரர் 5ஆவது (ரூ. 427 கோடி) இடம் பெற்றார்.

**ஷரபோவா 26**

மற்ற டென்னிஸ் வீரர்கள் செர்பியாவின் ஜோகோவிச் 13ஆவது (ரூ. 307 கோடி) இடத்தில் உள்ளார். ரஷ்ய டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா (ரூ. 190 கோடி), அமெரிக்காவின் 'செரினா வில்லியம்ஸ் (ரூ. 168.5 கோடி) 26, 47ஆவது இடங்களை பெற்றனர்.

# இங்கிலாந்தின் விக்கெட் காப்பாளர் மேத் பிரையர் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு




இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் 'விக்கெட் காப்பாளர் மேத் பிரையர் அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி விக்கெட் காப்பாளர் ஒருவர் மேத் பிரையர். 33 வயதான மேத் பிரையர், கணுக்கால் பகுதியில் ஏற்பட்ட காயத்துக்கு கடந்த ஆண்டு சத்திரசிகிச்சை செய்து கொண்டார். கடந்த ஆண்டு ஜூலையில் இந்திய அணிக்கு எதிராக விளையாடிய பிறகு அவர் எந்த ஒரு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடவில்லை.

இந்த நிலையில் மருத்துவ குழுவினரின் ஆலோசனையை ஏற்று கவுண்டி அணிக்கு திரும்பும் முடிவையும் கைவிட்டார். இந்த முடிவு பற்றி பிரையர் கூறுகையில் "இன்றைய நாள் எனது வாழ்க்கையில் வருத்தமான நாள். காயம் காரணமாக நான் நேசித்த விளையாட்டில் இருந்து ஓய்வு பெறுவதை அறிவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன். துரதிர்ஷ்டவசமாக காயப்பிரச்சினையில் இருந்து முழுமையாக மீள முடியவில்லை. அதனால் வேறு வழியின்றி ஓய்வு முடிவுக்கு வந்தேன். சக்செக்ஸ் கவுண்டி அணி மற்றும் இங்கிலாந்து அணிக்காக விளையாடியது எனக்குக் கிடைத்த கௌரவம் எனத் தெரிவித்தார்.

இதுவரை 79 போட்டிகளில் விளையாடி 7 சதத்துடன் 4,099 ரன்கள் எடுத்துள்ளார். இது தவிர 68 ஒரு நாள் போட்டிகளிலும், 10 இருபது ஓவர் போட்டிகளிலும் இங்கிலாந்து அணிக்காக விளையாடியுள்ளார் மேத்பிரையர்.

# தமிழ்நாட்டில் கிரிக்கெட்டை மேலும் வளர்க்க வேண்டும்

## கிரிக்கெட் சங்கத் தலைவர் தெரிவிப்பு

(சென்னை)

சேப்பாக்கம் மைதானத்தில் 3 பகுதிகளை பயன்படுத்த அனுமதி கிடைக்கும் என்.சீனிவாசன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபைக்கு சேர்மனும், தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவருமான என்.சீனிவாசன் வரவேற்று பேசுகையில், 'தமிழ்நாட்டில் கிரிக்கெட்டை மேலும் வளர்க்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாகும். கிரிக்கெட்டின் மையமாக சென்னை விளங்கி வருகிறது. இதேபோல் மாவட்ட தலைநகரில் மற்றொரு கிரிக்கெட் மைதானத்தை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் தடை விதிக்கப்பட்ட 3 ஆசனப்பகுதிகளை திறக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்குள் 3 ஆசனப் பதிவுகளை பயன்படுத்த அனுமதி கிடைக்கும் என்று நம்புகிறேன் என்றார்.

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் 85ஆவது ஆண்டு விழா சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று மாலை நடந்தது. விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இந்திய அணியின் முன்னாள் வீரரும், கர்நாடக கிரிக்கெட் சங்க செயலாளருமான பிரிஜேஷ் பட்டேல், சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி) கௌரவமிக்க எலைட் பேனல் நடுவர் குழுவுக்கு சமீபத்தில் தேர்வு செய்யப்பட்ட 2ஆவது இந்தியரான சென்னையைச் சேர்ந்த நடுவர் எஸ்.ரவியை பாராட்டி நினைவுப்பரிசு வழங்கினார்.

அத்துடன் இந்த ஆண்டு நடந்த பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற தமிழக மற்றும் மாவட்ட அணி வீரர்களுக்கும் பரிசுகள் வழங்கினார். சர்வதேச கிரிக்கெட் சபை தலைமை செயல் அதிகாரி டேவ் ரிச்சர்ட்சன் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று வீரர்களுக்கு விருதுகள் வழங்கினார்.

## வீதியோட்ட சுற்றுப்போட்டி

# யாழ்.பல்கலைக்கு மூன்றாமிடம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் முதன்முறையாக ஒழுங்கமைத்து நடாத்தப்பட்ட அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான வீதியோட்டச் சுற்றுப்போட்டி-2015 யாழ்.பல்கலைக்கழகம் மூன்றாவது இடம் பெற்றுள்ளது.

2015 ஆம் ஆண்டிற்கான அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான வீதியோட்டச் சுற்றுப்போட்டி முதன்முறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை மிக சிறப்பாக நடாத்தப்பட்டது. இச்சுற்றுப் போட்டியில் 12 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 78 போட்டியாளர்கள் பங்கு பற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

இப்போட்டியானது கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்திக்கு அருகாமையில் ஆரம்பமாகி பலாலி வீதியூடாக திருநெல்வேலி சந்தியை அடைந்து ஆடியபாதம் வீதிவளாக வீதியூடாக யாழ்.பல்கலைக் கழக வீதியூடாக யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் முடிவடைந்தது. இப்போட்டியல் இலங்கை மெய்வல்லுநர் சங்க உத்தியோகத்தர்கள் சிறப்பாக கடமையாற்றியிருந்தனர்.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல் கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம்



சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளரும் இலங்கைப்பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கத்தின் தலைவரும் யாழ்பல் கலைக்கழக விளையர்ட்டு ஆலோசனை சபையின் தலைவருமாகிய வைத்திய கலாநிதி செ.கண்ணதாசனும் கலந்துசிறப்பித்தனர்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பல்கலைக்கழகங்கள் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்கள், பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வீதியோட்ட அணியின் தலைவராக் ஏ.ஜே.எட்வின் ஜோசப், உபதலைவராக கே.டி ரி.எம். திலகரட்ண, பயிற்றுந்ராக செல்வி இ.அருளம்பலம், முகாமையாளராக ஜி.டி.மதியழகன் ஆகியோர் செயற்பட்டிருந்தனர்

தனிப்பட்ட போட்டியாளர் ரீதியாக முதல் பத்து இடங்களைப் பெற்றுக்கொண்ட வீரர்கள்

டபிள்யூ.பி.ஜி.பி.விஜயசிங்க பேராதனை, என்.எம்.சி.சி. நவசிங்க-சப்ரகமுவா, ஆர்:எம்.சி.எஸ். இரத்நாயக்க-ஸ்ரீ.ஜெயவர்த்தனபுர, டி.எம்.பி.சாந்தருவன்-ஜெயவர்த்தனபுர, எம்.வி.எஸ்.எல்.பிரியங்கார-ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, ஏ.ஜே.எட்வின் ஜோசப்-யாழ்ப்பாணம், எஸ்.ஆர். குமார-ஸ்ரீஜெயவர்த்தனபுர, எஸ்.எச்.ஏ.டி.ராஜபக்ஷ-களனிய, டபிள்யு.ஜி.டி.பெரேரா-ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, எஸ்.யோக ராஜ்-யாழ்ப்பாணம்.

இப்போட்டி சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகுதனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் உடற் கல்விப் பணிப்பாளர் க.கணேசநாதன் தெரிவித்துள்ளார்.

## இன்றைய போட்டிகள்

### கபடி,பட்மின்ரன்

வடக்கு மாகாண விளையாட்டுத்திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையிலான போட்டிகளை நடாத்தி வருகிறது அந்த வகையில் கபடி, பட்மின்ரன் போட்டிகளை இன்று நடாத்தவுள்ளது.

மேற்படி போட்டிகள் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளன. (93)

### கால்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கால்பந்தாட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் வீரவீராங்கனைகளுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன் அவர்களை உரிய நேரத்துக்கு வருகை தந்து நேர விரயத்தை தவிர்க்குமாறு போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

### கரப்பந்தாட்டம்

தேசிய இளைஞர்சேவை மன்றம், நடாத்தும் தேசிய மட்ட கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை கொழும்பு தேசிய இளைஞர் சேவை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள் ளது.

மேற்படி போட்டிகள் பெண்களுக்கானது என்பதுடன் இரண்டு பேர் பங்குபெறும் போட்டியாகவும் நடைபெறவுள்ளது. (93)

### ஹொக்கிப்போட்டி

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஹொக்கிப் போட்டி இன்று சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகள் 19 வயதுப் பிரிவில் ஆண், பெண்களுக்கு நடைபெறவுள்ளது என்பதுடன் காலை 9 மணிக்கு போட்டிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (93)

## கால்பந்தாட்ட இறுதிப்போட்டி

### டயமன்ஸ்-சென்மேரிஸ் இன்று பலப்பரீட்சை



கம்பர்மலை யங்கிம்பன்ஸ் வியையாட்டுக்கழகம் நடாத்தும் அணிக்கு 7பேர் கொண்ட கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.

இன்று மாலை 6.30 மணிக்கு மேற்படி விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் மேற்படிபோட்டிகள் நடைபெறவுள்ளன.

இரண்டு பலம் வாய்ந்த அணிகள் போட்டிகளில் மோதவிருப்பதால் வெற்றி பற்றிய எதிர்பார்ப்பு இரசிகர்களிடையே பெரும் எதிர்பார்பை ஏற்படுத்தியுள்ளன.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழக அணியும் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.

## புனித தோமையார் விளையாட்டுக்கழக கால்பந்தாட்ட போட்டி முடிவுகள்



(யாழ்ப்பாணம்)

மாதகல் புனித தோமையார் விளையாட்டுக் கழகம் புனித தோமையாரின் திருவிழாவை முன்னிட்டும் 11ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டும் நடாத்திய கால்பந்தாட்டப் போட்டியின் முடிவுகள்.

இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழக அணியும் தெல்லிப்பளை நாகம்மாள் விளைய்யாட்டுக் கழக அணியும் மோதிய போட்டியில்

யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் பல முறை கோல்கள் போட முயற்சித்த போதும் நாகம்மாள் விளையாட்டுக் கழக அணி அந்த முயற்சியை முறியடித்தது.

இதனால் நாகம்மாள் விளையாட்டுக் கழக அணி ஆட்ட நேர முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சென் லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியும் சென்சேவியர் விளையாட்டுக் கழக அணியும் மோதிய மற்றுமொரு போட்டியில் சென் சேவியர் விளையாட்டுக் கழக அணி ஆட்ட நேர முடிவு வரை எந்தவித கோல்களையும் போடவில்லை.

சென் லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மேற்படி போட்டிகள் புனித தோமையார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

## மாணவிகள் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

கொழும்பு தியகம விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில், 800 மீற்றர் தூர ஓட்டப்போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவி தேவதாஸ் டென்சிகா மற்றும் 20 வயதுப் பிரிவு உயரம் பாய்தலில் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்ட கிளிநொச்சி பளை மத்திய கல்லூரி மாணவி யோகநாதன் சுகிர்தா ஆகியோரை, கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் கடந்த புதன்கிழமை கௌரவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலக முன்றிலில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில், இருவருக்கும் மாவட்ட செயலகத்தால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க, மாவட்ட செயலக உத்தியோகஸ்தர்கள், வீராங்கனைகளின் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (90)

# யாழ்ப்பாண சமூக கட்டமைப்பு சீர்குலைவுக்கு முன்வைக்கப்படும் காரணங்கள்

**- 'சிலோன் ருடே'யில் அனந்த் பாலகிட்னர் கட்டுரையிலிருந்து.**

"சிறிலங்காவின் வடக்கு மற்றும் கிழக்கில் கிட்டத்தட்ட மூன்று பத்தாண்டுகளாக யுத்தம் நீடித்திருந்தது. இதனால் இங்கு வன்முறைகள் நிலவின. இறப்புக்கள், படுகொலைகள், கடத்தல்கள், சொத்து அழிவுகள் போன்றவற்றைக் நேரில் கண்ட மக்களின் நடத்தை மாற்றமுற்றது. 2009இல் கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த யுத்தம் நிறைவுற்றது.

எனினும், இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் இயல்புநிலைக்குத் திரும்புவதிலும் தமது வாழ்வைக் கட்டியெழுப்புவதிலும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இந்த சமூகத்தில் தற்போது புரையோடிப் போயுள்ள தீயசக்திகளை அழிக்க வேண்டிய மிகப் பெரிய சவால் ஒன்று காணப்படுகிறது" என்கிறார் பேராசிரியர் தயா சோமசுந்தரம்.

"யாழ்ப்பாணத்தில் மதுபானப் பாவனை, போதைப்பொருட் பாவனை என்பன மிக முக்கிய பிரச்சினைகளாகும். போருக்குப் பின்னான காலப்பகுதியில் போதைப்பொருட் பாவனை அதிகரித்துள்ளதாக யாழ்ப்பாணத்திலுள்ள மதுவரித் திணைக்களத்தின் ஆய்வில் உறுதிப்படுத்தப்படுகிறது. 2008 இலிருந்து மதுபானப் பாவனை அதிகரித்துள்ளது. ஒரு ஆண்டில் 1,000,000 லீற்றர் மதுபானம் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் 2014இல் இது 7,000,000 லீற்றராக அதிகரித்துள்ளது" எனப் பேராசிரியர் சோமசுந்தரம் சுட்டிக்காட்டுகிறார்.

யாழ் குடாநாட்டில் வதியும் மக்களிற்கு வெளிநாடுகளிலிருந்து அதிகளவான நிதி கிடைப்பதால் ஒரு சமனற்ற நிலை உருவாகியுள்ளதாகவும், தமது சொந்த இடங்களைப் பார்வையிட வருகின்ற புலம்பெயர் தமிழர்களின் நடத்தை முறைகள் போன்றன யாழ்ப்பாணத்தின் சீர்கேடுகளுக்குக் காரணமாக உள்ளதாகவும் பேராசிரியர் கூறுகிறார்.

"முன்னர் ஈருருளிகளைப் பயன்படுத்திய யாழ்ப்பாணத்தவர்களின் போக்குவரத்து ஊடகமாகத் தற்போது உந்துருளிகள் காணப்படுகின்றன. பொதுவாக ஒவ்வொரு வீடுகளிலும் உந்துருளிகள் உள்ளன. ஆகவே இந்தப் போக்கானது புலம்பெயர் தமிழ் மக்கள் தமது உறவுகளுக்காக அனுப்பும் நிதிச் செல்வாக்காலேயே ஏற்பட்டுள்ளது" என பேராசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

புலம்பெயர் தமிழர்களின் நிதிச் செல்வாக்கின் தாக்கத்திற்கு வித்யா என்கின்ற பாடசாலை மாணவி கோரமாகப் படுகொலை செய்யப்பட்டமை யாழ்ப்பாணத்தின் இன்றைய சமூகக் கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது என்கின்ற உண்மையை வெளிப்படுத்துகின்ற சாட்சியமாகக் காணப்படுகிறது. இக்கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்ட 10 பேரில் ஒருவரான எம்.குமார் என்பவர் சுவிற்சர்லாந்து வாழ் தமிழராவார்.

குறித்த சந்தேகநபரான குமார் என்பவர் சுவிசிலிருந்து புங்குடுதீவுக்கு வரும்போதெல்லாம் இவர் தனது நண்பர்களை மகிழ்ச்சிப்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதாக உள்ளூர் வாசிகள் குற்றம்சுமத்துகின்றனர். இவருடன் இணைந்து களியாட்டங்களில் ஈடுபடும் புங்குடுதீவு இளைஞர்கள் மிகவும் மோசமானவர்கள் எனவும் மக்கள் கூறுகின்றனர்.

வித்தியாவின் படுகொலையை அடுத்து யாழ்ப்பாண நீதிமன்றின் மீதான ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலானது இங்கு வாழும் மக்கள் சட்டம் ஒழுங்கைத் தமது கைகளில் எடுக்கத் தீர்மானித்துள்ளனர் என்பதையே கோடிட்டுக் காட்டுவதாக வடக்கு மாகாணத்திற்கான காவற்துறையின் பிரதிப் பொறுப்பதிகாரி லலித் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கில் நிலவும் அசாதாரண சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதற்கு தமிழ் பேசும் காவற்துறையினர் பணிக்கு அமர்த்தப்பட்டு சட்ட ஒழுங்கு பலப்படுத்தப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"வடக்கில் உள்ள காவற்துறை நிலையங்கள் மற்றும் நீதிமன்றில் மொழி பாரிய பிரச்சினையாக உள்ளது. மக்களுடனான தொடர்பாடல் இடைவெளியைப் போக்குவதற்காக காவற்துறையில் தமிழர்களைக் குறிப்பாக பெண்களை இணைக்குமாறு கோரியுள்ளோம். தமது கல்வியை முடித்த பாடசாலை மாணவர்கள் தமது சமூகத்திற்கு சேவையாற்றுவதற்காக உதவிக் காவற்துறை உறுப்பினர்களாகத் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும் என நாம் கோருகிறோம். தற்போது வடக்கில் உள்ள காவல் நிலையங்களில் நிலவும் மொழிப் பிரச்சினையை ஈடுசெய்வதற்காகவே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படுகிறது" எனவும் காவற்துறை பொறுப்பதிகாரி லலித் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

"போரின் போது மிகமோசமான வன்முறைகளை யாழ்ப்பாண மக்கள் நேரில் கண்டுள்ளனர். மக்களின் வாழ்வானது துப்பாக்கிகள், குண்டுகள் எனப் பலதரப்பட்டவற்றால் சின்னாபின்னமாகியுள்ளது. ஆனால் தற்போது வடக்கில் வாழும் மக்கள் அமைதி வாழ்விற்குத் திரும்புகின்ற இந்நிலையில் யாழ்ப்பாண சமூகத்தில் சமூக விரோதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன" என மூத்த வழக்கறிஞரும் பிரபல விளையாட்டு வீரருமான வி.ரி.சிவலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

"முன்னர் எமது பிரதேசங்களில் ஆயுதங்கள் ஆதிக்கம் செலுத்தின. ஆனால் தற்போது வாள்கள் அதிகரித்துள்ளன. அண்மையில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் பயன்படுத்திய 20 வாள்களை காவற்துறையினர் யாழ்ப்பாண நீதிமன்றில் சமர்ப்பித்தனர். பிரேசிலில் தயாரிக்கப்பட்ட வாள்கள் கூட இதில் காணப்பட்டன. இது என்னை மிகவும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது." என்கிறார் சிவலிங்கம்.

இதேவேளையில், யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் விற்பனையாளர்கள் விற்பனை செய்யப்படும் இடங்கள் தொடர்பாக ஏற்கனவே யாழ். மாவட்ட செயலகம் அறிக்கை ஒன்றை மே 27 அன்று வெளியிட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலரால் காவற்துறையிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. யாழ் குடாநாட்டின் 25 இடங்களில் போதைப்பொருட்கள் விற்கப்படுவதாகவும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த நான்கு மாதங்களில் வடக்கில் பாலியல் முறைகேடுகள் மிகவும் அதிகளவில் இடம்பெற்றுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். "கடந்த நான்கு மாதங்களில் பாலியல் முறைகேடுகள் தொடர்பாக 35 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன. இதனால் பாதிக்கப்பட்டவர்களால் வழங்கப்பட்ட முறைப்பாடுகளே இவையாகும். ஆனால் முறைப்பாடு செய்யப்படாத பாலியல் மீறல் சம்பவங்கள் அதிகம் உள்ளன" என சத்தியலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.



இறுதிப் போரில் கொல்லப்பட்ட தமது உறவுகளை நினைத்து நினைவேந்தல் நிகழ்வை மேற்கொள்வதற்கு தற்போதைய சிறிசேன அரசாங்கம் அனுமதித்தமையானது பல்வேறு தாக்கங்களுக்கு உட்பட்டுள்ள மக்களின் வடுக்களை ஆற்றுவதற்குப் பெரிதும் உதவியுள்ளதாக உளவியல் பேராசிரியர் தயா சோமசுந்தரம் குறிப்பிட்டுள்ளார்.

"மக்கள் தமது மனவுணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு அனுமதிக்க வேண்டும். மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்த விடாது அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் ஏற்கனவே மனப்பாதிப்பிற்கு உள்ளாகிய சமூகத்தை மேலும் மோசமாக்கும். இந்த மக்கள் அமைதி வழியில் தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் புரிந்துணர்வின் அடிப்படையில் இதற்கான விட்டுக்கொடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தென்னிலங்கை வாசிகள் கருதுகின்றனர்.

இதன்மூலம் நல்லிணக்க முயற்சிகள் துரிதமாக்கப்பட முடியும் என நான் நம்புகிறேன். மறுபுறத்தே, மன அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ள மக்கள் தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்த அனுமதிப்பதானது இவர்கள் நல்ல செயல்கள் மற்றும் தீய செயல்கள் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொள்வதற்கும் வழிசமைக்கும்" என பேராசிரியர் தயா சோமசுந்தரம் குறிப்பிட்டுள்ளார்.

## காட்டுப்பூனையும் வெள்ளைப்புள்ளிகளும்

[சிறுவர் கதை]

ஒரு காட்டுப்பூனை, காட்டுமுயலைத் துரத்திக் கொண்டு சென்றது. பிடிபடுகிற நேரத்தில், மரத்திலிருந்த பொந்துக்குள் ஓடி ஒளிந்து கொண்டது முயல்.

காட்டுப் பூனை அதன் முன்னேயே அமர்ந்து, முயல் வெளியே வரும்வரை காத்திருப்பது என்று முடிவு செய்தது. எப்படியும் முயலுக்குப் பசியெடுக்கும், அது வெளியே வந்துதான் தீரவேண்டும், அப்போது பிடித்துக்கொள்ளலாம் என்று தீர்மானமாக இருந்தது பூனை. ஆனால், வெளியே போனால் பூனை தன்னைக் கொன்றுவிடும் என்பது முயலுக்குத் தெரிந்தே இருந்தது.

ஆனாலும், எவ்வளவு நேரம்தான் பொந்துக்குள்ளேயே இருப்பது? எனவே, அது ஒரு யோசனை செய்தது.

"ஏய் பூனையே! நான் வெளியே வருகிறேன். உனக்கு உணவாகவும் சம்மதிக்கிறேன். ஆனால், ஒரு நிபந்தனை! இந்த மரத்துக்கு முன்னால் நெருப்பு மூட்டு. நான் அந்த நெருப்பில் குதித்து வறுபடுகிறேன். அதன்பின் என்னை நீ உணவாகப் புசி! என்னைப் பச்சையாக உண்பதை நான் விரும்பவில்லை" என்றது முயல்.


காட்டுப் பூனையும் "இதுவும் நல்ல யோசனைதான்" என்று எண்ணி தீ மூட்டியது.

நெருப்பு நன்றாக எரியத் தொடங்கியதும், முயல் திடீரென பொந்திலிருந்து பாய்ந்து அந்த நெருப்புத் துண்டுகள் பூனை மீது தெறிக்குமாறு சிதற அடித்துவிட்டு, குதித்துத் தப்பி ஓடிவிட்டது. அதனால், பூனையின் நெஞ்சுப் பகுதியிலிருந்த முடிகள் கருகி, திட்டுத் திட்டாக வெள்ளையாகிவிட்டது.

காட்டுப் பூனைகள் வெள்ளைப் புள்ளிகளுடன் இருப்பதற்கான காரணம் இதுதான்.



# பெரியவர்களை மதியுங்கள்!



**பெ**ரியவர்களை தாத்தா, பாட்டி என அழைத்த காலம் போய், 'பெருசு' என்று அழைக்கிற காலம் இது. பெரியோரை அவமதித்தால், எத்தகைய விளைவுகள் ஏற்படும் என்பதை இக்கூர்ம அவதாரக் கதை மூலம் தெரிந்து கொள்ளுங்கள்...

தேவலோகத்தில், தேவர்களுக்கு அடுத்த நிலையில் கந்தர்வர்கள் மற்றும் வித்யாதரர்கள் உள்ளனர். கல்வி மற்றும் கலைகளில் சிறந்தவர்கள் வித்யாதரர்கள்.

ஒருமுறை, வித்யாதரப் பெண் ஒருவர், திருமாலையும், லட்சுமியையும் துதித்து பாடி, வீணை மீட்டினாள். இதனால், மனம் மகிழ்ந்த லட்சுமி, தான் சூடியிருந்த பாரிஜாத மாலையை, அவளுக்கு வழங்கினாள். அதை பிரசாதமாக ஏற்ற வித்யாதரப் பெண், அங்கிருந்து புறப்பட்ட போது, வழியில், துர்வாச முனிவரைச் சந்தித்தாள்.

அவர் லட்சுமியின் தீவிர பக்தர். அவரிடம், தனக்கு லட்சுமி தேவியே நேரில் தந்ததாக கூறி, அம்மாலையை அவருக்கு அளித்தாள். அதை வாங்கிய துர்வாசர், தன் ஜடாமுடியில் சுற்றிக் கொண்டார்.

எதிரே, ஐராவதம் எனும் யானையின் மீது வந்து கொண்டிருந்தான் இந்திரன். அவனுக்கு அம்மாலையைக் கொடுத்தார் துர்வாசர். அவன் அதை, யானையின் மத்தகத்தின் மீது வீசினான்.

மாலை, யானையின் மீது விழுந்ததும், அதற்கு ஞானம் வந்து, தவமிருக்க காட்டிற்கு ஓடியது. ஓடிய வேகத்தில், மாலை கீழே விழுந்து யானையின் காலடியில் மிதிபட, அதைப் பார்த்ததும், துர்வாசருக்கு கோபம் வந்து, 'இந்திரா... செல்வ செருக்கில், அப்புனிதமான மாலையின் பெருமையை உணராமல், யானை மீது வீசி விட்டாய். அது தரையில் விழுந்து புனிதம் கெட்டு விட்டது. உன் இத்தகைய அலட்சிய மனோபாவத்திற்காக, நீயும், தேவர்களும் உங்கள் பலத்தை இழப்பீர்களாக...' என சாபமிட்டார்.

பலமிழந்த இந்திரனும், தேவர்களும் அசுரர்களிடம் சிக்கி அல்லல் பட்டனர்.

திருமாலைச் சரணடைந்து தங்கள் கஷ்டத்தைக் கூறி கதறினர். பாற்கடலைக் கடைந்து, அதிலிருந்து கிடைக்கும் அமிர்தத்தைச் சாப்பிட்டால், இழந்த பலத்தைப் பெற்று அசுரர்களை வெல்லலாம் என, யோசனை கூறினார் திருமால். அதனால், மந்தார மலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு கடலைக் கடைந்த போது, மலை சீராக இல்லாமல் சாய்ந்தது. அதை சீராக்க வேண்டி மீண்டும் திருமாலிடம் சரணடைந்தனர்.

திருமால், ஆமை வடிவம் எடுத்து கடலுக்கு அடியில் சென்று, மலையை தன் முதுகில் தாங்கி சீராக்கினார். அப்போது பாற்கடலில் மறைந்திருந்த லட்சுமி தோன்றி, தேவர்களை மன்னித்து, திருமாலின் மார்பில் இடம் பிடித்தாள்.

தன்வந்திரி அமிர்த கலசத்துடன் வெளிப்பட்டார். அந்த அமிர்தம், தேவர்களுக்கு கிடைக்கும்படி செய்வதற்காக, திருமால் மோகினி வடிவெடுத்து, அசுரர்களை ஏமாற்றினார்.

ஆனால், இரு அசுரர்கள், ஏமாறாமல் அமிர்தத்தைப் பருக, அவர்கள் திருமாலால் தண்டிக்கப்பட்டனர். இருப்பினும், அவர்கள் அமுதம் பருகியதால், ராகு மற்றும் கேது என்ற கிரக அந்தஸ்தைப் பெற்றனர்.

பெரியவர் தந்த பிரசாதத்தை, உரிய முறையில் பயன்படுத்தாமல் அவமதித்ததால், அந்த தேவர்களே சிரமப்பட்டிருக்கின்றனர். ஆனால், இன்றோ, தங்களை வளர்த்து ஆளாக்கியவர்களை அவமதித்து, வீட்டை விட்டு வெளியேற்றுவதுடன் மரியாதை இல்லாமல் பேசுகின்றனர் இளைய தலைமுறையினர்.

இந்நிலை தொடர்ந்தால், திருமால், கூர்மமாய் வந்து அமிர்தம் தர மாட்டார் கல்கியாய் வந்து கடுமையாய் தண்டித்து விடுவார்.

பெரியவர்களை மதிக்க கற்றுக் கொள்வோமா!




# இணையத்தின் முதல் முகவரி

**ச**மீபத்தில், சிம்போலிக்ஸ்.கொம் தனது 30ஆவது பிறந்த நாளை கொண்டாடியது. சிம்போலிக்ஸ்.கொம் சாதாரண இணையத்தளம் இல்லை. இணைய வரலாற்றின் மைல்கல் இணையத்தளங்களில் ஒன்று. இதுதான், இணைய உலகின் பழமையான முகவரி. அதாவது, இணைய உலகின் முதல் டொட்.கொம் முகவரி. 1985 மார்ச் மாதத்தில், சிம்போலிக்ஸ் நிறுவனம் இந்த முகவரியை பதிவு செய்தது. அப்போது வலை (www) இன்னமும் அறிமுகமாகி இருக்கவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆம், இமெயிலும் இணையமும் வலையைவிட மூத்த கண்டுபிடிப்புகள். வலை, 1989 இல்தான் உதயமானது.

சிம்போலிக்ஸ் நிறுவனம், லிஸ்ப் எனும் பெயரில் கம்ப்யூட்டர்களை தயாரித்து வந்தது. இந்த கம்ப்யூட்டருக்கென்று லிஸ்ப் எனும் பெயரில் தனியே புரோகிராமிங் மொழியும் இருந்தது. வர்த்தகப் பயன்பாட்டுக்கான கம்ப்யூட்டர்களில் இதுதான் முன்னோடி. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, சிம்போலிக்ஸ் நிறுவனம் 1993 இல் திவாலாகிவிட்டது. சிம்போலிக்ஸின் கம்ப்யூட்டர்கள் இன்றளவும் சில அமெரிக்க அரசு அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

சிம்பேர்லிக்ஸ்.கொம் இணைய முகவரியை பொறுத்தவரை, 2009 இல் அது ஆரோன் மெய்ஸ்ரெட் (Aron Meystedt) எனும் இணைய முனைவோரால் வாங்கப்பட்டுவிட்டது. இது போன்ற தனிச் சிறப்பு மிக்க இணைய முகவரிகளை வாங்கி வைத்துக்கொள்வதுதான் ஆரோனின் வேலையாக இருக்கிறது. இணைய வரலாற்றின் இருப்பிடமாக இந்த தளத்தை பராமரிக்கப்போவதாக ஆரோன் கூறியிருந்தாலும், இந்த தளம் பெரிய அளவில் புதுப்பிக்கப்படாமலே இருக்கிறது. ஆனாலும்கூட, இணையத்தின் முதல் முகவரி மறைந்து போகாமல் பயன்பாட்டில் இருப்பதே நல்ல விஷயம்தான்.

**சிம்போலிக்ஸ் முகவரி: http://symbolics.com/**

# நோயற்ற வேளையில் உணவூட்ட வேண்டுமா?

**வை**த்தியர் - காய்ச்சல் உள்ள இந்த மூன்று நாளிலும் என்ன சாப்பாடு கொடுத்தீர்கள்?

தாய் - அதிகமாக பிஸ்கட்டும், தேத்தண்ணியும் தான், சோறும் கேட்டவன் நான் கொடுக்கவில்லை.

வைத்தியர் - ஏன்?

தாய் - காய்ச்சலோட சமிக்காது என்றுதான். மற்றது சாப்பாடு கொடுத்தா சக்தி (வாந்தி) வந்தாலும் பிள்ளைக்கு கஷ்டம் தானே!!

குழந்தைகளின் உணவூட்டல் சில சந்தர்ப்பங்களில் பெற்றோர்களின் தினசரிச் சவாலாக அமைகின்றது. ஆனால் குழந்தை நோயுற்ற வேளைகளில் உணவூட்டல் பற்றி எழுகின்ற பல வினாக்கள் பொதுவாக எல்லாப் பெற்றோர்களிடையேயும் காணப்படுகின்றன. நோயுற்ற வேளைகளில் உணவூட்டலைப் பாதிக்கின்ற சில நிலைமைகள் நோய் காரணமாக எழுகின்றன அவையாவன:

★ பசிக்குறைவு
★ வயிற்றுப்பிரட்டல்
★ வாந்தி
★ வாயில் ஏற்படும் புண்கள்
★ தொண்டை நோவுடன் கூடிய விழுங்க முடியாத தன்மை
★ உணவூட்டல் சுவாசத்தை சிக்கலாக்கும் நிலைமைகள் (மூக்கடைப்பு, ஆஸ்துமா)
★ சீரிய கிருமித் தொற்றுகளும், மோசமான உடல் நலக்குறைவும்.
★ மருந்துகளினால் ஏற்படும் பக்க விளைவுகள்.

உதாரணம் - வாந்தி, நாக்கிலுள்ள சுவையுணரும் தன்மை வேறுபடுதல்.

ஆயினும் நோயுற்ற வேளையில் உணவூட்டல் வைத்தியர்களால் தவிர்க்கப்படும் சந்தர்ப்பங்கள் தவிர, உணவூட்டவைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளுவது மிக முக்கியமான ஒரு விடயமாகும். நோய்க்குரிய சிகிச்சையைப் போன்றே பொருத்தமான உணவூட்டலும் நோய்க்காலப் பராமரிப்பில் மிக அவசியமான ஒரு அம்சமாகும்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்ற சில காரணிகள் உணவூட்டலில் சிரமத்தை ஏற்படுத்தினாலும் தொடர்ச்சியான உணவூட்டலைச் செய்வது சாத்தியமான ஒரு விடயமே ஆகும். ஆனால், பொதுவாகக் காணப்படுகின்ற சில தவறான நம்பிக்கைகள் உணவைத் தவிர்க்கவும் குழந்தையின் நோய் நிலைமை மோசமடையவும் காரணமாகின்றன. அத்தவறான நம்பிக்கைகளாவன:

★ நோய்க் காலத்தில் சமிபாடு குறைவு
★ உணவு கொடுத்தால் வாந்தி ஏற்படும்
★ வயிற்றோட்டத்தின் போது உணவுண்டால் நிலைமை இன்னும் மோசமடையும்.
★ வயிறு காய்ந்தால் கிருமி பெருகுவது குறைவு
★ சத்துள்ள உணவுகள் (முட்டை, இறைச்சி) சமிபாடடைவது குறைவு
★ பிஸ்கட், தேநீர் போன்றனவே இலகுவாகச் சமிக்கக் கூடியவை.
★ சில நோய் நிலைமைகளின் போது சைவ உணவுகளை மட்டும் எடுக்கின்ற மரபும் உணவுகளைத் தவிர்க்கின்ற நிலைமையும்.
★ பழவகைகளை உண்பதைத் தவிர்த்தல் - மிகப் பொதுவாக காணப்படுகின்ற இத்தவறான நம்பிக்கைகள் குழந்தையின் உடல் நிலையை மோசமாக்கவும் சடுதியான நிறைக்குறைவை ஏற்படுத்தவும் காரணமாகின்றன.

மாறாக, நோய் நிலைமைகளின் போது போஷாக்குள்ள உணவூட்டலைச் சாதாரண நாள்களை விடவும் கூடிய கவனத்துடன் மேற்கொள்ளப் பல காரணங்கள் உள்ளன.

நோயின்போது ஏற்படும் நீரிழப்பை ஈடுசெய்தல் (உதாரணம் காய்ச்சல், வாந்தி வயிற்றோட்டம் போன்ற நிலைமைகள்)

இரத்தத்தில் உள்ள வெல்லம், உப்புக்களின் அளவை பேணுதல் -

கிருமித் தொற்றுகள் / நோய் நிலைமைகளின் போது ஏற்படுகின்ற அதிகரித்த அனுசேபத் தொழிற்பாடுகளினால் குழந்தையின் உடலிலிருந்து அதிக சக்தி இழப்பு ஏற்படுகின்றது. இதை ஈடு செய்ய போஷாக்குள்ள உணவுகளை வழங்குவது அவசியம்.

நோய் சார்ந்த காரணிகளும், தவறான உணவூட்டல் முறைகளும் குழந்தையின் நிறைக்குறைவில் பங்களிக்கின்றன.

மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக போஷாக்கான உணவூட்டலை நோய் நிலைமைகளின் போதும் தொடர்வது அவசியமாகும். இதற்காகப் பின்வரும் முறைகளை கையாள முடியும்.

★ சிறிய அளவில் அடிக்கடி உணவூட்டல்
★ பிள்ளைக்கு விருப்பமான வாசனை / சுவையுள்ள வகையில் உணவைத் தயாரித்தல்.
★ உண்பதற்கு இலகுவாக விதத்தில் உள்ள உணவை வழங்குதல்.


பாற்கஞ்சி, சூப் வகைகள், ஜெலி, புடிங், பழவகைகள், யோகட், சீஸ், பால்

★ பொதுவாகக் காணப்படும் நோய் நிலைமைகளில் (உதாரணம் காய்ச்சல்) நாளாந்த உணவை எடுக்கக்கூடிய நிலையிலுள்ள பிள்ளைகளில் வழமையான உணவைத் தொடரமுடியும்.

ஆகவே நோயுற்ற நிலைமைகளில் ஏற்ற சிகிச்சையைப் போன்றே உகந்த உணவூட்டலும் மிக அவசியமானது. உணவுத் தவிர்ப்பு வைத்தியரால் பரிந்துரைக்கப்படும் சந்தர்ப்பங்கள் தவிர ஏனைய நோய் நிலைமைகளில் உணவூட்டலைச் சரியான வித்தில் தொடர்வது பின்வரும் நன்மைகளை ஏற்படுத்துகின்றது.

நோய்க்காலத்தில் பிள்ளை மிக மோசமாகப் பாதிக்கப்படுவதைக் குறைக்கின்றது.

நோய்க்கு எதிராகப் போராடவும், விரைவில் குணமடையவும் உதவுகின்றது.



நோயின் பின்னான போஷாக்குக் குறைவுள்ள நிலைமையையும், நிறைக்குறைவையும் தவிர்க்கின்றது.

(நன்றி: Jaffna Diabetic Centre)

**வைத்தியர் குமுதினி கலையழகன்**
**குழந்தை நல வைத்தியர்**
**யாழ். போதனா வைத்தியசாலை**

# புதிர்ப்போட்டி இல. 43

**அனுப்பவேண்டிய முகவரி**

புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும் அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.

01) ஒரு குறித்த நகரத்தில் வசிப்பவர்களுக்கான வாழ்க்கைச் செலவில் மிகப்பெரிய கூறு வீட்டுக்கான (housing) செலவாகும். தற்போது நகரத்தின் வடக்குப் பகுதியில் உள்ள வீட்டுக்கான செலவு நகரத்தின் மேற்குப் பகுதியிலும் பார்க்கக் கூடியதாக இருக்கின்ற போதிலும் நகரத்தின் கிழக்குப் பகுதி யிலும் பார்க்க குறைவாகும். நகரத்தின் மேற்குப் பகுதியின் வாழ்க்கைச் செலவு அதன் கிழக்கு பகுதியிலும் பார்க்கக் கூடிய தாகும். தரப்பட்ட தரவுகளிலிருந்து பின்வரும் எந்த நிபந்தனையை உய்த்தறிய முடியாது?

(1) வடக்குப் பகுதியின் வாழ்க்கைச் செலவு மேற்குப் பகுதியிலும் பார்க்கக் கூடியது

(2) வடக்குப் பகுதியின் வீட்டுக்கான செலவு மேற்குப் பகுதியிலும் பார்க்கக் கூடியது

(3) கிழக்குப் பகுதியின் வீட்டுக்கான செலவு மேற்குப் பகுதியிலும் பார்க்கக்கூடியது

(4) கிழக்குப் பகுதியின் வீட்டுக்கான செலவு வடக்குப் பகுதியிலும் பார்க்கக் கூடியது

(5) மேற்குப் பகுதியின் வாழ்க்கைச் செலவு கிழக்குப் பகுதியின் வீட்டுக்கான செலவிலும் கூடியது

02) உருவில் காணப்படும் நாற்பக்கலின் மொத்த எண்ணிக்கையின் ஆயிடை


(1) 5 - 10

(2) 11 - 15


(3) 16 - 20

(4) 21 - 23


(5) 26 - 30



03) தரப்பட்டுள்ள உருவை முறிந்த கோடுகள் வழியே மடிக்கும்போது பின்வரும் உருக்களில் காணப்படும் எவ்வடிவம் கிடைக்கும்?




04) உருவில் காணப்படும் விரிக்காத சதுர முகியைப் பின்வரும் எச்சதுரமுகி ஒத்தது?




05) ஒரு குறித்த நாட்டில் பிறப்பிலிருந்து (உயிருடன் பிறந்து) முதல் ஆண்டின் நிகழ்ந்த சிசு மரணங்களின் வீதம் 1930 ஆம் ஆண்டின் சனத்தொகையின் 10,000 இற்கு 10உம் 1940 இல் 8.5உம் 1950 இல் 7.0 உம் ஆகும். தற்போது அதன் சிசுமரண வீதம் சனத்தொகையின் 10,000 இற்கும் 5.5 ஆக இருக்கும் அதேவேளை அது குறைவதற்கான போக்கு மேலும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இப்போக்கிற்குப் பின்வரும் எது பயனுறுதி வாய்ந்த விதத்தில் பங்களிப்புச் செய்வதில்லை?

(1) மேம்பட்ட மருத்துவ வசதிகள் இருத்தல்

(2) மேலும் பயனுறுதிவாய்ந்த குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் இருத்தல்

(3) மேம்பட்ட சுகாதார நிலைமைகள் இருத்தல்

(4) நாட்டில் உள்ள குழந்தை நோய்களுக்கான விசேட மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்

(5) கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நடாத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மேம்படுதல்

● ஓர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் ஒரு குறித்த பீடத்திற்கு மாணவர்களை ஆட்சேர்த்தல் பற்றிய தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றன அத்தகவல்களைப் பயன்படுத்தி 06,07 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக

| ஆண்டு | பட்டப்படிப்பு மாணவர்கள் | | பட்டமேற்படிப்பு மாணவர்கள் | |
|---|---|---|---|---|
| | உத்தேசித்த ஆட்சேர்ப்பு | உள்ளபடியான ஆட்சேர்ப்பு | உத்தேசித்த ஆட்சேர்ப்பு | உள்ளபடியான ஆட்சேர்ப்பு |
| 2006 | 100 | 85 | 150 | 120 |
| 2007 | 100 | 86 | 150 | 135 |
| 2008 | 100 | 84 | 150 | 135 |
| 2009 | 100 | 88 | 150 | 140 |
| 2010 | 100 | 82 | 150 | 145 |

06) பின்வரும் கூற்றுக்களில் எது பிழையானது?

(1). ஓர் ஆண்டிற்கு ஆட்சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டபட்டப்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை ஆட்சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட மாணவர்களின் பட்டமேற்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கையிலும் கூடியது

(2) கடந்த ஐந்து ஆண்டுகளில் உள்ளபடியான ஆட்சேர்ப்பதற்கு பட்டப்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை 82 இற்கும் 88 இற்குமிடையே மாறியது.

(3) கடந்த ஐந்து ஆண்டுகளில் உள்ளபடியான ஆட்சேர்ப்பு பட்டமேற்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை 120 இற்கும் 145 இற்குமிடையே மாறியது

(4) கடந்த ஐந்து ஆண்டுகளில் பட்டப்படிப்பு மாணவர்களின் பட்டமேற்படிப்பு மாணவர்கள் என்னும் இரு வகைகளுக்கும் உள்ளபடியான ஆட்சேர்ப்பு மொத்த எண்ணிக்கை உத்தேசித்த ஆட்சேர்ப்பு எண்ணிக்கையிலும் பார்க்க 15% இனால் குறைவாகும்.

(5) ஓர் ஆண்டில் பீடத்திற்கு ஆட்சேர்த்த கூடுதலான மாணவர் எண்ணிக்கை 228ஆகும்.

07) பின்வருவனவற்றில் சரியானது எது?

(1) எதிர்காலத்தில் பட்டமேற்படிப்பு மாணவர்களிலும் பார்க்கக் கூடுதலான பட்டப்படிப்பு மாணவர்களை ஆட்சேர்ப்பதற்குப் பீடம் எதிர்பார்க்கின்றது

(2) கடந்த 5 ஆண்டுகளில் ஆட்சேர்க்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் படிப்படியான அதிகரிப்பு இருக்கின்றது

(3) 2011 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பதற்கு உத்தேசித்த பட்டமேற்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை 150 ஆகும்.

(4) பட்டதாரிப் பாடநெறிகளை நடாத்துவதன் மூலம் பீடத்திற்குக் கிடைக்கும் வருமானம் பட்டமேற்படிப்பு பாடநெறிகளை நடாத்துவதன் மூலம் கிடைக்கும் வருமானத்திலும் பார்க்கக் குறைவாகும்.

(5) 2011 ஆம் ஆண்டில் உள்ளபடியான ஆட்சேர்க்கும் பட்டப்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கையைச் சரியாக எதிர்வு கூறமுடியாது

● 08 ஆம் வினா ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் A தொடக்கம் F வரையுள்ள ஆறு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் மூன்றைக் காலவரண் முறைப்படி ஒழுங்குபடுத்தலாம்

08) A - பூனை கண்களை மூடிக்கொண்டு அமைதியாகக் காத்திருக்கின்றது

B - பூனை அதன் அசைவுகளை நிறுத்தி எலிவரும் வரைக்கும் காத்திருக்கின்றது

C - எவ்வித அச்சுறுத்தல்களையும் காணாத எலி உணவைத் தேடுவதற்கு பற்றையிலிருந்து பற்றைக்குச் செல்கின்றது

D - பூனை தனக்குக் கிட்ட எலி இருக்கின்றது என்பதை மணத்தின் மூலம் உணர்ந்து கொள்கின்றது

E - பூனை எலியைக் கண்டு முன்னோக்கிப் பாய்ந்து எலியைப் பிடித்துக் கொள்கின்றது

F - பூனை இருப்பதை எலி அறியவில்லை

(1). ABD (2) BAE (3) CAE

09) கடுகதிப்புகையிரதம் ஒன்று காலை 5மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு மாறாக்கதியில் கண்டிக்கு செல்கின்றது. அதன் பயணத்தின் 1/4 பங்கு முடிவடையும் போது காலை 8.30மணியும் 3/5 பங்கு முடிவடையும் போது காலை 6.24 மணியுமாகும் புகையிரதம் கண்டியை எத்தனை மணிக்கு சென்றடையும்?

10) நிசாந், அமீர், முகமட் என்ற மூன்று பிள்ளைகளுடைய வயதுகளின் சராசரி 15 ஆகும். அவர்களின் வயதுகளுக்கிடையே உள்ள விகிதம் முறையே 3,5,7 எனின் நிசாரின் வயது யாது?

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- சி.டிலக்ஷன்
தரம் :- 10
பாடசாலை:-யா/சத்திய சாயி பாடசாலை

பெயர் :- தே.தனுசா
தரம் :- 09
பாடசாலை:-யா/வேம்படி மகளிர் கல்லூரி

பெயர் :- க.மதுரிகா
தரம் :- 11
பாடசாலை:-யா/இந்துக்கல்லூரி

பெயர் :- நா.ராகவன்
தரம் :- 09
பாடசாலை:-யா/மத்திய கல்லூரி

### விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ------------------------------
பாடசாலை :- ------------------------------
கல்வி கற்கும் தரம் :- ------------------------------
வீட்டு முகவரி :- ------------------------------
தொ.பேசி இலக்கம் :- ------------------------------

## சென்றவார விடைகள்

### விடுகதைகள்

| | |
|---|---|
| 1.புளம்பழம் | 2.வாழைப்பழம் |
| 3.செத்தல் மிளகாய் | 4.சங்கு |
| 5.தீக்குச்சி | 6.தேங்காய் |
| 7.தையல் ஊசியும் நூலும் | 8.எறும்பு |
| 9.நிழல் | 10.நத்தை |
| 11.கடல் அலை | 12.வழுக்கை |
| 13.பென்சில் | 14.பலூன் |
| 15.கிளி | 16.அம்மி குளவி |

# சமூகச் சீரழிவுகளைக் கட்டுப்படுத்த பாடசாலைச் சமூகத்தால் முடியும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவிப்பு

பாடசாலைச் சமூகத்தால் சமூகச்சீரழிவுகளை கட்டுப்படுத்த முடியும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரித்துள்ளார்.

கிளிநொச்சி வலயத்தின் அதிபர்களுக்கான செயலமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

சமுதாயத்தின் முக்கிய பங்காளிகளாக பாடசாலைச் சமூகம் இருக்கின்றது.அதிலும் அதிபர்கள் ஆசிரியர்களுக்கு இதில் கூடிய பங்கு இருக்கின்றது. இன்றைக்கு எமது மண்ணில் தொடர்ந்து கேள்விப்படும் செய்திகள் சிறுமிகள்,யுவதிகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்படுவது. போதைப்பொருள் பாவனை நடத்தை பிறழ்வுகள். இந்த விடயங்களை உற்று நோக்கினால் இப்பொழுது அநே கமான சம்பவங்கள் அந்தந்த ஊர்காரர்களாலேயோ அல்லது உறவினர்களாலேயோதான் செய்யப்படுகின்றது. இது வரையும் நமது சமூகத்தின் பண்பாட்டில் கேள்விப்படாத அளவுக்கு மிகவும் கொடூரமான சிந்தனை மனோநிலை தற்போதைய நம் சமூகத்துள் ஏற்பட்டுள்ளது. ஒரு விதமான கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அது எம்மவர்களை வைத்தே நிகழ்த்தப்படுகின்றது. போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி இதை எமது சமூகத்தைச் சேர்ந்த இளைய சமுதாயம் செய்யத்துணிகின்றது.

அதிபர்கள்,ஆசிரியர்களை பொறுத்தவரை அன்றாடம் மாணவர்களின் நடத்தைகளை அவர்களின் ஊடாக பெற்றார்கள் குடும்ப நிலைமைகளை அறிகின்ற வாய்ப்பு அதிகம். ஆகவே மாணவர்களை அவர்களின் நிலைகளை அறிந்து அதற்கேற்ப அவர்களை வழி நடத்துகின்ற திட்டங்கள்,செயற்பாடுகளை வளர்க்க வேண்டும். ஒரு காலத்தில் நாங்கள் பிரம்போடு திரியும் ஆசிரியர்களுக்கு கட்டுப்பட்டு ஒழுக்கங்களை கற்றுக்கொண்டோம்.ஆனால் இன்று அப்படியல்ல சட்டதிட்டங்கள் ஆசிரியர்களை கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றது. இன்றைக்கு மாணவர்கள் கைத்தொலைபேசிகளை மிகவும் சாதாரணமாக பாவிக்கின்றார்கள்.சிலர் ஒன்றுக்கு இரண்டு தொலைபேசிகளையும் பாவிக்கின்றார்கள்.இதனூடாக இன்றைக்கு சமூக வலைத் தளங்களூடாக வெளிவரும் தகாதவைகளையும் மாணவர்கள் பார்க்கின்றார்கள்.இது தொடர்பாக விழிப்புணர்வுடன் பாடசாலைச் சமூகம் இருக்கவேண்டியது இன்றைய காலத்தில் அவசியம். மாணவர்களை திசை திருப்பக்கூடிய சமுதாய நல்லொழுக்க விடயங்கள் தொடர்பாக போட்டிகள் கலைநிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்து அதில் மாணவர்களை ஈடுபட செய்து நல்ல சமுதாயத்தின் முன்னோடியான விடயங்களில் ஈர்ப்பை ஏற்படுத்த வேண்டும்.எமது படலைகள் தட்டுப்படும் வரை காத்திராமல் முன்கூட்டியே சில பாதுகாப்பு விடயங்களை செய்யவேண்டும்.வேறு இடங்களில் வேறு ஆட்களுக்கு நடக்கின்றபோது மௌனமாக நாமிருப்பதன் மூலம் எம்மை நோக்கி அந்த ஆபத்துக்களை அழைக்கின்றோம்.வித்தியா கொலை செய்யப்பட்டபோது கிளிநொச்சியில் ஒரு அதிபர்தான் முதன்முதலில் கேட்டார் இதற்கு எதிராக நாம் ஏதாவது செய்ய வேண்டுமென்று அந்த சிந்தனை மிக முக்கியமானது அது சகலரிடமும் ஏற்படவேண்டும்.ஒரு மாணவி அல்லது மாணவன் பாடசாலைக்கு வரவில்லை என்றால் அதை உடனடியாக உணர்ந்து அதிபரோ வகுப்பாசிரியரோ அது பற்றி அறிய வேண்டும்.சிலவேளைகளில் பாடசாலைக்கு என புறப்பட்டு பாடசாலைக்கு வராதநிலை இருக்குமானால் அதை உடனடியாக அறிந்துகொண்டால் சில விபரீதங்களை கூடி தடுக்கமுடியும் இது ஒரு மேலதிக வேலை போல தெரிந்தாலும் இது எமது சந்ததிகளை பிள்ளைகளை காப்பதற்கான வழிகளில் ஒன்று. பிள்ளைகள் தொடர்பாக இன்று விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.எனதெரிவித்தார்.(-160-)

# மோ.சைக்கிள் விபத்து வயோதிபர் படுகாயம்

(நெல்லியடி)

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நெல்லியடியிலிருந்து நவிண்டிலுக்குச் செல்லும் சேது வீதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரின் இடதுகால் முறிவடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைககாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நோக்கியும் நெல்லியடி நோக்கியும சென்றுகொண்டிருந்த இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. (18)

# அலங்கார உற்சவம்


(சாவகச்சேரி)

சாவகசசேரி மட்டுவில் தெற்கு அருள்மிகு ஸ்ரீ அக்கினி ஞானவைரவர் திருக்கோவில் அலங்கார உற்சவம் விஞ்ஞாபனம் நேற்று கோலாகலமாக ஆரம்பமாகி 12 தினங்கள் இடம்பெறவுள்ளன.

தினசரி விழா முற்பகல் 10 மணிக்கு அபிஷேகம்,நண்பகல் 12 மணிக்கு சுவாமி திருவீதியுலாவும் பிற்பகல் ஒரு மணிக்கு மகேஸ்வர பூசை வழங்கப் பட்டுவிழா பூர்த்தியாகும்.

ஆலய கும்பாபிஷேகமாகிய 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளதுடன் அன்று இரவு 7 மணி முதல அக்கினி வைரவர் கிராம பிரதட்சன ஊர்வலம் இடம் பெறவுள்ளது.

ஆலய ஸ்தானிக குரு பிரம்ஸ்ரீ ஜெயந்தி நாத சர்மாவுடன் ஆலய பிரதம குரு கலாநிதி சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் விழாவினை நடாத்திவைப்பர். (இ)



நெல்லியடி நகரில் இன்று திறந்து வைக்கப்படவுள்ள அந்தோனியார் உருவச் சிலையை காணலாம். இச்சிலை திறப்பை முன்னிட்டு ஆராதனை ஊர்வலம் ஒன்றும் இடம்பெறவுள்ளது. (18)

# வாரம் ஒரு காரம்

## உக்கிரமடையும் உள்நாட்டு அரசியலும் வக்கிரமடையும் வெளிவிவகாரக் கொள்கைகளும்.

- எப்போது கலைக்கப்படும் நாடாளுமன்றம்?
- எப்போது தேர்தல் தேதியிடப்படும்?
- யார் அடுத்த பிரதமர்?
- 19 ஆவது சீர்திருத்தத்தின்படி எப்போது சுயாதீன ஆணைக்குழு நியமிக்கப்படும்?
- 20ஆவது அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் அரங்கேறுமா?
- உத்தேச தேர்தல் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டு அமுல்படுத்தப்படுமா?
- அமுல்படுத்தப்பட்டால் சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் என்னாகும்?
- இது தொடர்பாக ஏன் சிலர் மௌனராகம் பாடுகின்றனர்?
- அமெரிக்காவின் எதிர்ப்பு அன்று சீனாவால் வந்தது இன்று ஈரானால் வருமா?
- பாக்கிஸ்தான் இராணுவத் தளபதி ஏன் வந்தார்?
- வந்த மோடிக்கு இது வருத்தத்தைத் தராதா?

இவ்வாறான பல சிக்கல்களோடு விடைகாணப்படாத வினாக்களாக இன்று இலங்கையரசியல் உக்கிரமும் வக்கிரமும் அடைந்திருக்கின்றது. நாடாளுமன்றத் தேர்தல் தேதியிட வேண்டுமாயின் நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். சித்திரையில் கலையுமென்றார்கள் இன்று வரை அது கலைக்கப்படவில்லை.

மறுபுறத்தில் நாடாளுமன்றம் இப்போது கலைக்கப்படும் வாய்ப்பும் குறைவாகவே உள்ளது. காரணம் நாடளுமன்றம் கலைக்கப்பட முன் 19 இல் உள்ள சுயாதீன ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும். இது நியமிக்கப்பட்ட பின்பே நாடா ளுமன்றத் தேர்தல் இடம்பெற வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் தலைவர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது ஒரு புறமிருக்க,

மறுபுறத்தில் யார் அடுத்த பிரதமர் என்கின்ற வினாவிற்கு விடை காணவேண்டிய தேவை ஜனாதிபதி உட்பட பலரிற்கு உள்ளது. இது தொடர்பாக மைத்திரி கருத்து வெளியிடும் போது இருதடவை தன்னைக் கொல்ல வந்தவரை எவ்வாறு என்னால் பிரதமராக்க முடியுமென கூறியுள்ளார்.

இதை அடிப்படையாகக் கொண்டு கட்சிரீதியாக புறந்தள்ளப்பட்டாலும் அதை சாதகமாக வைத்து அனுதாப வாக்குகளின் அனுசரணையுடன் பிறிதொரு கட்சியில் போட்டியிட்டு மகிந்த வெல்ல வாய்ப்புண்டா? எனும் வினாக்களும் ஒரு துருவத்தில் எழாமல் இல்லை.

சுயாதீன ஆணைக்குழுவிற்கும் நாடாளுமன்றத் தேர்தலிற்கும் என்ன தொடர்பு என சிலர் வினவக்கூடும் 19 இல் ஜனாதிபதியின் அதிகாரம் குறைக் கப்பட்டு அது நாடாளுமன்றத்திற்கும் பிரதமருக்கும் சுயாதீன ஆணைக்குழு விற்குமெனப் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தேர்தல் மூலம் உருவாகும் பிரதமர் தெரிவும் நினையாப்பிரகாரம் இடம்மாறினால் தற்போதைய ஆளுங்கட்சிக்கு அப்பால் அரசியல் நாடகம் அரங்கேற ஆரம்பித்துவிடும் அல்லவா!...

தென்னிலங்கை அரசியலில் இதுவரை கட்சிரீதியான ஆட்சிதான் இருந்தது தற்போது கட்சிக்கப்பாலான ஆட்சி அரங்கேற ஆரம்பித்து விட்டதல்லவா. யாருக்கு யார் எமன் என்பது தெரியாத போது அதிகாரத்தை சுயாதீன ஆணைக்குழுவினிடத்தில் கொடுத்துவிட்டு கெல்மற் போட்டு கல்லெறியலாமல்லவா இதுவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சிந்தனையாகும்.

இது உக்கிரமடைந்த உள்விவகாரங்களாக இருக்கும் அதே வேளை மறுபுறத்தில் வக்கிரமடைகின்றன வெளிவிவகார சிந்தனைகளும். அன்று அபிவிருத்திக்கு ஆசைப்பட்டு சீனாவோடு தொடர்பு வைத்த மகிந்தவை சந்திரிகா எனும் எமனை அனுப்பி மண்டியிட வைத்த அமெரிக்கா இன்று எண்ணைக்கு ஆசைப்படும் மைத்திரிக்கு எமனனுப்பப் போகின்றது.

பொருளாதாரத் தடையைப் பொருட்படுத்தாது எண்ணை இறக்கும் இலங்கையின் செயற்பாட்டால் அமெரிக்கா மீண்டும் சீற்றமடைந்துள்ளது. மறுபுறத்தில் பக்கிஸ்தானுடன் மைத்திரி வைத்துள்ள இராணுவத் தொடர்புகளால் வந்த மோடியும் வாடிப் போவாரா என்கின்ற சில சிக்கல்கள் தோன்றியுள்ளது.

திறைசேரி நிதியினை செப்பனிடவும் தடைப்பட்டு இருக்கும் அபிவிருத்தியை மீண்டும் புதுப்பிக்கவும் வெளிவிவகாரத் தொடர்புகள் தேவையானதே ஆனால்.....???

இத்தனைக்கும் மத்தியில் எங்கள் கூத்தமைப்பு என்ன செய்கின்றது?.... மைத்திரியை வரவைத்த கூத்தமைப்பு அந்த மைத்திரியைக் கொண்டு இதுவரை தமிழ் மக்களிற்கு எதைப் பெற்றுக் கொடுத்தது?

100 நாள் திட்டத்தில் எவற்றையாவது அமுல்படுத்தியதா?.... 19 இல் சிறுபான்மையினப் பிரச்சினைக்குத் தீர்வைத் தேடியதா?... சுயாதீன ஆணைக்குழுவில் சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் பற்றிப் பேசியதா?.... தற்போது தேர்தல் முறை மாற்றம் தொடர்பாக ஏதாவது பேசுகின்றதா?...

சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் பறிபோகும் நிலையில் உள்ளது. இதுவரை இது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கவில்லையாம். உக்கிரமும் வக்கிரமும் அடையும் நிலையில் அரசு இருக்கும் போது அதற்குள் இருந்து சக்கரம் போடுகின்றது தமிழ் தேசியக் கூட்டமைப்பு. கூட்டிக் கழிச்சுப் பாத்தால் சிறுபான்மையினப் பிரச்சினைகள் இன்றும் இலங்கையில் பூச்சியம்தான்.





புங்குடுதீவு வல்லன்வீதி வழியாக பேருந்து போக்குவரத்தினை செயற்படுத்தும் நோக்கில் அப்பகுதி வீதி சிரமதானம் மேற்கொள்ளப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது

# அமைச்சுப்பதவிகளை எதிர்பார்க்காத உறுப்பினர்கள் எவருமில்லை

## முன்னாள் அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

அமைச்சுப் பதவிகளை எதிர்பார்க்காத நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருமில்லை என முன்னாள் அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் அல்ல வேறு எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களை திருப்திப்படுத்த அமைச்சு, பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டியது கட்டாயமானது என அவர் கொழும்பு ஊடகமொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார்.

அவ்வாறு அமைச்சுப் பதவி வழங்காவிட்டால் அரசாங்கத்தை கொண்டு நடாத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருமே இருக்க மாட்டார்கள்.

அரசாங்கத்தை நடத்திச் செல்வதற்கு அமைச்சர், பிரதி அமைச்சர் அல்லது ராஜாங்க அமைச்சர் என ஏதாவது ஓர் வழியில் அமைச்சுப் பதவியொன்று வழங்கப்பட வேண்டும்.

தற்போதைய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பிரதி அமைச்சர் பதவிகளை அரசியல் லாபத்திற்காக நான் பயன்படுத்திக் கொள்ளப் போவதில்லை.

எனது மனச்சாட்சிக்கு விரோதமின்றியே இதனைக் குறிப்பிடுகின்றேன். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன நாடாளு மன்ற உறுப்பினர்களை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கில் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்கியிருந்தார்.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்புரிமை பெற்றுக் கொண்டது முதல் அமைச்சுப் பதவிகளை எதிர்பார்க்கின்றனர்.

ஆறு ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்ததன் பின்னரே நான் அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்டேன் என குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

# இரட்டைக் குடியுரிமைக்கு 3,000 பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

புதிய அரசாங்கம் இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடைமுறையை மீள ஆரம்பித்ததனைத் தொடர்ந்து சுமார் மூவாயிரம் பேர் இரட்டைக் குடியுரிமைக்காக விண்ணப்பித்துள்ளதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் எம்.நிஹால ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை வழங்குவது தொடர்பில் புதிய நிர்வாக முறைமையொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது.

கடந்த அரசாங்கம் 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம் திகதி முதல் இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடைமுறையை தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தது.

புதிய அரசாங்கம் மார்ச் மாதம் 3ஆம் திகதி முதல் இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடைமுறையை ஆரம்பித்துள்ளது.



விண்ண்பம் செய்தவர்களில் 600 பேர் வரையில் இரட்டைக் குடியுரிமை பெற்றுக்கொண்டுள்ளனர் என்றார்.

இதேவேளை, அண்மையில் 150 பேருக்கு வெளிவிவகார அமைச்சின் கேட்போர் கூடத்தில் வைத்து இரட்டைக் குடியுரிமை சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மகிந்தவுக்கு கறுப்புக்கொடி காட்டி கிராமவாசிகள் எதிர்ப்பு

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொலன்னறுவை இசிபதன ரஜமகா விகாரையில் நேற்று முன்தினம் நடத்தவிருந்த சந்திப்பிற்கு கிராமவாசிகள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவிருந்த நேரத்தில் கறுப்புக்கொடியுடன் விகாரையின் முன்பாக நின்று மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதனையடுத்து மகிந்த ராஜபக்ஷ விகாரைக்கு வருவதை தவிர்த்துக்கொண்டார்.

அத்துடன் பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர ரோஷான் ரணசிங்கவின் அலுவலகத்தில் சந்திப்பு இடம்பெற்றது.

இதேவேளை இந்தச் சந்திப்பில் மகிந்த ராஜபக்ஷ உரையாற்றிக் கொண்டிருந்த போது மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது.

கூட்டத்தில் பேசிய மகிந்த ராஜபக்ஷ தம்மீதும் தமது குடும்பம் மீதும் தனது ஆதரவு அமைச்சர்கள்மீதும் சிலர் வேண்டியளவு சேற்றை பூசுவதாக குற்றம் சுமத்தினார்.

# தேசிய சின்னங்கள் குறித்து மக்களுக்கு விழிப்பூட்டத் திட்டம்




(கொழும்பு)

நாட்டின் தேசிய சின்னங்கள் தொடர்பில் போதுமான அளவு பொது மக்கள் மத்தியில் பிரசாரங்களை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானிக்கவுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி முன்வைத்த அமைச்ரவை பத்திரத்திற்கு கடந்த 10 ஆம் திகமி அனுமதி கிடைத்துள்ளதுடன் பொதுமக்களின் ஆலோசனைகளை கருத்திற் கொண்டு அறிஞர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அடங்கிய விசேட குழுவொன்றின் மூலம் எமது நாட்டின் தேசியமலர் 'நீலஅல்லி' என 1986ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது.

குறித்த மலர் கடந்த காலங்களில் சரியான முறையில் பயன்படுத்தப்படாமையினால் ஏற்பட்டுள்ள நெருக்கடியினை அடிப்படையாக வைத்து இலங்கையின் தேசியமலர் சிங்கள மொழியில் 'மானெல்' எனவும் தமிழ் மொழியில் 'நீலோற்பலம்' எனவும் ஆங்கிலத்தில் 'Blue Water Lily' எனவும் அழைப்பதற்கும், தேசியகொடி காட்சிப்படுத்தப்படும் போது அதன் சரியான உருவமும், அதன் விஞ்ஞான பெயரும் காட்சிப்படுத்துவதற்கும், தேசியகொடியின் சரியான பெயர், அதன் சரியான உருவம் ஆகியவை தொடர்பில் போதுமான அளவு பிரசாரம் ஒன்றை மேற்கொள்வதற்கும் மஹாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் எனும் ரீதியில் கௌரவ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூலம் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

# அமைச்சர்கள் நியமனத்திற்கு ஜே.வி.பி.க்டும் அதிருப்தி

அரசாங்கம் புதிதாக மேலும் பிரதி அமைச்சர்களை நியமித்தமை கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நாடாளு மன்றம் எதிர்வரும் வாரங்களில் கலைக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கத்தைப் போன்றே இந்த அரசாங்கமும் செயற்பட்டு வருகின்றது என குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவை அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் ராஜாங்க அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை 82 ஆக உயர்



வடைந்துள்ளது.

எந்தவிதமான திட்டமிடலும் இன்றி இவ்வாறு அமைச்சர்களின் எண்ணிக்கை உயர்த்தப் பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னாள் பிரதமர்களை அரசியல் ஆலோசகர்களாக நியமித்துள்ளது. ஒட்டுமொத்த நடவடிக்கைகளும் நகைப்பிற்குரிய வகையில் அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# புனர்வாழ்வு பெற்ற 5,754 பேருக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்

(கொழும்பு)

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் புலிகள் 5,754 பேருக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்றவர்களுக்கே இந்த சுயதொழில ஊக்குவிப்புக் கடன் வழங்கப்படவுள்ளது.

குறித்த முன்னாள் புலிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்க 2012ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. இதன் கீழ் கடந்த 2014ஆம் ஆண்டு வரை 302 மில்லியன் ரூபா நிதி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மேலதிகமாக 5,754 பேர் விண்ணப்பித்துள்ள நிலையில் அரச வங்கிகளினூடாக அவர்களுக்கு கடனுதவி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம் சுவாமிநாதனின் கோரிக்கைக்கமைய இவ்வனுமதி வழங்கப்பட்டுள்ளது.

36. கனியுப்புக்கள் அதிகமிருக்கும் உணவு
1) வற்றாளை 2) தக்காளி 3) வல்லாரை 4) கோதுமை

37. இலங்கை நாட்டுக்கே உரிய தாவரம்,
1) பெரும்பிரம்பு 2) தென்னை 3) கோப்பி 4) தேயிலை

38. உணவிற்காகவும், மருந்திற்காகவும் பயன்படும் பூ
1) வேப்பம் பூ 2) செவ்வரத்தை 3) மாதுளை 4) பப்பாசி

39. பயிர்ச்செய்கையில் தீங்கு விளைவிக்காதது
1) ஏபிட்டு 2) தண்டுகோதி 3) தும்பி 4) வண்டு

40. களனி கங்கை எந்த பிரதேசக்கடலில் சென்றடைகிறது?
1) மாத்தறை 2) அம்பாந்தோட்டை
3) களுத்துறை 4) கொழும்பு முகத்துவாரம்

41. கொதிநீரில் இலகுவாக கரைவது?
1) மண்ணெண்ணெய் 2) உப்புக்கட்டி 3) மெழுகுத்துளி 4) கரிக்கட்டி

42. இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் பிராணி அல்லாதது?
1) தெள்ளு 2) உண்ணி 3) பேன் 4) தேனீ

43. வாய்ப்புண்ணுக்கு பயன்படுத்தப்படும் மூலிகை?
1) முருங்கை 2) பாவட்டை 3) அகத்தி 4) பாகற்காய்

44. தாவரத்தின் பகுதிகளை மாத்திரம் உணவாகக் கொள்ளும் விலங்கு?
1) யானை 2) குரங்கு 3) மைனா 4) சேவல்

45. ஒளியை விரும்புவதும் இருளை விரும்பாததுமான பிராணி பின்வருவனவற்றுள் எது?
1) நுளம்பு 2) இலையான் 3) சிலந்தி 4) ஆந்தை

46. இலங்கைக்கே உரிய விலங்கு?
1) கோழி 2) நீாகாகம் 3) காட்டுச்செண்பகம் 4) முதலை

47. நீரின் மூலம் பரம்பலுக்கு உட்படும் வித்துக்கள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க
1) புன்னை, ஆம்பல் 2) அல்லி, கொட்டங்காய் 3) புலிநகம், இறப்பர் 4) அவரை, தாமரை

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01). 1. ஊசித்துளைக்கமரா 2. வானவில் (02). 3. 1நட்சத்திரம் 2. மகிழ்வுடன்
4.1. கமகம 2. பூமலர் (03). 5. நள்ளிரவு, சர்ச்சையும் (04). 6. தோமஸ் அல்வா எடிசன் சாதனை
7. ஊக்கமும், விடாமுயற்சியும் 8. 19ஆம் நூற்றாண்டில் 9. அவரது முயற்சி
10. முயற்சி திருவினையாக்கும் 11. அல்லும் பகலும் (05). 12. அல் 13. இல்லம்
15. சோம்பல் 16. மீண்டும் மீண்டும் முயற்சி செய்தால் வெற்றி
(06). 14. தோல்வி 17. தோமஸ் அல்வா எடிசன் (07). 18. ஒருவரின் முகத்தைக்கொண்டு அவரை
கிடைக்கும் 19. சிறுவயதில் பழகும்பழக்கம் இறுதிவரை நிலைக்கும் (08). 20. "ஆந்தைக்கு
மதிப்பிடலாம் 21. உங்களில் சொர்க்கத்துக்குப் போக விரும்புகிறவர்கள் எழுந்து
இரவில் கண் தெரியுமா? என்று கேட்டார் 23. சூரியன் கிழக்கு
நில்லுங்கள்! என்றார். (09). 22. தம்பி பாடங்களைப் படிக்கத் தொடங்கினான் 25. cap
வானில் உதித்தது 24. மாலைக்காட்சி மிகவும் அழகாக இருந்தது 28. அம்மா சமைத்து
26. good morning (10). 27. நான் முத்திரை கொண்டு வருவேன்.
முடித்து விட்டாரா? 29. வியாழக்கிழமை (12). 30.2 31.1 32.4 33.2 34.1
35.1 36.2 37.4 38.3 39.3 40.1 41.4 42.3 43.1 44.1 45.2 46.2 47.1 48.2
49.3 50.2 51.2 (13). 52. மின்முள்ளுத்தையல் 53. கம்பளித்தையல் 54.3 55.3 56.1 57.1
58.1 59.1 60.1

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015



பகுதி - I
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க
(01) 1தொடக்கம் 38 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையை தெரிவு செய்து கோடிடுக

01. இப்பாடலில் விபரிக்கப்பட்டுள்ள பிராணியை தெரிந்து கோடிடுக
நதியில் நீச்சல் அடித்திடுமே
நாக்கால் பூச்சி பிடிக்குமே
அதிகம் பேசி ஓடிடுமே
அழிவை அதுவே தேடிடுமே

1)  2)  3) 

02. இப்பாடலில் விபரிக்கப்பட்டுள்ள பறவையை தெரிந்து கோடிடுக
ஒற்றுமையின் வலிமையை
உணர்ந்து வானில் கரைகிறாய்
வண்ணக்கறுப்பே ஆனாலும்
வருத்தம் மனதில் இல்லையே

1)  2)  3) 

(02) மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

03. அடர்ந்த காட்டில் எப்பொழுதும் இருப்பவை
1) மரங்கள், மிருகங்கள் 2) விதிகள், மின்கம்பங்கள் 3) நீர்நிலை, இலைசருகுகள்

04. கடலில் நிதமும் இருப்பவை
1) கப்பல், உப்பு 2) மீன்கள், நீர் 3) அலை, மீனவர்

05. மார்ச் மாதம் 1ஆம் திகதி புதன்கிழமை எனின் மார்ச்மாதம் இறுதிநாள் என்னகிழமை?
1) வெள்ளிக்கிழமை 2) சனிக்கிழமை 3) புதன்கிழமை

06. நான் காலை வேளையில் கடற்கரை வழியே செல்லும் போது எனது இடது கைப்பக்கம் சூரியன் உதிப்பதை கண்டேன். நான் சென்ற திசை யாது?
1) மேற்கு 2) வடக்கு 3) தெற்கு

(03) பின்வரும் பாடலை வாசித்து 07ஆம், 08ஆம் வினாக்களுக்கு விடை தருக

கன்றை நினைத்தே உள்ளம்
கசியும் ☐ போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் ◯ வேண்டும்

07. ☐ என்ற குறியீடு இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய சொல் யாது?
1) மான் 2) பசுவை 3) புலியை

08. ◯ என்ற குறியீடு இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய சொல் யாது?
1) நினைக்க 2) பார்க்க 3) கேட்ட

09.

| | | | |
|---|---|---|---|
| ப | S | க | |
| A | அ | வ | J |
| | ம | K | |

கட்டத்தில் அதிகளவில் இருப்பது
1) தமிழ் எழுத்துக்கள்
2) ஆங்கில எழுத்துக்கள்
3) எழுத்துக்கள்

10. இடமிருந்து வலமாகவும் வலமிருந்து இடமாகவும் வாசிக்கும் போது ஒரே கருத்தை தரும் விடையை தெரிவு செய்க
1) குங்குமம் 2) விகடகவி 3) திருப்தி

11. கறுத்தப்பூனை சிறிய எலியை துரத்திப்பிடித்தது. இவ்வாக்கியத்தில் உள்ள செயற்படுபொருள் எது?
1) கறுத்தப்பூனை 2) எலியை 3) துரத்திப்

12.

உருவில் உள்ள தொழிலாளிக்கு தேவையான உபகரணம்
1) தூக்குக்குண்டு
2) சீவுளி
3) தனலிடுக்கி

13. பாரதி தமிழ் மகாவித்தியாலயம் 2012ஆம் ஆண்டு தனது பொன்விழாவை கொண்டாடியது எனின் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
1) 1952 2) 1962 3) 1945

14.

| | | |
|---|---|---|
| க | | தை |
| | யா | |
| கு | | ரை |

சொற்கூட்டத்தில் வெற்றுக்கூட்டில் இரண்டு எழுத்துக்களை எழுதுவதன் மூலம் மூன்று சொற்களை உருவாக்க முடியும். இவ்விரண்டு எழுத்துக்களையும் குறிக்கும் விடையை தெரிந்து கோடிடுக
1) பூ, தி
2) வி, சு
3) வி, தி

(03) 15 தொடக்கம் 21 வரையான வினாக்களில் புள்ளிக்கோட்டுக்குரிய சொல்லின் கீழ் கோடிடுக

15. சிங்கம் கர்ச்சிக்கும் என்பது போல நரி .............................................
1) குரைக்கும் 2) உறுமும் 3) ஊளையிடும்


16. கடலுக்கு மீன்கள் போல ஆகாயத்துக்கு .............................................
1) சூரியன் 2) பறவைகள் 3) விண்மீன்கள்

17. யானையின் ஆண் களிறு போல நண்டின் ஆண்.............................................
1) கடுவன் 2) அலவன் 3) ஓரி


18. 1kg பயறும், 1kg கடலையும் வாங்கத்தேவையான பணம் ரூபா 196எனின் 2kg பயறும், 2kg கடலையும் வாங்கத்தேவையான பணத்தொகை யாது?
1) 392.00 2) 369.00 3) 385.00

19. எனது வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும் ஆங்கிலம் பேசக்கூடியவர்கள் ஆரணி ஆங்கிலம் பேசக்கூடியவள் ஆகவே ஆரணி எமது வகுப்பு மாணவி என்பது?
1) சரியானது 2) பிழையானது 3) கூறமுடியாது

20. மகனின் வயதைப்போல் தந்தையின் வயது மூன்று மடங்காகும். மகனின் வயது 14 எனின் தந்தையின் வயது யாது?
1) 42வருடங்கள் 2) 37வருடங்கள் 3) 46வருடங்கள்


21.

இக்குறியீடு குறிப்பது
1) மீள்சுழற்சிக்கு உட்படக்கூடியது
2) கட்டாயசுற்றுவட்டம்
3) நொருங்கக்கூடியது

(04) நான்கு மாணவர்கள் பாடசாலைக்கு வருகைதந்த நேரங்களை நான்கு கடிகாரமுகங்கள் காட்டுகின்றன அதன் உதவியுடன் வினாக்களுக்குரிய விடையை தெரிக


மேரி பரிஹா இமானா நிரோஷா

22. பாடசாலைக்கு முதலில் வருகை தந்தவர் யார்?
1) இமானா 2) மேரி 3) பரிஹா

23. நிரோஷா வருகை தந்து எவ்வளவு நேரத்தின் பின்னர் இமானா பாடசாலைக்கு வந்தார்?
1) 25நிமிடங்களில் 2) 15நிமிடங்களில் 3) 20நிமிடங்களில்

24.

கடிகாரமுகம் காட்டும் நேரம் யாது?
1) 7மணி 55நிமிடம்
2) 8மணி 55நிமிடம்
3) 11மணி 40நிமிடம்

(05) பின்வரும் வினாக்களில் தடித்த எழுத்தில் காணப்படும் சொற்களின் பொருளைத்தரும் விடையை தெரிந்து அதன் கீழ் கீறிடுக

25. பெரியோர் கூறும் புத்திமதிகளை நாம் ஒருபோதும் உதாசீனம் செய்யக்கூடாது
1) அறிவுரை, அலட்சியம் 2) அனுபவம், தீமை 3) அறிவு, அகத்தம்

26. பழமை வாய்ந்த கட்டடங்கள் இடிபாடு அடைந்துள்ளன
1) புதுமை, சண்டை 2) புராதனம், உறுதி 3) தொன்மை, சிதைவு

27. அண்மையில் உள்ள துறைமுகத்தில் மாலுமி கப்பலை நங்கூரமிட்டார்
1) பக்கத்தில், பாகன் 2) தொலைவில், சாரதி 3) அருகில், மீகாமன்

(06) 28 - 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தொடக்கத்தில் தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள இரு சொற்களுக்குமிடையில் குறித்த தொடர்பு உண்டு. அதை ஒத்த தொடர்பினைக் கொண்ட சோடிச் சொற்களைத் தெரிவு செய்க.

28. ஏற்றுமதி : இறக்குமதி
(1) கருணை : இரக்கம் (2) உட்கொள்ளல் : உண்ணல்
(3) குடிவரவு : குடியகல்வு (4) படித்தல் : கற்றல்

29. கை : வளையல்
(1) சட்டை : காட்சட்டை (2) அடைப்பான் : போத்தல்
(3) மோதிரம் : விரல் (4) தலை : தொப்பி

30. கப்பலோட்டி : திசையறிகருவி
(1) காற்று : சுவாசம் (2) பெற்றோல் : கார்
(3) நுணுக்குக்காட்டி : விஞ்ஞானி (4) வானியலறிஞர் : தொலைகாட்டி

31. ஒரு பாத்தி வரிசையில் கத்தரி, வெண்டி, மிளகாய் எனும் செடிகள் ஒழுங்கு முறைப்படி நடப்பட்டுள்ளன. அவ்வரிசையில் 17 ஆவதாக இருக்கும் செடி யாது?
.............................................

32. என்னிடம் உள்ள பணம் ரூபாய் 75.00, தம்பியிடமுள்ள பணம் ரூபாய் 35.00 ஆகும். எங்களிருவரிடமுள்ள பணம் சமனாவதற்கு நான் தம்பிக்குக் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?
.............................................

33. வீதியோரத்தில் உள்ள இரு மின்கம்பங்களுக்கு இடையே 3 றோசாச் செடிகள் வீதம் நடப்பட்டுள்ளன. அவ்வீதியோரத்தில் ஏழு மின்கம்பங்கள் இருப்பின் எத்தனை றோசாச் செடிகள் நடப்பட்டிருக்கும்?
.............................................

34. கிராமமொன்றிலுள்ள துவிச்சக்கர வண்டிகளினதும், முச்சக்கரவண்டிகளினதும் மொத்த எண்ணிக்கை 10. அவற்றின் சில்லுகளின் மொத்த எண்ணிக்கை 27 ஆகும். எனவே அங்குள்ள
1. துவிச்சக்கர வண்டிகள் எத்தனை? .............................................
2. முச்சக்கர வண்டிகள் எத்தனை? .............................................

35. பண்ணையொன்றில் உள்ள கோழிகளினதும், ஆடுகளினதும் மொத்த எண்ணிக்கை 15 அவற்றின் கால்களின் எண்ணிக்கை 50 ஆகும்.
அங்குள்ள கோழிகள் எத்தனை? .............................................

# நாடாளுமன்றைக் கலைப்பதே மைத்திரி நாட்டுக்கு செய்யும் சேவை

## மேல்மாகாணசபை உறுப்பினர் லால்காந்த



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நாட்டுக்காக செய்யக் கூடிய ஒரே செயல் என்றால் நாடாளுமன்றத்தை கலைத்து, புதிய மக்கள் ஆதரவுக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதென மக்கள் விடுதலை முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

மாத்தறை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 08ஆம் திகதி மக்கள் வழங்கிய ஆதரவு தற்போதைய நாடாளுமன்றினால் இரத்து செய்யப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், தோல்வியுற்ற மகிந்த தரப்பு ஆகியன நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இருக்கும் தரப்பினர் மாத்திரம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தருமபுரத்தில் மரக்குற்றிகளுடன் சிக்கியது பாரவூர்தி



கிளிநொச்சி தருமபுரம் வீதியில் சுமார் 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான மரக்குற்றிகளுடன் தப்பித்துச் செல்ல முற்பட்ட பாரவூர்தியொன்றை கடந்த புதன்கிழமை மாலை கைப்பற்றியுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். பாரவூர்தி சாரதியும், அதன் உதவியாளரும் வாகனத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தருமபுரம் பகுதியில் வீதிப் போக்குவரத்துக் கடமையிலிருந்த பொலிஸார் பாரவூர்தியை மறித்து சோதனையிட முற்பட்டபோது, பாரவூர்தி நிற்காமல் சென்றுள்ளது. இதனையடுத்து, பாரவூர்தியைக் துரத்திச் சென்ற பொலிஸார் பரந்தன் - பூநகரி வீதியில் வைத்து பாரவூர்தியை மறித்தனர்.

பாரவூர்தியின் சாரதியும், உதவியாளரும் அதிலிருந்து இறங்கி தப்பி ஓடினர். முதிரை மரங்களுடன் பாரவூர்தியை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்ற பொலிஸார், வாகன உரிமையாளர் தொடர்பான விபரங்களை மோட்டார் திணைக்களத்தினூடாகப் பெற்றனர். தொடர்ந்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் கூறினர்.

## - ஐயன்கன் குளத்தில் -
# 361 குடும்பங்களுக்கு அடிப்படைவசதிகள் இல்லை

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள ஐயன்கன்குளம் கிராமத்தில் அடிப்படை தேவைகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாமையால் சுமார் 361 குடும்பங்களைச் சேர்ந்த 750 இற்கும் மேற்பட்டோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கிராமத்துக்கான பிரதான வீதி முதற்கொண்டு ஏனைய குடியிருப்பு வீதிகள் வரை எந்த வித புனரமைப்பு பணிகளுமின்றிக் காணப்படுகின்றன.

அத்துடன், போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையில் இக்கிராமங்கள் தமது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்வதிலும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனைவிட மருத்துவ வசதி, மேலதிக கல்வி வசதி என்பவற்றைப் பெறுவதிலும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இப்பகுதி மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்து வந்த போதும் தமது கோரிக்கைகள் எதனையும் உரிய அதிகாரிகள் செவிசாய்க்கவில்லை எனவும் தொடர்ந்தும் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

# புலம்பெயர்ந்தவர்களை நாடு திரும்புமாறு வெளிவிவகார அமைச்சர் அழைப்பு



புலம்பெயர் இலங்கையர்களை நாடு திரும்புமாறு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.


சமாதானம், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி நோக்கிய இலங்கையின் புதிய பயணத்தில் பங்குதாரர்களாகுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறுகிய நோக்கில் எந்தவொரு புலம்பெயர் சமூகமும் செயற்படக் கூடாது தமிழ் புலம்பெயர் சமூகம், சிங்கள புலம் பெயர் சமூகம் என்ற பிளவு இருப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

பல்வகைமையில் ஐக்கியத்தை பேண முயற்சிக்க வேண்டும்.

வெளிநாட்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவம் மற்றும் திறமைகள் நாட்டின் அபிவிருத்தியை மேலும் விருத்தியடையச் செய்யும் புத்திஜீவிகள் வெளிநாட்டில் தங்கியிருப்பதனை மாற்றியமைக்க வேண்டும் என்றார்.

# நாடாளுமன்றத்தின் எதிர்காலம் குறித்து கட்சித் தலைவர்களுடன் விசேட சந்திப்பு



நாடாளுமன்றத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலான கட்சித் தலைவர்களுடனான விஷேட கலந்துரையாடல் எதிர்வரும் 16ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்போது நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ள, நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த விவாதம் பற்றி அரசாங்க கட்சிகள் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என, எதிரக கட்சிகள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

இதேவேளை இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்த விவாதம் இடம்பெறும் வரை நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு உதவி வழங்காதிருக்க சில கட்சிகள் தீர்மானித்துள்ளதாக தினேஷ் குணவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

# அனுமதியின்றி மணல் ஏற்றிய 10 வாகனங்கள் கைப்பற்றல்

கிளிநொச்சி, இத்தாவில் சேரன்பற்றுப் பகுதியிலிருந்து அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற, மணலுடன் கூடிய 10 வாகனங்களை கடந்த புதன்கிழமை இரவு கைப்பற்றியுள்ளதாக பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு உழவு இயந்திரம், ஒரு பாரவூர்தி மற்றும் 8 டிப்பர் ரக வாகனங்களில் அனுமதிப்பத்திரமின்றி சேரன்பற்றுப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மணல் ஏற்றிச் செல்லப்பட்டபோது, பளைச் சந்தியில் வீதிக்கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் தொடர்ச்சியாக வந்த இந்த வாகனங்களை மறித்துச் சோதனை செய்ததில், அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டு, வாகன சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.

மணலுடன் கூடிய வாகனங்கள் பளைப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் கூறினர்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................


முகவரி :- ........................................


பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்





யாழ். வண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோவில் - 05ஆம் நாள் திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றபோது...

# சீனாவின் பின்னணியில் இந்தியாவில் செம்மரக் கடத்தல்

## 1300 தொன் செம்மரக் கட்டைகள் பதுக்கல்



இந்தியாவின் ஆந்திராவில் செம்மரம் கடத்தும் கும்பலைப் பிடிக்கும் பணியை பொலிஸார் தீவிரப் படுத்தியுள்ளனர். சமீபத்தில் டில்லியில் சீனாவைச் சேர்ந்த கடத்தற்காரன் பியான் என்பவன் பிடிபட்டான். அவரை சித்தூர் கொண்டு வந்து பொலிஸார் விசாரணை நடத்தினார்கள்.

அப்போது அவன் பல தகவல்களை பொலிஸாருக்கு தெரிவித்தான். தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, அரியானா, டில்லி பகுதிகளில் செம்மரக் கடத்தற்காரர்கள் 100 இற்கும் மேற்பட்டோர் உள்ளனர். பொலிஸ் பிடி இறுகியதை தொடர்ந்து அவர்கள் அனைவரும் டுபாய் மற்றும் ஹொங்கொங்குக்கு தப்பிச் சென்று விட்டனர்.

டுபாயில் 800 தொன் செம்மர கட்டைகளையும், ஹொங் கொங்கில் 500 தொன் செம்மரக் கட்டைகளையும் கடத்தற்காரர்கள் பதுக்கி வைத்துள்ளனர். செம்மரங்களை பதுக்கி வைப்பதற் காக பல நாடுகளில் விமான நிலையம் மற்றும் துறைமுகம் பகுதிகளில் கடத்தற்காரர்கள் குடோன்களை ஏற்பாடு செய் துள்ளனர்.

கடத்தப்படும் செம்மரக் கட்டைகள் மிகவும் குறைந்த விலைக்கு விற்கப்படுவதால் சீனாவைச் சேர்ந்தவர்கள் இந்தியாவுக்கு வந்தே செம்மர கட்டைகளை வாங்கிச் செல்கிறார்கள். கடத்தப்படும் செம்மரக் கட்டைகளை விற்பதற்காக ஆந்திரா மாநிலம் சித்தூர்,கடப்பா,கர்னூர், நெல்லூர்,அனந்தபுரம் மாவட்டங்களில் 100இற்கும் மேற்பட்ட ஏஜென்சிகள் செயற்படுகின்றன. இதில் 1000இற்கும் மேற்பட்டவர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# நேபாளத்தில் மழை 41 பேர் உயிரிழப்பு

நேபாளத்தின் வடகிழக்குப் பகுதியில் பெய்த தொடர் மழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 41 பேர் பலியாகி உள்ளனர். மேலும் 12 பேரைக் காணவில்லை.

இதுகுறித்து, தப்லெஜங் மாவட்ட தற்காலிக முதன்மை அதிகாரி சுரேந்திர பட்டாரியா கூறியதாவது:

தப்லெஜங் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்நிலையில் கடந்த புதன்கிழமை இரவு பொதுமக்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது, திடீரென ஏற்பட்ட நிலச்சரிவில் 6 கிராமங்கள் புதையுண்டன. இது குறித்து தகவல் அறிந்ததும் பொலிஸாரும் மீட்புப் படையினரும் அப்பகுதிக்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை 41 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 10 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கு வசதியாக ஹெலிகொப்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் 12 பேரை காணவில்லை. மேலும் பல வீடுகள் மண்ணில் புதையுண்டிருப்பதால் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மலைகள் அதிகம் நிறைந்த நேபாளத்தில் பருவமழைக் காலங்களில் நிலச்சரிவு ஏற்படுவது வழக்கமாக உள்ளது. இது தவிர, கடந்த ஏப்ரல் 25 மற்றும் மே 12 ஆகிய திகதிகளில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் சுமார் 9 ஆயிரம் பேர் பலியாயினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மோடியின் பேச்சுக்கு பாகிஸ்தான் கண்டனம்

டாக்கா பயணத்தின்போது பிரதமர் மோடி வெளியிட்ட கருத்து மற்றும் இந்திய தலைவர்களின் சிலரின் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் செனட் அவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அண்மையில் வங்கதேசம் சென்றிருந்த பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவில் தீவிரவாதத்தை பாகிஸ்தான் தூண்டிவிடுகிறது என்று குற்றம் சாட்டியிருந்தார். இந்த விவகாரம் தொடர்பாக பாகிஸ்தானின் செனட் அவையின் தலைவர் ராஜா ஜபாருலஹக் அவையில் தீர்மானம் கொண்டு வந்தார். இந்தியாவின் கொடூர முயற்சிகள் ஏற்கத்தக்கதல்ல. அதன் போர் வெறி மனோ நிலையை பாகிஸ்தான் நிராகரிக்கிறது என்று அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள தலைவர்கள் பாகிஸ்தானுக்கு எதிராக பேசி வருகின்றனர். பாகிஸ்தான் எல்லைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தவும் அஞ்சமாட்டோம் என்றெல்லாம் மிரட்டுகின்றனர் இதை ஏற்க முடியாது என்று தீர்மானம் தெரிவிக்கிறது.

பாகிஸ்தான் எல்லைக்குள் புகுந்து இந்தியா அத்துமீறுவதை எப்போதும் அனுமதிக்கமாட்டோம் என்பதை நாடாளுமன்றம் தெளிவுபடுத்துகிறது என்று தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மணிப்பூரில் இராணுவ வீரர்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குலுக்கு பதிலடி தரும் வகையில் மியன்மாருக்குள் புகுந்து வேட்டையாடியதை குறிப்பிட்டுப் பேசிய இந்திய செய்தி ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் ராஜ்யவர்தன் சிங ரதோல் பிற நாடுகளுக்கும் இது ஓர் எச்சரிக்கை என்று கூறி இருந் தா்ர். இது பாகிஸ்தானை மனதில் வைத்துசொல்லப்பட்டது என்று



பாகிஸ்தான் தரப்பு கருதுகிறது.

இந்நிலையில் யார் தாக்குதல் நடத்தினாலும் அதற்கு பதிலடிதர பாகிஸ்தான் இராணுவம் தயாராக உள்ளது என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. தீர்மானம் மீதான விவாதத்தை முடித்து பேசிய ஹக், இந்திய பிரதமரின் பேச்சு ஐ.நா. சபை சாசனத்துக்கு எதிரானது.

# ஊழல் வழக்கு ஆயுள் தண்டனை



ஊழல் வழக்கில் சிக்கிய சீனாவின் முன்னாள் பாதுகாப்பு தலைவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. சீனாவின் முன்னாள் அதிபர் ஹூஜிந்தோவுக்கு நெருககாமானவராக இருந்தவர் ஜோ யோகாங். இவர் மீது அதிகார துஸ்பிரயோகம், ஊழல் குற்றச்சாட்டு போன்றவை கூறப்பட்டன. இது குறித்த வழக்கு விசாரணை தியான்ஜின் நீதிமன்றத்தில் நடைபெற்றது. அப்போது தனது குற்றத்தை ஒப்புக் கொணடதையடுத்து அவருக்கு ஆயுள் தண்டனை அளித்து தீர்ப்பு அளிக்கப்பட்டது.

# கதிரியக்கத்தைப் பயன்படுத்தி தீவிரவாதிகள் துப்பாக்கி தயாரிப்பு

ஈராக் மற்றும் சிரியாவில் பல பகுதிகளை கைப்பற்றி தனிநாடு அமைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் ஆயுதங்களை பெருக்குவதே தங்களது அடுத்த நோக்கம் என தங்களது பத்திரிகையில் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் ஆஸ்திரேலிய வெளியுறவு மந்திரி ஜுலிபி‘ப் கடந்த வாரம் பெர்த் நகரில் நடந்த ஒரு விழாவில் கலந்து கொண்டு பேசினர்.

அப்போது ஈராக் மற்றும் சிரியாவில் பெரும் பகுதிகளை கைப்பற்றியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ. தீவிரவாதிகள் கதிரியக்கத்தை ஏற்படுத்தும் பொருட்களை பறிமுதல் செய்து தங்கள் வசம் வைதத்துள்ளனர். அவற்றை ஆஸ்பத்திரிகள் மற்றும் ஆராய்ச்சி கூடங்களில் இருந்து எடுத்துள்ளனர். அவற்றை வைத்து பேரழிவை உண்டாக்கும் அணு குண்டு தயாரிக்க முடியும்.

# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்தார் முன்னாள் குத்துச் சண்டை சம்பியன்



ஜேர்மனியை சேர்ந்த முன்னாள் கிக் பாக்ஸிங் சாம்பியன் ஒருவர் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் சேர்ந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஜேர்மனியின் பாவரியா பகுதியை சேர்ந்தவர் வால்டெட் காஸி. முன்னாள் கிக் பாக்ஸிங் சாம்பியனான இவர் ஐஎஸ் அமைப்பில் இணைந்துள்ளதாகவும் தற்போது துருக்கி எல்லையில் உள்ள யூப்ரேடஸ் நதியின் அருகில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தன்னிடம் ஆயுதம் இருப்பதாகவும் கடவுளின் ஆசிர்வாதத்தால் இதுவரை தனது ஆயுதங்களை பயன்படுத்தவில்லை என்றும் கூறியுள்ளார். இது தொடர்பாக காஸயின் முன்னாள் விளையாட்டு பயிற்சியாளர் கூறுகையில், காஸிக்கு இரண்டு வாழ்க்கை பக்கங்கள் இருந்தது.

நான் கிக் பாக்ஸர் காஸியை மட்டுமே பார்த்துள்ளேன். அவரது தனிப்பட்ட வாழ்க்கையை பற்றி எனக்கு தெரியாது. எனினும் அவர் மதத்தை பற்றி இதுவரை தங்களிடம் விவாதித்தது இல்லை என்று கூறியுள்ளார்.

ஐ.எஸ.ஐ.எஸ். அமைப்பில் சேர்ந்தாலும் காஸி சமூக வலைத்தளங்களை முன்பு போலவே சகஜமாக பயன்படுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது

உலகச் செய்திகள்

# போக்கோஹறம் தீவிரவாதிகளுக்கு எதிரான கூட்டம் அபுஜாவில்

தீவிரவாதக் குழுவான போக்கோ ஹராமை எதிர்த்துப் போராட கூட்டாக ஒரு உத்தியை கையாள வழி செய்யும் ஒரு கூட்டம் நைஜீரியத் தலைநகர் அபுஜாவில் நடைபெறுகிறது.

இஸ்லாமியத் தீவிரவாதக் குழுவான போக்கோ ஹராமை எதிர்த்துப் போராட கூட்டாக ஒரு உத்தியை கையாள வழி செயயும் ஒரு கூட்டம் நைஜீரியத் தலைநகர் அபுஜாவில் நடைபெறுகிறது.இந்தக் கூட்டத்தில் ஐந்து மேற்கு ஆப்ரிக்க நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கிறார்கள்.நைஜீரிய அதிபர் முஹமது புஹாரியின் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், நிஜேர், கேமரூண், சாட் மற்றும் பெனின் நாட்டின் அதிபர்கள் பங்கேற்கிறார்கள்.

பல நாடுகளில் செயல்பட்டு வரும் இந்த இஸ்லாமியத் தீவிரவாதக் குழுவினரை எதிர்த்து எப்படி கூட்டாக உத்திகளை வகுத்து அதை செயல்படுத்துவது என்பது குறித்து விவாதித்து இந்த தலைவர்கள் முடிவெடுக்கவுள்ளனர் என செய்தியாளர்கள் கூறுகிறார்கள்.அதுமட்டுமன்றி அந்தப் பிராந்தியத்தில் மோதல்களின் காரணமாக சீரழிந்துள்ள பொருளாதாரம் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை எப்படி முன்னேற்றுவது என்பது குறித்தும் அந்தத் தலைவர்கள் விவாதிக்கவுள்ளனர்

யுத்தக் குற்ற விசாரணை

# வலுவான உள்ளக பொறிமுறை வேண்டும்



இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கு தனியே உள்நாட்டுப் பொறிமுறையை அமைப்பது மட்டும் போதுமானதல்ல, அது விசாரணை செய்யவும், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கும் அதிகாரம் கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்று அமெரிக்க செனட்டர் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை நிலைவரம் குறித்து ஜனநாயகக் கட்சியின் மூத்த செனட்டரான, பற்றிக் லேஹி உரையாற்றினார்.

இதன் போதே அவர், உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை சுதந்திரமானதாகவும் நம்பகமானதாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியதுடன், மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்ட விவகாரத்தில் அரசாங்கத்தின் உள்நோக்கம் குறித்தும் சந்தேகம் எழுப்பியுள்ளார்.

புதிய அரசாங்கத்தின் பல்வேறு நடவடிக்கைகளை வரவேற்றுப் பேசிய செனட்டர் பற்றிக் லேஹி, இவையெல்லாம் முதற்படிகள்தான், இலங்கை அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் அதன் உள்நோக்கம் குறித்து கேள்வியை எழுப்புகின்றன.

உதாரணமாக மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் புதிய இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கைதிகள் சட்டத்துக்குப் புறம்பாக படுகொலை செய்யப்பட்டது, அரசபடைகளின் ஆட்லறி தாக்குதலில் எண்ணிக்கை தெரியாத பொதுமக்கள் கொல்லப்பட்டது உள்ளிட்ட பரந்தளவிலான மீறல்கள் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படும் இறுதிக் கட்டப் போரில் பங்கெடுத்த படைப்பிரிவுகளில் ஒன்றுக்குத் தலைமை தாங்கியவர்.

கடந்தகால குற்றங்களுக்கு தீர்வு காண்பதில் அரசாங்கம் தவிரமாக இருக்குமானால், மேஜர ஜெனரல் ஜகத் டயஸ் போன்ற மூத்த இராணுவ அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

மூத்த இராணுவத் தளபதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறினால், குறிப்பாக இன்னமும் சேவையில் உள்ள அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறினால், அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை மோசமாகப் பலவீனப்படுத்தும்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறுவதற்கு தனியே உள்நாட்டுப் பொறிமுறையை அமைப்பது மட்டும் போதுமானதாக இருக்க வாய்ப்பில்லை.

உண்மையைச் சொல்லும், நீதிச் செயல்முறை மட்டும் போதுமானதல்ல. அது நம்பகமானதாக சுதந்திரமானதாக இருக்க வேண்டும்.

அந்த சுதந்திரமான பொறிமுறை விசாரணை செய்யும், சட்டத்தின் முன் நிறுத்தும், போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு பொருத்தமான தண்டனைகளை வழங்கும் அதிகாரத்தைக் கொணடிருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சிறுவர் தொழிலாளர்கள்

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிப்பு

இலங்கையில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான சிறுவர் தொழிலாளர்கள் காணப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் நடாஷா பாலேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

தொழில் திணைக்களம் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதை முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதுதவிர பாடசாலை செல்லும் வயதிலுள்ள சிறுவர்களை பாடசாலைகளில் சேர்ப்பதற்கும், பாடசாலைகளை விட்டு விலகிய சிறுவர்களை தொடர்ந்தும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வதற்கும், நடவடிக்கை எடுத்து வருவதாக, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

சிறுவர்கள் தொழிலில் அமர்த்தப்படுவது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர குறிப்பிட்டார்.

சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக பெணகள் மற்றும் சிறுவர்கள் முறைப்பாட்டு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

தண்டனைச் சட்டக் கோவையின் பிரகாரம் 18 வயதிற்கு குறைந்தவர்கள் சிறுவராக கருதப்படுவதுடன், சிறுவர் மற்றும் இளையோர் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 16 வயதிற்கு குறைந்தவர்கள் சிறுவர்களாக கருதப்படுகின்றனர்.

# தடம்மாறி பயணிக்கும் ஜே.வி.பி. சோமவன்ச கண்டனம்

மக்கள் விடுதலை முன்னணி முடிவுக்கு வர வேண்டிய அமைப்பு ஆகிவிட்டது. ஏனெனில் அது இன்று தவறான அரசியல் இயக்கமாக மாறிவிட்டது. கடந்த ஜனவரி 9 ஆம் திகதி நாட்டில் சதி முயற்சி செய்ய முயன்றவர்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு அவ்விடயத்தில் கண்டும் காணாதது போன்று செயற்படுகின்றது என நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்த அக்கட்சியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

ஜே.வி.பி. இயக்கம் ஜனநாயகத்தையும் சமூக நீதியையும் கட்டிககாக்க உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இதற்காக ஒரு இலட்சம் போராளிகளை இழந்தோம். ஆனால் இப்போது இந்தக் கொள்கைகளை ஜே.வி.பி. கைவிட்டு விட்டது.

எனவே இந்த அமைப்பு இயற்கையாகவே இறக்க வேண்டிய அமைப்பு. ஜே.வி.பி. முன்னர் பெற்ற வெற்றிகளுக்கு சூத்திரதாரியாக விளங்கியவன் நானே. எனக்குப் பின்னர் அந்த அமைப்பை தந்திரோபாயங்களை வகுத்து முன்னேற்றக் கூடியவர்கள் இல்லை என்றார்.

# லண்டனில் நடந்தது என்ன?



## மங்கள தருகிறார் விளக்கம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீதான தடை, அரசியல் தீர்வு ஆகிய விடயங்கள் தொடர்பில் லண்டனில் பேச்சு நடத்தவில்லை என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கத்தையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்துவது தொடர்பாகவே புலம்பெயர் அமைப்புகளுடன் பேச்சு நடத்தப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

அண்மையில் லண்டனில் இடம்பெற்ற புலம்பெயர் அமைப்புகளுடனான சந்திப்பு தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சியினர் கேட்டுக்கொண்டிருந்தனர்.

இதற்கிணங்க நேற்று நண்பகல் ஒரு மணியளவில் கூடிய நாடாளுமன்றத்தில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர லண்டனில் இடம்பெற்ற சந்திப்பு குறித்து விளக்கமளித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குச் சென்று குடிபெயரும் மக்களே புலம்பெயர்ந்தோர் என அழைக்கப்படுகிறார்கள். ஆனால் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மீது தவறான அபிப்பிராயம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

புலம்பெயர் தமிழர்கள் பேய்களோ அல்லது கொம்பு முளைத்த மனித இனமல்லாத வேறு இனமோ இல்லை. அவர்கள் பயங்கரவாதிகளும் அல்லர். இலங்கையிலிருந்து சென்று புலம்பெயர்ந்து வாழும் மக்களின் எண்ணிக்கை ஒன்றரை மில்லியன் ஆகும்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள மக்கள் இலங்கையில் நல்லிணக்கத்தையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்த விரும்புகிறதோடு, அதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் தயாராகவிருப்பதாக லண்டன் சந்திப்பின்போது கூறப்பட்டது.

நல்லிணக்கத்தையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் தேசியப் பணியில் புலம்பெயர் சமூகத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின்போது அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பரிந்துரைகளை முன்னைய வெளிவிவகார அமைச்சு நடைமுறைப்படுத்த தவறியது. ஆகவே நாம் இப்போது அவற்றை நடைமுறைப்படுத்துகின்றோம்.

லண்டன் சந்திப்பில் பிரிக்கப்படாத இலங்கைக்குள் அரசியல் தீர்வு வழங்க வேண்டும் என புலம்பெயர் அமைப்புகள் கோரிக்கை விடுத்தன. அத்துடன் இந்தச் சந்திப்பில் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த நிலையில் குறித்த சந்திப்பு தொடர்பில் பல்வேறு வதந்திகள் பரப்பப்பட்டுள்ளமை கவலையளிக்கின்றது என்றார்.

## நீதிமன்ற...

உத்தரவிடப்பட்டது. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவன் உட்பட 14 பேருக்கும் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

## மாத்தறை...

அவர், அடுத்த பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்வோம் என்றும் கூறினார்.

மேலும் இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மகிந்த யாப்பா அபேவர்தன, பவித்ரா வன்னியாராச்சி, பந்துல குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, டளஸ் அழகப்பெரும உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

தென்மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள உறுப்பினர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

## மந்தகதியில்...

பட்டது எனவும், இந்த வாகனத்தின் இலக்கமும் தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயன்படுத்தும் வாகனத்தின் இலக்கமும் ஒன்றே எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் குறித்து சட்ட மா அதிபர் திணைக்களம் விசாரணை நடத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு நான்கு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் சட்ட மா அதிபர் திணைக்களம் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து இதுவரையில் அறிவிக்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## நாமலிடம்...

சிறிசேன கலந்துகொண்ட நிகழ்வொன்றில், நாமலின் பிரத்தியேக பாதுகாப்பு ஊழியர் துப்பாக்கியுடன் நடமாடியமை குறித்தே அவரிடம் விசாரணை செய்யப்பட்டுள்ளது.

## இரட்டை...

18 கட்சிகளின் சார்பில் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் ரவூப் ஹக்கீம்,

அண்மையில் அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட புதிய தேர்தல் திருத்தச் சட்ட நகல் மற்றும் அதில் அடங்கியுள்ள அம்சங்கள் குறித்தும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. புதிய வரைவை நாம் ஆராய்ந்த பொழுது, வாக்காளர்கள் இரண்டு வாக்குச்சீட்டுகளை பயன்படுத்துகின்ற உரிமை வழங்கப்பட்டாலே ஒழிய புதிய தேர்தல் முறையை நாங்கள் ஆதரிக்க முடியாது என்ற தீர்க்கமான தீர்மானத்திற்கு வந்துள்ளோம்.

அது பற்றி 18 சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும், சிறிய கட்சிகளும் ஓர் அறிக்கையை ஊடகங்களினூடாக விடுக்கிறோம். அமைச்சரவையில் இது பற்றி பேசுவதற்கு எங்களுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## தேர்தல்...

125 இடங்கள் தொகுதி அடிப்படையிலும், மிகுதி 100 இடங்களில் 75 இடங்கள் விகிதாசார அடிப்படையிலும் எஞ்சிய 25 இடங்கள் தேசியப் பட்டியலின் கீழான நியமனங்கள் மூலமும் நிரப்பப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் கடந்த திங்கட்கிழமை மாலை அமைச்சரவையில் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது.

அதனை சிறுபான்மைக் கட்சிகள் கடுமையாக எதிர்த்திருந்தன. இந்த நிலையில் இப்போது மீண்டும் 12 ஆசனங்கள் அதிகரிக்கப்பட்டு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## படை...

ஏற்பட்ட பிழையை விரைவில் திருத்திக் கொள்ள எதிர்பார்ப்பதாகவும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

## மாத்தறையில்...

பெற்ற நான்கு கூட்டங்களிலும் மகிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

# அரசியல் காரணங்களுக்காக எவரையும் கைது செய்ய வேண்டாம்

## பொலிஸ் மா அதிபர் கோரிக்கை

அரசியல் ரீதியான காரணங்களுக்காக எவரையும் கைது செய்ய வேண்டாம் என பொலிஸ் மா அதிபர், நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு மற்றும் குற்ற விசாரணைப் பிரிவிற்கு அறிவித்துள்ளார்.

மறு அறிவித்தல் விடுக்கும் வரையில் அரசியல் ரீதியான காரணிகளின் அடிப்படையில் எவரையும் கைது செய்ய வேண்டாம் எனக் கோரியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் முக்கிய பதவிகளை வகித்து வந்த அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் தம்மை கைது செய்வதனை தடுக்கும் நோக்கில் நீதிமன்றின் உதவியை நாடியுள்ளனர்.

எவ்வாறெனினும், பொலிஸ் மா அதிபரின் இந்த உத்தரவு காரணமாக சில முக்கியமான முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

என்ன காரணத்திற்காக நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு மற்றும் குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பாளர்களுக்கு பொலிஸ் மா அதிபர் இவ்வாறு உத்தரவிட்டார் என்பது தெளிவாகவில்லை.

எனினும், இது தொடர்பில் எழுத்து மூலமான உத்தரவுகள் எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினர் ஏற்கனவே பல பாரிய குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மலேசிய விமானத்திற்கு ஆபத்து

(கொழும்பு)

மலேசிய எயார் லைனுக்கு சொந்தமான பயணிகள் விமானம் ஒன்று, ஆவுஸ்ரேலியாவின் மெல்போன் விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.

இயந்திரத்தில் தீப்பற்றியமையே இதற்குக் காரணம் என வெளிநாட்டு ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன. 300 பயணிகளுடன் சென்ற குறித்த விமானம் நேற்று உள்ளூர் நேரப்படி பிற்பகல் 2.20 மணிக்கு மெல்போன் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டதாக, விமான நிலைய அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## தீ விபத்து

வெள்ளவத்தை புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 அளவில் 119 என்ற பொலிஸ் அவசர சேவை பிரிவிற்கு சம்பவம் தொடர்பான தகவல் கிடைக்கப்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# தேர்தல் முறைமை மீள் திருத்தம்

## முற்போக்கான முடிவு

(கொழும்பு)



125 தொகுதிகள் 75 மாவட்ட விகிதாசாரம் 25 தேசிய விகிதாசாரம் மொத்தம் 225 என்று இருந்த தேர்தல் முறை திருத்த கணக்கு இப்போது மாறி 145 தொகுதிகள் 55 மாவட்ட விகிதாசாரம் 37 தேசிய விகிதாசாரம் மொத்தம் 237 என அமைச்சரவையில் ஏற்றுக்கொள்ளபட்டுள்ளது.

அதாவது 125 ஆக இருந்த தொகுதிகள் 145 ஆக அதிகரிக்கப்பட்டு 20 தொகுதிகள் கூடியுள்ளன. இது எங்கள் உறுதியான விட்டுக் கொடுக்கா போராட்டத்துக்கு கிடைத்துள்ள முதற்கட்ட வெற்றி. மூன்று நாட்களுக்கு முன்னர் இருந்த நிலைமையை இது முற்போக்கான நிலைமை என்பது நிச்சயம்.

அடுத்த கட்டமாக நாடாளுமன்றத்தில் இந்த மசோதா கொண்டு வரப்படும்போது அவசியமானால் இன்னமும் தொகுதிகளை கூட்டுவோம். அதே வேளை இரட்டை வாக்கு முறைமை இன்னமும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இது தொடர்பான சிறு மற்றும் சிறுபான்மை கட்சிகளின் போராட்டம் தொட்ரும் என ஜ.ம.மு. மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது, நாட்டின் இன, அரசியல், பொருளாதார, சமூக பன்மைதன்மை யதார்த்தத்தை பிரதிபலிக்கும் முகமாக தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழு செயற்படவேண்டும் எனவும், ஒரு மாவட்டத்தில் வாழும் மக்கள் மத்தியில் பெரும்பான்மை இனத்தைவிட மாற்று இன, மத ரீதியான சிறுபான்மை மக்கள் வாழும் பட்சத்தில் அவர்களது பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்தும் முகமாக எல்லை நிர்ணய ஆணைக்குழு புதிய தொகுதிகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சரவை ஆவணம் உறுதிப் படுத்தியுள்ளது.

தென்னிலங்கையில் பெரும்பான்மை இனத்துடன் கலந்து வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் சார்பாக, இவற்றையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். தேர்தல் திருத்த செயற்பாடுகளில் தொடர்ச்சியாக அனைத்து தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மை கட்சிகளும் ஒன்றுபட்டு செயலாற்றிய காரணத்தாலேயே இந்த முதற்கட்ட வெற்றி கிடைத்துள்ளது என நான் நினைக்கின்றேன். முழு வெற்றி கிடைக்க நாம் தொடர்ந்தும் இலக்கை நோக்கி செயற்பட தயாராக உள்ளோம்.



யாழ்.மாவட்டச் செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பாடசாலை வாகனங்களுக்கான திடீர் தரக்கட்டுப்பாடு பரிசோதனை நேற்று யாழ்.பொது நூலகத்திற்கு அருகில் இடம்பெற்றபோது...

# புனர்வாழ்வு அதிகாரசபை கிழக்கில் நடமாடும் சேவை

(மட்டக்களப்பு)

புனர்வாழ்வு அதிகாரசபையின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான நடமாடும் சேவைகள் நேற்றுக்காலை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நடமாடும் சேவை இன்று காலை 8 மணிமுதல் பகல் 1 மணிவரை களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்திலும், பிற்பகல் 3 மணிக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் புணானையில் நடைபெறவுள்ளது.

நேற்றைய நிகழ்த்தில் புனர்வாழ்வு அதிகாரசபையின் தலைவர் என்.பத்மநாதன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர். நெடுஞ்செழியன், பிரதேச செயலர்கள், உதவிப்பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் யுத்த காலங்களில் வீடுகளை இழந்த, உயிரிழந்த, சொத்துக்கள், தொழில்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடு வழங்குதலில் உள்ள சிக்கல்கள், கோவைகள் சரிசெய்தல், தகவல்கள் சரிபார்த்தல் உள்ளிட்ட விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஊடக கருத்தரங்கு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்துள்ள 50ஆவது ஊடகக் கருத்தரங்கு இன்று மினுவாங்கொடை கல்லொளுவ அல்-அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மினுவாங்கொடை கல்வி வலயத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் பாடசாலை உயர் வகுப்பு மாணவர்கள் இதில் கலந்து கொள்வர். ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் மூத்த ஊடகவியலாளர்கள் வளவாளர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கை வந்துள்ள இந்திய எழுத்தாளரான ஆளூர் ஷா நவாசும் விசேட உரை நிகழ்த்தவுள்ளார் என அதிபர் எம்.எச்.எம். காமில் தெரிவித்தார்.

# வவுனியா அரச அதிபர் இடமாற்றம்; விவகாரம் ஜனாதிபதியின் கவனத்திற்கு

(கொழும்பு)

வவுனியா மாவட்ட அரச அதிபரை இடமாற்றம் செய்யுமாறு கோரி வடக்கு மாகாண சபையால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

10.06.2015 ஆம் திகதி வட மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தினால் ஒப்பமிடப்பட்டு அனுப்பப்பட்ட கடிதம் வருமாறு,

வவுனியா மாவட்ட அரச அதிபரை அந்த மாவட்டத்துக்கு வெளியே இடமாற்றம் செய்யுமாறு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டு தங்களுக்கு அனுப்பிவைத்த கடிதத்தின் பிரதியை 17.03.2015 ஆம் திகதிய வடக்கு மாகாண சபையின் அமர்வின்போது சமர்ப்பித்து, வவுனியா மாவட்ட அரச அதிபரை இடமாற்றம் செய்வதற்கு இந்தச் சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற முன்மொழிவு சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பொருத்தமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாத நிலையில் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் சகல உறுப்பினர்களும் 09.06.2015ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் அமர்வு ஆரம்பித்தவுடன் சபா மண்டபத்தில் நடுவே எமக்கு முன்பாக நின்று தமது ஆட்சேபத்தை வெளிப்படுத்தினர்.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்துடனும் தொடர்பு கொண்டு பொருத்தமான நடவடிக்கை எம்மால் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து தத்தமது ஆசனங்களுக்குத் திரும்பினர்.

ஜனாதிபதி அவர்களே, இது முழுமையான சிறப்புரிமை மீறல் மற்றும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை அவமதித்த செயல் சம்பந்தப்பட்டதாகும். இதில் இனரீதியான கோணம் எதுவுமில்லை. ஏனெனில் ஆட்சேபனை தெரிவித்தவர்கள் யாவரும் தமிழ், முஸ்லிம், சிங்கள இனங்களைச் சேர்ந்தவர்கள்.

ஆகையால் வவுனியா மாவட்ட அரச அதிபரை மிக விரைவில் அந்த மாவட்டத்துக்கு வெளியே இட்மாற்றம் செய்யுமாறு விநயமாக வேண்டுகிறோம் என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

# வீதி விபத்தில் மூவர் பலி

(கொழும்பு)

கேகாலை ரன்வலையில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தொன்றில் மூவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர்.

லொறியொன்றும், ரிப்பர் வண்டியொன்றும் நேருக்கு நேர் மோதியதிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# ஆயுர்வேத நிலையம் திறப்பு

(நெல்லியடி)

சிவன் ஆயுர்வேத மருத்துவ நிலையத்தின் நெல்லியடி கிளை இன்று 5 மணியளவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

நிலையத்தின் ஸ்தாபகர் கணேஸ் வேலாயுதத்தின் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் இந்தியத்தூதுவர் நடராஜன் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு திறந்துவைக்கவுள்ளார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யுன் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.